Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2010

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## பிரச்சனைகளை சமாளித்தல்

சமாதானம் • சாராள் மற்றும் ஆகார் • கடும் சோதனையில் கற்றுக்கொள்ளுதல்

இராஜாவாகிய சவுலின் பாவங்கள் • தெய்வீக வழிநடத்துதல்

குற்றங்கள் திருத்தப்படுதல் • எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்

இறுதியாக அனைவரும் ஒரே சிந்தையுடையவர்களாய் இருங்கள்

பிரச்சனைகளை சமாளித்தல்

# ஆதியிலே



ஜாதிகளுக்கு இடையிலும், நண்பர்கள் மற்றும் குடும்பங்களிலும் நடந்துள்ள அநேக பிரச்சனைக்குரிய சம்பவங்களை வேதாகமம் பதிவுசெய்துள்ளது. இந்நாளிலும், இதுபோன்ற பிரச்சனைகளை நாம் காணலாம். முரண்பாடான காரியங்கள் வரும்போது கடுமையான வார்த்தைகளை ஜனங்கள் பயன்படுத்தலாம். குற்றம் சாட்டப்படுதல் அநேக விதமான கொந்தளிப்புகளையும், உணர்ச்சிகரமான வேதனைகளையும் உருவாக்குகிறது. நாம் ஒரு பிரச்சனையை தவிர்க்க முயற்சிக்கும்போது மற்றொரு பிரச்சனை வெகு சீக்கிரத்தில் எழும்புகிறது. "சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்." (ஆமோஸ் 5:19) விசேஷமாக இந்த பிரதியில் நாம் பிரச்சனைகளை ஆராய்ந்து, மற்றவர்களிடம் நாம் ஒத்துபோகாத காரியங்களில், வேதாகமத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் வழிநடத்துதலை தேடுகிறோம்.

***சமாதானம்*** ஆவிக்குரிய விளக்கத்தை தேடுகிறது. மேலும், மலை பிரசங்கத்தில் இயேசு கடைசியாக குறிப்பிட்ட "சமாதானம் செய்பவர்களை" பற்றி ஆராய்கிறது. சத்தியகோட்பாட்டின் அடிப்படையில் நாம் சகோதரர்கள் மத்தியில் எவ்வாறாக சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்கு தேவையான வழியை காட்டுகிறது.

தீர்க்கப்படாத பிரச்சனைகள் நித்தியமாக ஏற்படுத்தும் பிரிவினையைப் பற்றி ***ஆகார் மற்றும் சாராள்*** என்ற கட்டுரை மிக தெளிவாக காட்டுகிறது. நாம் கிறிஸ்தவர்களாக பயிற்சி பெறுவதற்கு சில பிரச்சனைகள் நமக்கு உதவுகிறது. மேலும், நாம் தவறுகளை செய்யும் பட்சத்தில் நிதானமாக, முழுவிருப்பத்தோடு நம்மை நாம் திருத்திக்கொள்ளவேண்டும்.

யோசேப்பின் சரித்திரமும், அவருடைய சகோதரர்கள் அவர்மேல் கொண்டிருந்த பொறாமையும், இறுதியாக, இஸ்ரயேல் ஜனங்களுக்காக தேவன் வைத்திருந்த சித்தமும் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை ***கடும் சோதனையில் கற்றுக்கொள்ளுதல்*** என்ற தலைப்பு விவரிக்கிறது. உபத்திரவங்கள் நல்ல குணங்களை வளர்க்கும். நம்முடைய வாழ்க்கையை தேவன் நடத்துகிறார் என்று அறிந்திருக்கும் நாம், நம்மை துன்பப்படுத்துபவர்களை மன்னிக்கும் அளவுக்கு, நம்முடைய மனநிலையை பக்குவப்பட வேண்டும்.

சுயவிருப்பத்தினாலும், பெருமையினாலும் தேவனிடத்தில் கொண்டிருந்த நல்லுறவை சவுல் இழந்ததைக் குறித்து ***இராஜாவாகிய சவுலின் பாவங்கள்*** என்ற தலைப்பு விவரிக்கிறது. சவுல் தாவீதின் மேல் கொண்ட பொறாமையும், தன்னுடைய சொந்த குமாரனாகிய யோனத்தான் மேல் கொண்ட அவநம்பிக்கையும், தேவனுடைய கற்பனைகளை கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தை நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

சகோதரர்கள் மத்தியில் இருக்கும் குற்றங்களையும், பிரச்சனைகளையும் எவ்வாறு சரி செய்யவேண்டும் என்பதை மத்தேயு 18ம் அதிகாரத்தில் இயேசு கொடுத்த கட்டளைகளை, ***தெய்வீக வழிநடத்துதலும், குற்றங்கள் திருத்தப்படுதல்*** என்ற கட்டுரைகள் சற்று ஆழமான கண்ணோட்டத்தைக் காட்டுகிறது.

பிலிப்பு சபையில் ***எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்*** கருத்துவேறுபாடுள்ள இரண்டு சகோதரிகள். நாம் கண்ணுக்கு கண் சந்திக்காமலிருந்தாலும், ஒருமனபாட்டை காத்துக் கொள்வதற்கு, பவுலின் நிருபம் நமக்கு தெளிவான ஆலோசனையை கொடுக்கிறது.

இறுதியாக, மனத்தாழ்மையும், சாந்தத்தையும் நம்முடைய ஆண்டவர் இயல்பான, போராடுகிற குணத்தோடு எவ்வாறாக பயன்படுத்துகிறார் என்பதை ***அனைவரும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருங்கள்*** என்ற கட்டுரை ஆராய்கிறது.

ஒவ்வொரு பிரச்சனையும் சரியான முறையில் சமாளிக்கப்பட்டால் , நாம் நல்ல குணங்களில் வளர்ச்சியடைந்து புது சிருஷ்டிகளாக மாற நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று இந்த பிரதியின் ஒவ்வொரு கட்டுறையும் விவரிக்கிறது. பவுலின் எச்சரிப்பை நாம் சற்று நினைவில் கொள்ளலாம்- "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோம 12:18)

**ஜூலை-ஆகஸ்ட்**


**ஆதியிலே (பிரச்சனைகளை சமாளித்தல்) . . . . . .** 1

**சமாதானம் . . . . . . . . . .** 2
"சமாதானம் செய்பவர்கள் பாக்கியவான்கள்" என்பதே மகிமையை அடையும் குணலட்சணங்களில் படிவரிசையில் சிகரமாகும்.

**சாராள் மற்றும் ஆகார் . . . . . . . . . .** 6
இந்த இரண்டு ஸ்திரீகளுக்குள் இருந்த பிரச்சனை என்றுமே தீர்க்கப்படவில்லை.

**கடும் சோதனையில் கற்றுக்கொள்ளுதல் . . . . . . . . .** 9
யோசேப்பை போல், ஒவ்வொருவருடைய கிறிஸ்துவ வாழ்க்கையிலும் வரும் சோதனைகள் நல்ல குணங்களை வளர்க்கும்.

**இராஜாவாகிய சவுலின் பாவங்கள் . . . . . . . . . .** 12
ஒருவருடைய பாவங்கள் நல்ல உறவுகளை எவ்வாறாக துண்டிக்கிறது என்பதற்கு சவுல் நமக்கு ஒரு மாதிரியாக நிற்கிறார்.

**தெய்வீக வழிநடத்துதல் . . . . . . . . . .** 16
நம்முடைய ஆவிக்குரிய வீழ்ச்சியைத் தவிர்க்க, மத்தேயு 18ம் அதிகாரம் ஐந்து முக்கியமான எச்சரிப்புகளை கொண்டுள்ளது.

**குற்றங்கள் திருத்தப்படுதல் . . . . . . . . .** 19
சபைக்குள்ளாக வரும் கடுமையான பிரச்சனைகளை தீர்க்க மூன்று நிலைகள் மத்தேயு 18:15-18 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

**எயோதியாள் மற்றும் சிந்திகேயாள். . . . . . . . .** 23
நாம் அறிந்த இரண்டு ஸ்திரீகளை பற்றிய பாடம்

**இறுதியாக, அனைவரும் ஒரே சிந்தையுடைவர்களாய் இருங்கள். . . . . . . . .** 28
அன்பு என்னும் கோட்பாட்டின் கீழ் அடங்கக்கூடிய எந்த போராட்டமும் விரும்பக்கூடியதாகவே இருக்கிறது.



ஒவ்வொருவரோடும் ஒருமனப்படுதல்

# சமாதானம்

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.-மத் 5:9

**Carl Hagensick**

சமாதானம் ஒரு அரிதான காரியமாகவே காணப்படுகிறது. வேதாகமம் முழுவதிலும் சமாதானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. இயேசு சபைக்கு சொன்ன கடைசி வார்த்தைகள் -"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.." (யோவ 14:27) மேலும் "தீமையை விட்டு விலகி, நன்மை செய், சமாதானத்தை தேடி, அதைத் தொடர்ந்துகொள்." (சங் 34:14) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அநேக நிருபங்கள் - "உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்ற வார்த்தைகளோடு துவங்குகிறது.

அநேக பண்பாடுகளில் "சமாதானம்", வாழ்த்துச் செய்தியாக கூறப்படுகிறது. போலந்து நாட்டு மொழியில் "போக்கோஜ்" என்றும் ரோமானியர்கள் "பேஸ்" என்றும் யூதர்கள் "ஷாலோம்" என்றும், அரபு மொழியில் "சலாம்" என்றும் கூறுகிறார்கள். சகோதரர் ரசலின் "போட்டோடிராமா ஆப் கிரியேஷனுக்கு" வந்து, சமாதானத்தின் பிள்ளைகளாக மாறுவோம் என்று உறுதியளித்த அனைவருக்கும் துண்டு சீட்டுகளில் "பாக்ஸ்" என்ற வார்த்தையை தங்களுடைய மேல் சட்டைகளில் அணிந்துக்கொள்ள அவைகள் விநியோகிக்கப்பட்டது. இதைக்காட்டிலும் சமாதானத்திற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்த வாய்ப்பில்லை.

## சமாதானம் என்றால் என்ன?

பழைய ஏற்பாட்டில், சமாதானத்திற்கான எபிரெய வார்த்தை "ஷாலோம்". ஷாலோம் என்ற வார்த்தை பொதுவாக சமாதானம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வார்த்தைக்கு பதிலாக பயன்படுத்தப்படும் மற்றொரு வார்த்தையும் உள்ளது. "நீ உன் தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்தை முழுக்கற்களாலே கட்டி, அதின் மேல் உன் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளை...." (உபா 27:6) இந்த வசனத்தில் "முழு" என்ற வார்த்தை "'ஷாலோம்" என்ற எபிரெய பதத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆகவே சமாதானம் "முழுமை" என்ற பொருளையும் உடையதாக இருக்கிறது.

ஒரு கணவன் மனைவிக்கிடையில் வரும் வாக்குவாதம், பிரிவுகளை ஏற்படுத்தலாம். இக்கட்டான சூழ்நிலைகளில் விவாகரத்து மட்டுமே வழியாக இருப்பதில்லை. அவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் கொடுக்கப்படுகிறது. ஒன்று பகையோடு வாழ்வது, மற்றொன்று காரியங்களை பேசி பிரச்சனைகளை தீர்த்துக்கொள்வது. இரண்டாவதாக சொல்லப்படும் காரியம் ஞானமான முறை, ஆனால் தாமதிக்காமல் வெகு சீக்கிரத்தில் செய்யவேண்டும். ஆகவே பவுல் தன்னுடைய நிருபத்தில் - "..சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது.." (எபே 4:26) என்று எழுதினார்.

பொதுவாக, ஒரே வம்சவழியினர், விசேஷமாக தங்களுடைய இளமையில், பிரிவினைகள் உண்டாகும் அளவுக்கு அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டாலும், அவர்கள் வயது முதிர்ந்தபின் அவர்களுக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் தணிந்து, நெருங்கிய நண்பர்களாகிவிடுவார்கள். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளும், கருத்து வேறுபாடுகளும் சமாதானத்தை குலைத்து, ஒருமனப்பாட்டை சிதைத்து, பிரிவினைகளை ஏற்படுத்துகிறது. அவர்கள் மீண்டுமாக ஒன்று கூடி, அவர்களின் பிரச்சனைகளை பேசி தீர்க்கும்வரை குடும்பத்தினர்கள் சமாதானமின்றி, தொடர்ந்து வேதனையோடிருப்பார்கள்.

சமாதானம் அனைவராலும் விரும்பப்படக்கூடிய காரியமாக இருக்கிறது. ஆனால் அதற்கு விலையே இல்லை. சமாதானம் சில கோட்பாடுகளில் அடிப்படையில் இருக்கவேண்டும். பொதுவாக ஒருவருக்கொருவர் விட்டு கொடுக்கவேண்டிய சூழ்நிலை நேரிடும். இங்கு தான் பிரச்சனைகளும் துவங்குகிறது. ஏனெனில், ஒரு நபருடைய விருப்பம் மற்றவருடைய கோட்பாடாக இருக்கிறது. சமாதானத்தின் இலக்கு, ஒருமனப்பாடாக இருக்கிறது. அது ஒரேசீராக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இதை சகோதரர் ரசலும் வலியுறுத்தியிருக்கிறார். அங்குள்ள விருப்பம், கோட்பாடுகள், தேவையானது, தேவை இல்லாதது போன்ற காரியங்களை அறிந்து அதற்கேற்றவாறு சமாதானம் செய்வதே சமாதானம் செய்பவரின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

முக்கியமாக தேவைப்படுகிறவைகளையும், தேவைப்படாதவைகளையும் வேறுபடுத்தி காண்பிக்க சில பயனுள்ள கேள்விகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது -

1. இப்படிப்பட்ட கருத்துக்கள் வேத வசனங்களில் நேரடியாக கற்றுக்கொடுக்கப்படுகிறதா ? (வேத வசனங்கள் மற்றும் அவைகளில் விளக்கங்களின் கருத்துக்களுக்கு எதிராக இருக்குமேயானால் )

2. என்னுடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு எந்தவிதத்திலும் பாதிப்புகள் ஏற்படுத்துகிறதா ?

3. நான் பொதுவாக காணக்கூடிய தேவனுடைய திட்டத்தின் காட்சிக்கு பங்கம் ஏற்படுத்துகிறதா ?

இக்கேள்விகளுக்கான பதில் "இல்லை" என்றிருந்தால், அந்த பிரச்சனையை அவசியம் என்று எண்ணுவதை காட்டிலும் மிக விவரமாக பார்க்கவேண்டும்.

சமாதானமாக இருக்கும் சூழ்நிலையில், சாந்தமும், அமைதியாக இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஒரு போட்டியில் ஓவியர்கள்

சமாதானத்தை வரைந்து காட்டும்படிக்கு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அமைதியான பசுமை நிறைந்த வயல்களை பிரிந்த சாலையையும், தொலைவில் ஒரு அமைதியான வீட்டையும், அதன் அருகே சிவப்பு வண்ணம் தீட்டிய களஞ்சியத்தையும் வரைந்த நபருக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. சமாதானத்தின் உச்ச நிலையின் காட்சியாக இருந்தாலும், அது இரண்டாவது பரிசை பெற்றது. ஆனால் கற்பாறைகளின் மேல் கட்டுக்கடங்காமல் கொந்தளித்து பொங்கும் நீர் வீழ்ச்சியையும், அந்த நீர்வீழ்ச்சியின் உச்சியில் காய்ந்துபோன ஒரு மரம் தன்னுடைய முள்ளுள்ள கிளைகளை அதில் தொங்கவிட்டதையும், அந்த கிளையின் மேல் ஒரு அழகான பறவை இனிமையான பாடலை பாடிக்கொண்டிருப்பதை வரைந்தவருக்கு முதல் பரிசு கொடுக்கப்பட்டது. அங்கு அமர்ந்திருக்கும் பறவை சமாதானத்தோடிருந்தது. கிளை முறிந்தாலும், அதற்கு அழகான சிறகுகள் இருந்ததே. கொந்தளிக்கும் சூழ்நிலையின் மத்தியிலும் சமாதானம் உண்டாகும்.

## பேரானந்தம்

சமாதானம் செய்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள் (மத் 5 : 9) என்ற வாக்கியம் மலைபிரசங்கத்தில் சொல்லப்பட்ட உபதேசங்களில் பேரானந்தத்திற்குரிய ஒன்றாகும். மேலும் குணலட்சனங்களில் இது கடைசியாக சொல்லப்பட்டதாகும். இவைகள் வெறும் ஆலோசனைகள் அல்ல, இவைகள் அனைத்தும் கற்பனைகள். புதிய ஏற்பாட்டின் "பத்து கற்பனைகளாக" நாம் ஏற்றுகொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் கற்பனைகளைபோல எந்த விதமான எதிர்மறையான காரியங்கள் (இதை செய்யாதீர்கள்) இங்கு சொல்லப்படாமல், நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்கும் காரியங்களை செய்யும்படி கட்டளைகொடுக்கிறது.

இவைகள் ஒழுங்கீன்மையாக வரிசையில் கொடுக்கப்பட்ட கோட்பாடுகள் அல்ல. இவைகள் குறிப்பிட்ட வரிசையில், விசேஷித்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளை ஒரு மாடிபடிகட்டுகளுக்கு ஒப்பிடலாம். ஒரு படியில் ஏறுவதற்குமுன் அதற்குமுன்னிருக்கும் படியை ஏறவேண்டும். சொல்லபோனால் இவைகளை "மகிமைக்கு வழி நடத்தும் படிகள்" என்றும் அழைக்கலாம். ஒவ்வொரு படிகளை அதாவது குணங்களை வளர்த்துக்கொள்பவர்களுக்கு ஒரு வாக்குறுதியும் கொடுக்கப்பட்டுள்ளது.

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாதவர்கள் என்ற சிந்தையோடு ஒருவருடைய கிறிஸ்துவ வாழ்க்கை துவங்குகிறது. நமக்கு தேவனுடைய காரியங்கள் தேவை என்பதை உணர்ந்து அவரிடம் சேருகிறோம். நாம் தேவனுக்காக பணிபுரியும்போது, நம்முடைய திறமை குறைவுள்ளது என்ற எண்ணங்கள் நமக்குள் இருக்கவேண்டும், அப்பொழுது தேவனுடைய பலம் நமக்குள் செயல்படுவதை உணரலாம். இம்மாதிரியான மனநிலையில் இருப்போருக்கு "பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்று வாக்குறுதியளிக்கப்படுகிறது. ஆகவே பரலோக அழைப்புக்குள் நுழைய விரும்புவோருக்கு முதலாவது சிந்தையில் எளிமையான நிலை (ஆவியில் எளிமை) தேவைப்படுகிறது.

அடுத்து "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதல் அடைவார்கள்." இது மற்றவர்களுக்காக படும் துயரம் அல்ல. மாறாக, நம்முடைய தீய செயல்களுக்காக வருந்தி மன்னிப்பை பெற்றுக்கொள்வதற்காக படும் துயரமாகும். இப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக ஆறுதல் அடைவார்கள் என்று வாக்குறுதிகொடுக்கப்பட்டுள்ளது. அதாவது கிறிஸ்துவின் வழியாக பாவங்கள் மன்னிக்கப்பட்டதை, ஆறுதல் என்று இங்கு சொல்லப்படுகிறது.

மூன்றாவதாக, "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லப்படுகிறது. சாந்தகுணம் என்பது எப்போதும் எவ்வழியிலும் கற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கும் நிலையாகும். தன்னை ஒன்றுமில்லை என்று உணரும் கிறிஸ்தவன் தன்னை ஆண்டவருக்குள் வளர்த்துக்கொள்ள அநேக வழிகளை வாஞ்சையோடு தேடுவான். இவர்கள் பூமியை சுதந்தரித்து கொள்வார்கள் என்று வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் பள்ளியில் சேர்ந்து சமாதானம் செய்வதற்கும், மத்தியஸ்தர்கள் ஆவதற்கும் கற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, கற்றுக்கொள்வதற்கு முதலாவது அவர்கள் முன்வரவேண்டும். இந்த காரியங்கள் வெற்றிகரமாக அமைந்தால், கிறிஸ்துவோடுக்கூட இந்த முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதித்து, பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

நான்காவதாக, "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று வாசிக்கிறோம். அதாவது சத்தியத்தின் மேல் தாகமுள்ளவர்கள் என்று இங்கு சொல்லப்படவில்லை. சத்தியம் எவ்வளவு முக்கியமானதோ, அந்த அளவுக்கு சத்தியத்தை இலக்காக போதிக்கும் நீதியும் முக்கியம் வாய்ந்தது. "ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" (நீதி 4:7) என்று ஞானி சொல்லுகிறார். அறிவு அல்லது சத்தியத்தை செயல்படுத்தி நீதியை நடப்பிப்பதற்கு ஞானமே ஒரு கிறிஸ்தவனுக்கு அவசியமானது. ஒருவர் நீதியை வாஞ்சையோடு தேடினால் அது அவருக்கும் கொடுக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாவதாக, "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று சொல்லப்படுகிறது. நம்மைவிட சற்று குறைவான ஆவிக்குரிய வளர்ச்சியில் இருப்போரை கண்டு இழிவாக எண்ணுவது மாம்ச சிந்தையாகும். ஆனால் அதிகமான கிருபையைப் பெற்று குறைவான வளர்ச்சியில் இருப்போரை கண்ணோக்குவது கிறிஸ்தவர்களுக்கு மிக அவசியம். குறைவான வளர்ச்சியைக் காட்டுபவர்கள் தங்களுடைய குறைகளை காணாத குருடராக இருக்கிறார்கள். பார்வையற்றோரை பார்த்து அவரால் பார்க்கமுடியவில்லை என்று நாம் குற்றம் சுமத்தாமல் அவர்மேல் இரக்கம் காட்டுகிறோம். அதேபோல, தங்களுடைய தவறுகளை உணராதவர்களை நாம் குற்றம் சாட்டாமல், அவர்களுக்கு உதவுகிறதற்கு வழிதேட வேண்டும். இப்படிப்பட்ட

இரக்கத்தை காட்டுபவர்கள் தேவனிடமிருந்து இரக்கம் பெறுவார்கள்.

ஆறாவதாக, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." இருதயத்தின் சுத்தம் - நம்முடைய இலக்குகள் அல்லது நோக்கங்களோடு சம்மந்தப்பட்டிருக்கிறது. மற்றவர்களை விட நாம் மேன்மையானவர்கள் என்பதற்காகவா அல்லது நன்மையான காரியங்களை செய்யவேண்டும் என்பதற்காக நாம் நீதியை நடப்பிக்க கடுமையாக முயற்சிக்கிறோமா ? "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் ..." (யாக் 3:17) என்று யாக்கோபு எழுதுகிறார். ஒருவருடைய நோக்கங்கள் பரிசுத்தமுள்ளதாக இருந்தால் அவர் நிச்சயமாக தேவனை தரிசிப்பார் என்று வாக்களிக்கப்படுகிறது.

ஏழாவதாக, "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்." மகிமையை அடையும் படிகளில் இதுவே இறுதியான, உச்ச படியாகும். நம்முடைய ஆண்டவர் இதனை தலைசிறந்த சாதனையாக காண்கிறார். இதற்காகவே நாம் கிறிஸ்துவின் பள்ளியில் மாணவர்களாக சேர்ந்தோம். நாம் மத்தியஸ்தர்களாக இருக்க விரும்புகிறோம். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானத்தை கொண்டுவரும் வேலையில் ஈடுபடுவோரை மத்தியஸ்தர் என்று அழைக்கிறோம். இதை "அட்டோன்மென்ட்" (“at-one-ment” )என்று மிக அழகாக ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. இதற்கு பதிலாக பயன்படுத்தப்படும் மற்றொரு வார்த்தை "ஷாலோம்".

முதலில் ஒரு ஆசிரியர், மாணவராக பயிற்சிக்குள் பிரவேசிக்கவேண்டும். ஒரு மருத்துவர் அதற்கான பயிற்சிக்குள் பிரவேசிக்கவேண்டும். அதேபோல ஒரு மத்தியஸ்தர் முதலில் சமாதானம் செய்வதற்கு பழகி, அதை செயலாற்றவேண்டும். இறுதியில், இவர்கள் தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுவதற்கு வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் தேவனை தரிசிப்பது மட்டும் அல்ல, அவருடைய புத்திரர்களாகவும் இருப்பார்கள். (ரோ 8:16,14)

மேலும், இரண்டு கற்பனைகள் கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் அவைகள் முன்பு சொல்லப்பட்டது போல அல்ல. முதலில் சொல்லப்பட்ட ஏழு காரியங்கள் நாம் செய்யவேண்டியவைகள். ஆனால் கடைசியாக சொல்லப்பட்ட இரண்டு காரியங்கள் நமக்கு செய்யப்படுகிறவைகளாக இருக்கிறது. முதலில் சொல்லப்பட்ட ஏழு குணங்கள் நமக்குள் உறுதிப்படுவதற்காக இவைகள் நமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பொறி பறக்கும் சோதனைகள். "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத் 5:10) என்று முதலில் சொல்லப்படுகிறது. இது "நீதியினிமித்தம்" படக்கூடிய உபத்திரவங்களாக இருக்கிறது. ஏனெனில், இருள் வெளிச்சத்தை வெறுக்கும். அநீதியுள்ளவர்கள் நீதியுள்ளவர்களின் செயலின் நிமித்தம் குற்றம் சாட்டப்பட்டவர்களாக உணருகிறார்கள்.

அடுத்து, "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." என்று சொல்லப்படுகிறது. இது நீதியினிமித்தமாக அல்ல மாறாக, "என்னிமித்தம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பலி செலுத்தக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு இது பாவ நிவர்த்தியின் ஒரு பகுதியாக இருக்கிறது.

## சமாதானம் செய்கிறவர்களுக்கு வழிகாட்டும் நெறிகள்

அப்போஸ்தலனாகிய பவுல் சமாதானம் செய்பவராக இருந்தார். புறஜாதிகள் கிறிஸ்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தேவையான காரியங்களை குறித்து ஆலோசிப்பதற்கு எருசலேமில் அனைவரும் கூடியிருந்தபோது -"விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்க...." (அப் 15:20) வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும், எப்படிப்பட்ட உணவுகளை உட்கொண்டாலும் அது தவறில்லை என்று பவுல் கூடுமான மட்டும் வாதாடினார். (1கொரி 10 :18-33) பவுல் சமாதானத்திற்காக தன்னுடைய விருப்பத்தை அங்கு விட்டுக்கொடுத்தார். சகோதரர்கள் மத்தியில் வளர்ந்துவரும் பிளவை குணமாக்க முயற்சித்தார். அவர்களை ஒருநிலைப்படுத்த விரும்பினார். "ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையும்..... நாடக்கடவோம். " (ரோம 14:19) சமாதானம் உண்டாகுவதற்கு நாம் எதை நாடவேண்டும் ?

**பொறுமை.** ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணுமுன் நாம் மிக பொறுமையோடு இருக்கவேண்டும். ஒரு பிரச்சனை உருவாகிவிட்டது என்று நாம் கருதினால், அந்த பிரச்சனை முடிவடைவதற்கு எதை செய்யவேண்டும் என்பதை அறிந்துசெயல்பட்டால் அது உடனே முடிவுக்கு வந்துவிடும்.

**கேட்கிற காது.** "காரியத்தைக் கேட்குமுன் உத்தரவு சொல்லுகிறவனுக்கு, அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்." (நீதி 18 :13) முதலில் இரண்டு தரப்பில் உள்ள வாதங்களையும் பொறுமையோடு கேட்கவேண்டும். அதற்குபின், பேசினவர்களின் வார்த்தைகளை சரியான முறையில் விவரித்து சொல்லி, கூடுமான வரைக்கும் அவர்களுக்கு புரியவைக்க முயற்சிக்கவேண்டும்.

**அமைதியான குரல்.** வாக்குவாதங்கள் உணர்ச்சிகளை தூண்டிவிடும்போது, அவர்களின் குரல் அதிகமாக எழும்பக்கூடாது. மெதுவான பேச்சுக்கள் தீவிரமான வாக்குவாதங்களை சற்று மட்டுப்படுத்தும். அந்த சூழ்நிலையில் பரிசுத்த ஆவி என்னும் தண்ணீரை அவர்கள் மேல் ஊற்றுவதே சமாதானம் செய்கிறவர்களின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். மாறாக, கொந்தளிக்கும் தண்ணீரை ஊற்றி உணர்ச்சிகளை தூண்டிவிடக்கூடாது.

**பரிவு அல்லது இரக்ககுணம்.** இருதரத்தினரும் தங்களுடைய நிலை சரியானது என்று நம்பி உறுதியோடு நிற்கிறார்கள். இவர்களின் வாக்குவாதங்களினால் என்றுமே சமாதானம் உண்டாகாது. மாறாக, இருவரும் மற்றவரின் தரப்பில் உள்ள நியாயமான காரியங்களை சீர்த்தூக்கி பார்த்து அதை மதிக்கவேண்டும்.

நமக்குள் உறுதியான வித்தியாசங்கள் அல்லது வேறுபாடுகள் இருக்கும் பட்சத்தில், சமாதானத்தை நாடுவதற்கு சில வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. **நோக்கத்தை ஆராய்தல்.** நாம் உண்மையாக சமாதானத்தை விரும்புகிறோமா ? அல்லது மற்றவரின் தவறை சுட்டிக் காட்டுவதற்காக நம்முடைய தரப்பில் நியாயம் இருப்பதை நிரூபிக்க வாதாடுகிறோமா ? இந்த காரியம் தேவையானதா அல்லது தேவையற்றதா என்ற அடிப்படையில் நாம் ஆராயவேண்டும். இங்கு நாமும் ஒத்துக்கொள்ளாமல் போகலாம். ஏனெனில், நம்முடைய தரப்பில் சொல்லக்கூடிய காரியம் முக்கியம் என்று நாம் எண்ணலாம். ஆகவே நாம் சமாதானத்தை தேடுபவர்களாக இருந்தால், முரண்பாடான கருத்துள்ளவரை நன்கு புரிந்துக்கொண்டு அதன் மூலமாக சமாதானத்தை கொண்டுவர முயற்சிக்கவேண்டும்.

2. **தெய்வீக உதவி நாடுதல்**. பிரச்சனையை சந்திக்கும் இருதரப்பினரும் ஜெபத்தின் மூலம் தேவனுடைய வழிநடத்தலை நாடுவது மிக அவசியம். உண்மையில், கருத்துவேறுபாடுகளை கலந்தாலோசிப்பதற்கு ஜெபத்தோடு சம்பாஷனைகளை துவங்குவது மிக நல்லது.

3.**அமைதியை காத்தல்.** சில காரியங்களில் நம்முடைய உணர்ச்சிகள் உறுதியாக இருக்கலாம். ஆனால் நம்முடைய உயர்த்தப்பட்ட குரல் வெற்றியுள்ள முடிவை வருவிக்காது.

4.**கவனித்தல்.** அநேக முறை நாம் மற்றவர்களின் நிலையை தவறாக புரிந்துகொள்கிறோம். மற்றவர்கள் நம்முடைய வழிக்கு கொண்டுவருவதை நோக்கமாக வைத்து அதிகமாக சம்பாஷிப்பது தவறு. மற்றவர்கள் பேசும்போது அதை தடுத்து நிறுத்த வழி தேடாமல், அவர்கள் பேசுவதை கூர்ந்து கவனிப்பதற்கு காலம் தரவேண்டும்.

5.**பொதுவான மொழியில் உரையாடல்.** இருத்தரப்பினரும் ஒரேவிதமான அர்த்தங்களை கொண்ட வார்த்தைகளை பயன்படுத்துவதில் கவனம் வைக்கவேண்டும். ஏனெனில், "சீர்பொருந்துதல்" என்ற ஒரே வார்த்தையை ஒருவர் "உயிர்த்தெழுதல்" என்றும் மற்றொருவர் "அழித்தலை" பற்றியும் பேசலாம். அதாவது இராஜ்யத்தின் அழிவுக்குரிய காரியங்கள் அல்லது கட்டக்கூடிய காரியங்களைக் குறித்தும் பேசலாம். அநேக காரியங்களில் உண்மையான வார்த்தைகளை காட்டிலும் சொல்லர்த்தங்களில் அதிகமாக வித்தியாசங்கள் காணப்படுகிறது.

6. **பொதுவான கருத்தை தேடுதல்.** வார்த்தைகளை காட்டிலும் பொருளே முக்கியமானது என்ற கருத்தை நினைவில் கொண்டவர்களாக, இருத்தரப்பினரும் ஒத்துக்கொள்ளக்கூடியவைகளை முன்வைக்க வழிகளைத் தேடவேண்டும்.

7. **மற்றவர்களுடைய வாதத்தில் உள்ள சட்டப்பூர்வமான ஆதாரங்களை ஒத்துக்கொள்ளுதல்.** நம்முடைய இலக்கு சத்தியத்தை அடைவதற்காகவே இருக்கவேண்டுமே தவிர நம்முடைய நிலையை மெய்ப்பிப்பதற்காக இருக்கக்கூடாது. பூர்த்தியான சத்தியம் பெற்றவர் ஒருவருமில்லை. ஒருவர் சற்று மேலான விளக்கங்களை கொடுத்தால், நாம் இந்த வாதத்தில் தோல்வி அடைந்துவிட்டோம் என்ற எண்ணங்களையும் கொள்ளாமல், தாழ்மையோடு உண்மைகளை ஒத்துக்கொள்ளவேண்டும்.

8. **வேதாகமத்தை பயன்படுத்தல்.** குறிப்புகளை நிரூபிக்க, வேதமாணவர்கள் பாஸ்டர் ரசலை சுட்டிக்காட்டுவது சில இடங்கில் வழக்கமாக உள்ளது. 1911ம் வருடம், மூப்பர்கள், கன்காணிகள் மற்றும் வேதாகமத்தை ஒவ்வொரு ஊராக சென்று பிரசங்கிக்கும் யாத்திரிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனை - "பாஸ்டர் ரசலைப் பற்றி அதிக பட்சமான பிரசங்கமும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவைப் பற்றி குறைந்த அளவு பிரசங்கங்களும் காணப்படுகிறது" என்று கூறியுள்ளார். இறுதியாக, நம்முடைய வேதாகமம் எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரத்தைப் பெற்றிருப்பதால் நம்முடைய வாதங்கள் அதன் அடிப்படையில் இருக்கவேண்டும்.

9. **காலம் தாழ்த்துதல்.** சத்தியம் மிக முக்கியமானதாக இருப்பதால், அங்கு ஏற்படும் வித்தியாசங்கள் அபாயகரமாக தோன்றும். ஆயினும், நம்முடைய தரப்பிலிருக்கும் காரியங்களை கருத்தூன்றி கவனித்தவர்கள் உடனடியாக நம்முடைய சார்பில் உள்ள நியாயத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. நாம் விசுவாசத்திற்காக போராடவேண்டும் (யூதா 3) மாறாக, நாம் சண்டையிடக்கூடாது.

10. **பிரச்சனையை தீர்த்தல்.** நாம் பிரச்சனைகளை கலந்து ஆலோசித்தபின் ஒரு முடிவுக்கு வர இயலாத பட்சத்தில், மற்றவர்கள் தரப்பிலிருக்கும் நிலையின் காரணத்தையாவது சரியாக புரிந்துக்கொண்டு, சமாதானமாக இருக்கவேண்டும்.

## ஒருமைப்பாட்டில் வாழ்தல்

பொதுவாக பாஸ்கா பண்டிகையின் போது கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு செல்லும் யாத்திரிகர்கள், பாடுவதற்காக 120 முதல் 134ம் சங்கீதங்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். பரிசுத்த நகரத்திற்கு முன்னதாக இருக்கும் கடைசி மலையை சேர்ந்தபோது, கடைசி சங்கீதத்திற்கு முன்னதாக இருக்கும் சங்கீதம் பாடப்பட்டது. கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் யாத்திரிகர்கள் வருவதை கண்ட அனைவரும் ஒருமித்து பாடினார்கள் - "இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது ?." (சங் 133:1)

நாமும் இந்த சங்கீதத்தை ஒருமனப்பாட்டோடு பாடுவோம். "ஷாலோமாக" நாம் மாறுவதற்கு, ஒருவருக்கொருவர் ஒருமித்து சிந்திக்க முயற்சிப்போம் - முழுமையான சமாதானத்தை கண்டடைவோம்.

தீர்க்கப்படாத பிரச்சனை

# ஆகார் மற்றும் சாராள்



கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள் நற்சீர்பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார். 11 கொரிந்தியர் 13:11

**Larry McClellan**

சாராள் மற்றும் ஆகாருக்கு, அவர்களின் பிள்ளைகளால் வந்த பிரச்சனைகளை ஆதியாகமம் 21ம் அதிகாரம் விவரிக்கிறது. ஆகார் எந்த சூழ்நிலையில் கருத்தரிக்கப்பட்டாள் என்பதை சாராள் முதலில் சுட்டிக்காட்டினாலும், காலபோக்கில் சாராளும் ஒரு குமாரனைப் பெற்றாள், அந்த சூழ்நிலை அவள் மனதை மாற்றியது. சாராளுக்குள் வந்த பொறாமையும், ஆபிரகாமுக்கு வாரிசாக வரும் பிள்ளை யார், என்ற கேள்வியும், அந்த அடிமைப்பெண்ணை விரட்டத் துாண்டியது. "ஆபிரகாமை நோக்கி - இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும். இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்றாள்."(ஆதி 21:10) ஆகாரையும், இஸ்மயேலையும் வனாந்தரத்திற்கு அனுப்பிவிட்டு அந்த பிரச்சனைக்கு தீர்வு காணும்படியாக தேவன் ஆபிராகமிடம் கூறினார். ஆனால் தேவன் அவர்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அரபு தேசமாகிய பெரிய ஜாதியை அவர் இஸ்மயேலின் மூலம் உருவாக்கினார்.

இந்த இரண்டு ஸ்திரீகளும் இரண்டு ஏற்பாடுகள் என்று பவுலின் நிரூபம் நமக்கு குறிப்பிடுகிறது. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை அடிமையான ஆகாரையும், கிருபையின் பிரமாணம் சாராளையும் அடையாளப்படுத்துகிறது என்று வாசிக்கிறோம். (கலா 4:22-31) நியாயப்பிரமாணத்தினால் வளர்ச்சியடைந்தவர்கள் யூத ஜனங்ளும், சாராளின் குணாதிசயங்களின் வளர்ச்சியடைந்த "ஈசாக்கின் வகுப்பினர்" ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுமாக இருக்கிறார்கள் என்று பவுலின் சம்பாஷனைகள் காட்டுகிறது. (வசனம் 28) அப்போஸ்தலர்களின் நாள் துவங்கி இந்நாள் வரைக்கும் நியாயப்பிரமாணத்தின் கீழிருக்கும் யூதர்களுக்கும், கிருபையின் பிரமாணத்தின் கீழிருக்கும் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கும் பிரச்சனைகள் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஆபிரகாமின் வாக்குத்தத்தங்கள் தங்களுடையது என்று அநேக யூதர்கள் கோருகிறார்கள். ஆகாரைப் போல அவர்களும் புறஜாதி கிறிஸ்தவர்களை கேலிச்செய்கிறார்கள். அதேபோல சுவிசேஷ யுகம் முழுவதிலும் கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக்கொண்ட அநேகர், யூதர்களை நாடுகடத்தி, தேவனுடைய வாக்குத்தத்தங்களிலிருந்து அவர்களை பங்காளிகளாக இராதபடிக்கு கொடூரமாக துன்பப்படுத்தினார்கள்.

சாராள் மற்றும் ஆகாருக்குள் இருந்த பிரச்சனைகளை குறித்து வேதாகமம் குறைவாகவே குறிப்பிட்டுள்ளது. ஒரு பக்கத்தில் பொறாமை, மற்றொரு பக்கத்தில் கேலிசெய்தல் போன்ற காரியங்கள் கூடுமான அளவு மிகுந்த கசப்பை இருவருக்கும் ஏற்படுத்தியிருக்கும். இந்த பிரச்சனைகளை ஆபிரகாமினாலும் தீர்க்க முடியவில்லை. ஆகாரும் அவளுடைய குமாரனும், அவர்களை விட்டு பிரிந்துபோகும் படி சாராள் செய்த வேண்டுதலை தேவன் அனுமதித்தார். (ஆதி 21:12) ஆனால், ஆகாரை மீட்டு, இஸ்மயேலை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குறுதியும் அளித்தார். ஆயினும், ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட சுருக்கமான சம்பாஷனைகளில், நம்முடைய சொந்த பிரச்சனைகளை சமாளிக்க தேவையான பாடங்கள் உள்ளது.

## பிரச்சனைகளுக்கான காரணங்கள்

விழுந்துபோன மனுக்குலத்தில், பிரச்சனைகள் பாரம்பரியமானது. அது குறைவாகவும் இருக்கலாம், அதிகமாகவும் இருக்கலாம். சாராள் மற்றும் ஆகாரின் பிரச்சனையைப் போல பொறாமை, சுயநலம், பெருமை, ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நம்பிக்கைகள் பிரச்சனைகளுக்கு காரணமாக அமையலாம். அவர்கள் இருவரும் தங்களுடைய பிள்ளைகளை பெற்றபின் பிரச்சனைகளை உருவாக்குவதில் அதிகமான நேரத்தை செலவழித்தார்கள். நாமும் அப்படியே இருக்கிறோம். நம்முடைய குடும்பத்தினரோடும், சகோதரர்களோடும் அதிகமான நேரங்களை செலவழிக்கும்போது பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டாகும். கணவன், மனைவி, குழந்தைகள், அயலகத்தார், சபை அங்கத்தினர் அல்லது நம்மோடு வேலை செய்பவர்கள் போன்றவர்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை திருப்திகரமாக தீர்ப்பதற்கான குணம் மிகவும் முக்கியமானதாகும். அநேகர் இதற்காக எந்த பயிற்சிகளையும் பெற்றதில்லை. அல்லது வாழ்க்கையில் மிக பெரிய பிரச்சனைகளை சமாளிப்பதற்கு மனதில்லாதவர்களாக அவைகளை தவிர்க்க முயற்சிப்பார்கள். கடந்த காலத்தில் பிரச்சனைகளை தீர்க்க முயலும்போது, அவர்கள் சந்தித்த தோல்விகள், இப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட துயரங்களின் காரணமாக இருக்கலாம். ஆயினும், சாராள், ஆகார் விஷயத்தில் அவர்களின் பிரச்சனையை தீர்ப்பதில் காலம் கடத்தியதால், வேதனைகளும், உபத்திரவங்களும் தொடர்ந்து அவர்களை வாட்டிக்கொண்டே இருந்திருக்கும். ஆகவே அநேக காரியங்களில், நிரந்தரமான பிரிவுகளை தவிர்க்க கூடுமான மட்டும் நாம் பிரச்சனைகளை தீர்க்கக் கடுமையாக முயற்சிக்கவேண்டும்.

நம்முடைய தேவன் அனைத்து வாழ்க்கை பாதையில் வாழும் ஜனங்களை அழைத்திருக்கிறார் என்பதை புரிந்துக்கொள்வது மிக அவசியம். ஏனெனில், விழுந்துபோன நிலையில், ஒவ்வொருவருக்கும் அநேக குறைபாடுகள் இருக்கலாம். மற்றவர்கள் கண்டுப்பிடியாத அளவுக்கு அநேகர் மனநிலைபாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தனிப்பட்ட நபர்களின் பிரச்சனைகளை தீர்க்கவும், சகோதரரின் போராட்டங்களுக்கும், தேவ ஜனங்களில் அநேகருக்கு எந்தவிதமான அனுபவங்களும் இருப்பதில்லை. கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களாக மாறுவதற்கு இவர்களை தேவன் அழைத்திருக்கிறார். தீர்க்கப்படாத பிரச்சனைகளும் உண்டு, இராஜ்யத்தின் காரியங்கள் துரிதமாக செயல்படும் வரைக்கும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். பிரச்சனைகளை தீர்ப்பதற்காக எடுத்த முயற்சியில் தோல்வியை சந்தித்ததினால், விரக்தி அடைந்த சகோதரர்கள் "குணப்படுத்த முடியாதவைகளை தாங்கிக்கொள்வதற்கான பெலத்தை" தேவனிடம் கேட்டு மற்றவைகளை தேவனிடத்தில் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். ஆயினும், நமக்குள் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு நம்முடைய பட்சத்தில் நாம் உண்மையோடு முயற்சிக்கவேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கிறார்.

## நம்முடைய பயிற்சிக்கு பிரச்சனைகள் உதவியாக செயல்படுகிறது

கிறிஸ்தவர்களாக இருக்கக்கூடிய நாம் இராஜரீகமான ஆசாரியர்களாக முடிவு பரியந்தம் தொடர்ந்து வளர்ச்சி அடையவேண்டும். கிறிஸ்துவும் மற்றும் அவருடைய சபையின் "வழியாகவே" தேவனுடைய ராஜ்யத்தில், மனுக்குலம் சீர்பொருந்தப்படும். இதுவே முடிவான இலக்காகும். நம்முடைய இராஜ்யத்தின் நிலையில், நாம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், மனிதனுக்குரிய சில பிரச்சனைகள் இருக்கும் அல்லவா ? பில்லியன் கணக்கான பிரச்சனைகள் இருந்தால் ? நாம் அனைவரும் ஒரு முக்கியமான நோக்கத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். "ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை" தேவன் நம்மிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார். (IIகொரி 5:18) இதன் விளைவாக நாம் இப்பொழுதும், வருங்காலத்திலும், தனிப்பட்டவகையிலும் ஒப்புரவாக்குபவர்களாக இருப்போம். இந்நிலைக்கான பயிற்சிப் பெறுவதற்கு முதலில் நம்முடைய வாழ்க்கையில் நாம் அப்பியாசப்படுத்துவதை தேவன் நிச்சயமாக விரும்புவார் அல்லவா ? ஆம், நம்முடைய வருங்கால பணிக்காக அநேக விதமான தகுதிகள் உள்ளது. ஆனால் நாம் இப்பொழுது உணர்ந்துக்கொள்வதை காட்டிலும் பரலோகத்தில் இதனுடைய மதிப்பு அதிகமாகவே இருக்கும். நம்முடைய ஐக்கியத்தில் பிரச்சனைகளை நியாயமாகவும், சரியாகவும் தீர்ப்பதற்கு - "பரத்திலிருந்து வரும் ஞானத்தில்"(யாக் 3:17) உள்ள அநேக பாடங்களையும், நீதியின் கோட்பாடுகளையும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் ? அறிவை, ஞானமாக செயலாற்றுதல் சரியான முடிவுகளை ஊக்குவிக்கும். மேலும், நம்முடைய வாழ்க்கையில் அநேக முறைகள் நாம் எடுக்கும் முடிவுகள் உறவுமுறைகளின் பாதிப்புகளையும் சார்ந்திருக்கிறது அல்லவா ?

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கும் நாம் புது சிருஷ்டியின் சட்டத்தின் கீழ் இருக்கிறோம், விசேஷமாக, -"நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு.."(IIயோவ 6) என்ற ராஜரீகமான அன்பின் பிரமாணம் மற்றும் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்... அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் ...." (யோவ 13:34,35) என்று இயேசு கொடுத்த கட்டளையை கவனித்துப்பாருங்கள். மேலும், "இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை(கிரேக்கம் - அகாப்பே - எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாத விதிமுறையற்ற அன்பு) தரித்துக்கொள்ளுங்கள்"(கொலோ 3:14) என்று பவுல் எழுதுகிறார்.

## இயேசுவின் கற்பனை

உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக." (மத் 18:15-17)

இந்த வேத பகுதி ஒரு ஆலோசனை அல்ல. இதற்கு எந்த விதிவிலக்கும் இல்லை. இந்த வழிமுறையை பின்பற்றாத பட்சத்தில் கசப்பும், கருத்துவேறுபாடுகளும், கோபமும், பகையும், சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படும்.

முதலில் பிரச்சனைகளை ஏற்படுத்தும் காரியங்களின் உராய்வை (கருத்துவேறுபாடுகள்) குறைக்க அனைவரும் தீவிரமாக முயற்சிக்கவேண்டும். அதற்குபின், பிரச்சனைகளை தீர்க்க வழிவகுக்க வேண்டும். இது நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக நடத்தபடவேண்டும். மற்றொரு வார்த்தைகளில் சொல்லபோனால், பிரச்சனைகள் முத்தி அதற்கு கட்டாயமாக தீர்வு காணவேண்டும் என்ற நிலை வருமுன் நம்முடைய ஒவ்வொருவருடைய வார்த்தைகளையும், சிந்தைகளையும் செயல்களையும் கூர்ந்து ஆராய்ந்து, வேதாகம கோட்பாடுகளோடு இசைந்திருக்கிறதா என்று மனத்தாழ்மையுள்ள இதயத்தோடு அலசிப்பார்க்கவேண்டும். நாம் நம்மை நோக்கி - "நான் மற்றவர்களோடு நேர்மையாகவும் அன்பாகவும் செயல்படுகிறேனா ? "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே" (லூக்க 11:4) என்று நான் தேவனிடத்திலிருந்து எதிர்பார்ப்பதுபோல, என்

பேரில் சந்தேகங்களும், கருத்துவேறுபாடுகள் வரும் சூழ்நிலைகளில் நான் மற்றவர்களிடம் இரக்கம் காண்பிக்கிறேனா?

நம்மோடு எற்படும் பிரச்சனைகளை தீர்க்க ஒரு வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், நாம் அந்த நபரிடம் தனித்து போகவேண்டும். பாவமான மனுக்குலத்தின் பழக்கமாகிய வம்பு பேச்சுகளும் (அரட்டை) அதனால் வரும் சம்மந்தங்களையும் முதலில் தவிர்க்கவேண்டும். நாம் மாம்சத்தின் படி நடவாமல், ஆவியின்படி நடக்கவேண்டும். (ரோம 8 :8, 9) நாம் மற்றவர்களிடம் போவதற்கு முன்பு, நாம் நம்முடைய திருப்தியை நாடுகிறோமா அல்லது நம்முடைய கிரியைகளினால் தேவனை மகிமைப்படுத்த விரும்புகிறோமா என்ற கேள்வியை கேட்டு முதலில் நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். நம்முடைய இருதயத்தின் நிலை தேவனோடு இசைந்திருக்கவேண்டும். நம்முடைய முயற்சியில் தோல்வியடைந்தாலும், நம்முடைய இருதயத்தின் நோக்கம் சரியானதாக இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். மேலும், இயேசுவின் கற்பனைகளுக்கு நாம் கொடுக்கவேண்டிய கனத்தையும் கொடுத்திருக்கிறோம்.

பிரச்சனைகளை வெற்றிகரமாக தீர்ப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளில், நம்முடைய பிழைகளை நாம் திருத்திக்கொள்ள மனப்பூர்வமாக சம்மதிக்கவேண்டும். அநேகருக்கு அதாவது கிறிஸ்தவர்கள் உள்பட அநேகரின் வீழ்ச்சிக்கு காரணம் பெருமையே. பிரச்சனைகளை வெற்றிகரமாக தீர்க்க இந்த ஒரு காரணமே தடையாக அமைகிறது. முதலில் நம்முடைய கிரியைகளை கூர்ந்து கவனித்து, நமக்குள் இருக்கும் சகலவிதமான துர்க்குணத்தையும் களைந்து, அவைகளினால் வரும் சோதனையை மேற்கொண்டு, சமாதானத்திற்கு இடையூராக இருக்கும் சகலத்தையும் முழுமையாக அகற்றவேண்டும். (எபே 4:31, 32) நாம் பொறுமையோடு கேட்போர்களாக இருந்து, மற்றவர்களுடைய கருத்தை புரிந்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். முக்கியமாக, இந்த காரியங்கள் துவங்கும் முன் தேவனிடத்தில் ஜெபத்தில் அணுகி, நம்முடைய சகோதர, சகோதிரிகளை அல்ல மாறாக சாத்தானை ஜெயிக்க வல்லமையை கேட்கவேண்டும். நாம் நம்முடைய சகோதரர்களோடு ஒப்புரவாக வேண்டும் என்று விரும்பினால், மனத்தாழ்மையை அணிந்துக்கொள்ளவேண்டும். பொதுவாக எந்த நல்ல குறிப்புகளையும் ஏற்றுகொண்டு, எந்த விதத்திலும் நாம் தவறி இருந்தால் மனத்தாழ்மையோடு அதை ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவிக்கவேண்டும்.

## நன்மையான தீர்வைக் காண முயற்சித்தல்

தீர்க்கப்படாத கருத்து வேறுபாடுகளினால் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்படலாம். இந்த பிரச்சனைகளில் அநேகர் தங்களை நுழைத்து, அந்த கசப்பை அதிகரிக்கும் பட்சத்தில் அனைவரும் பெறும் பாதிப்புக்குள்ளாவார்கள். குடும்பங்களும், அதே சபையை சார்ந்த சகோதரர்களும் பாதிக்கப்பட்டு, ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துசெல்லும் சூழ்நிலைகளும் ஏற்படலாம். இஸ்மயேலை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று தேவன் ஆபிரகாமிடம் சொல்லியிருந்தாலும், தன்னுடைய மகனின் இழப்பு ஆபிரகாமை வாட்டியது. (ஆதி 21:11-13) நமக்குள்ள வேறுபாடுகள், மற்றவர்களை எவ்வாறாக பாதிக்கிறது என்று நாம் முதலில் சிந்திக்கவேண்டும். நம்முடைய பிரச்சனைகளினால் மற்றவர்களுக்கு துயரம் ஏற்படுத்துகிறோமா ? சாராளை விட்டு ஆகாரை பிரித்த காரியம் மிக சரியான தீர்வா ? அந்த பிரச்சனையில் சம்மந்தப்பட்டவர்களும், அவர்களை சார்ந்தவர்களும் முழுமையான சந்தோஷம் அடைவதே ஒரு பிரச்சனைக்கு சரியான அல்லது முழுமையான தீர்வாக இருக்க முடியும்.

ஒரு கருத்து வேறுபாட்டை சரி செய்வதற்கு நாம் ஒருவரை அணுகும்போது, முதலில் பணிவை காட்டவேண்டும், அவர்களின் நேரத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் மற்றும் சம்பாஷிப்பதற்கு பொதுவாக ஒரு இடத்தை தேர்வு செய்ய வேண்டும். முதலில் மற்றவருடைய மனநிலை சரியாக இருக்கும் என்று கருதவேண்டும். கூடுமான அளவு சந்தேகங்கள் வரும்போது நாம் முடிந்தவரைக்கும் அதை நிவர்த்திசெய்யவேண்டும். சம்பாஷிக்கும்போது, முடிவான அதாவது தீர்ப்புக்குரிய வார்த்தைகளை பயன்படுத்துவதை காட்டிலும், "இப்படியாக தோன்றுகிறது", "இவ்வாறாக காண்கிறேன்" என்ற வார்த்தைகளை பயன்படுத்துவது ஏற்றதாக இருக்கும். இதில் நாம் எச்சரிப்போடு வார்த்தைகளை உபயோகிக்கவேண்டும். இருத்தரப்பினருக்கும் சரிசமமான நேரம் கொடுக்கப்படவேண்டும். இதற்கு மத்தியில் இயேசு அமர்ந்து, நம்முடைய வார்த்தைகளையும், கிரியைகளையும், நம்முடைய இருதயத்தின் நோக்கங்களையும் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

சாராள் மற்றும் ஆகாருக்கு இடையில் இருந்த பிரச்சனை இறுதிவரை தீர்க்கப்படவில்லை. அதுபோல நமக்குள் இருக்கும் பிரச்சனைகளை தீர்க்காமல் விட்டுவிட்டால், என்றுமே சரி செய்ய முடியாத அளவுக்கு மிக பெரிய பிளவு ஏற்படும்.

தேவனே, மாற்றமுடியாத காரியங்களை அமைதியாக ஏற்றுக்கொள்ள கிருபையை தாரும்,
மாற்றப்படவேண்டிய காரியங்களை மாற்றுவதற்கு தைரியத்தை தாரும், மற்றும்
ஒருவரை, மற்றொருவரிடத்திலிருந்து வேறுபடுத்தி கண்டறிய ஞானத்தை தாரும்.

என்று ரெயின்ஹோல்டு நெய்பர் -"அமைதலான ஜெபம்" என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ளார்.

மாற்றமுடியாத காரியங்களை அமைதலோடு ஏற்றுகொள்ளும் மனப்பக்குவத்தையும், நன்மையான காரியங்களை உறுதியாக பற்றிக்கொள்ளவும், மற்ற தவறுகளை சரி செய்வதற்கு தேவையான தைரியத்தையும் பெற்றுக்கொள்ள நம்முடைய கிறிஸ்தவ வாழ்கையில் அன்றாடம் அதிகதிகமாக முயற்சிக்கவேண்டும்.

யாக்கோபும் யோசேப்பும்

# கடும் சோதனையில் கற்றுக்கொள்ளுதல்



பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழவிழுந்து - இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி - பயப்படாதிருங்கள், நான் தேவனா, நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். - ஆதியாகமம் 50:18-20

**John Hummel**

பிரச்சனைகளினால் வரும் உபத்திரவங்கள் நிச்சயமாக புது சிருஷ்டியின் வளர்ச்சிக்கேதுவாய் இருக்கும். (கொலோ 3:13) தனிப்பட்ட வளர்ச்சிக்கும், வருங்காலத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குரிய வேலைகளுக்கும் ஆயத்தப்படுவதற்கு கடினமான அனுபவங்கள் முக்கியமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. (1கொரி 10:13) நேரடியான அனுபவங்கள் கற்றுக்கொள்ளுவதற்கு பயனுள்ள முறையாக இருக்கிறது. ஆயினும், மேலும் பயனடைய வேதாகமத்தில் உள்ள கதா பாத்திரங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளை ஆராய்ந்து அறியலாம். இதற்கு யாக்கோபும் அவருடைய குமாரன் யோசேப்பும் சிறந்த இரண்டு எடுத்துக்காட்டுகள்.

## யாக்கோபு

"யாக்கோபு தன் தாயின் சகோதரரான லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்டபோது, யாக்கோபு போய், கிணற்றின் வாயிலிருந்த கல்லைப் புரட்டி தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். பின்பு யாக்கோபு ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு அழுது, தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் ராகேலுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன் தகப்பனுக்கு அறிவித்தாள். லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்டபோது, அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக்கொண்டு முத்தஞ்செய்து, தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோனான், அவன் தன் காரியங்களையெல்லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான். அப்பொழுது லாபான் - நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன் என்றான். ஒரு மாதம் வரைக்கும் யாக்கோபு அவனிடத்தில் தங்கினான்." (ஆதி 29 :10-14)

லாபான் தன்னுடைய சகோதரியின் மகனை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டு, அவரைத் தேற்றி, ஆறுதல் சொல்லி, வேலையும் கொடுத்தார். யாக்கோபு வேலைக்காக ராகேலை திருமணம் செய்து கொள்ள விரும்பினாரே தவிர அவர் எந்த விதமான கூலியையும் எதிர்ப்பார்க்கவில்லை. லாபான் வாக்களித்தபடியே ராகேலை மணம் முடித்து கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு ஏழு வருடங்கள் மனமார வேலைச் செய்தார். "பின்பு யாக்கோபு லாபானை நோக்கி -என் நாட்கள் நிறைவேறினபடியால், என் மனைவியினிடத்தில் நான் சேரும்படி அவளை எனக்குத் தரவேண்டும் என்றான். அப்பொழுது லாபான் அவ்விடத்து மனிதர் எல்லாரையும் கூடிவரச்செய்து விருந்துபண்ணினான். அன்று இரவிலே அவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அழைத்துக்கொண்டுபோய், அவனிடத்தில் விட்டான். அவளை அவன் சேர்ந்தான். லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளைத் தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான். காலையிலே, இதோ, அவள் லேயாள் என்று யாக்கோபு கண்டு, லாபானை நோக்கி - ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலைசெய்தேன், பின்னை ஏன் எனக்கு வஞ்சகம்பண்ணினீர் என்றான்." (ஆதி 29:21-25)

"அதற்கு லாபான் - மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல, இவளுடைய ஏழு நாளை நிறைவேற்றும், அவளையும் உனக்குத் தருவேன், அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலைசெய் ..." (ஆதி 29:27,28) என்று இந்த வஞ்சகத்திற்கான காரணத்தை கூறினான். யாக்கோபு மேலும் ஏழு வருடங்கள் வேலை செய்தார் என்பதை இந்த சம்பவம் காட்டுகிறது.

## சபையின் விசுவாசத்தின் மேல் வரும் சோதனைகள்

யாக்கோபு மற்றும் லாபானுக்கு இடையில் நடந்த சம்பவத்தில் மூன்று முக்கியமான பாடங்கள் உள்ளன.
1. கூடுதலாக ஏழு வருடங்கள் வேலை செய்வதற்கு அவர் மறுக்கவில்லை. 2. இப்படிப்பட்ட வஞ்சகம் தனக்கு ஏற்பட்ட பின்பும் யாக்கோபு தன்னுடைய உறவினர்களுக்கு கொடுத்த கனத்தையும் மரியாதையையும் தொடர்ந்து கொடுத்து தன்னுடைய மேலான குணத்தை காண்பித்தார். 3. இப்படிப்பட்ட அனுபவம் தேவனிடத்திலிருந்து வருகிறது என்று எண்ணி அதை அமைதியாக ஏற்றுகொண்டார். ஒரு வாரம் சென்றபின் ராகேல் தனக்கு மனைவியாக கொடுக்கப்பட்டபோது நீண்ட காலமாக அவர் விரும்பியதை அடைந்தார். சந்தேகத்திற்கு இடமின்றி யாக்கோபு தன்னுடைய தகப்பனாகிய ஈசாக்கிடம் பொய் சொன்ன காரணத்திற்காக சில பாடுகளை அவர் தண்டனையாக படவேண்டியதாக இருந்தது. (ஆதி 27:19) ராகேல்

அவனுடைய சொரூபங்களை ஒளித்து வைத்து, அதைக் குறித்து பொய் சொன்னபோது லாபான் செய்த தவறுகளுக்காக அவன் தண்டனையை அனுபவித்தான். பொய்கள் பொய்யை பிறப்பிக்கும். கிரியைகளுக்கு தக்க பலன் உண்டு.

அநீதியாக நடத்தப்படுவார்கள் என்று இயேசு தன்னுடைய சீஷர்களோடு சொன்னார். (மத் 10:22, 24:9) தேவனுடைய கோட்பாடுகளுக்குரிய விசுவாசத்தை நாம் வெளிப்படுத்தவேண்டும். நம்முடைய மனதில் பதிந்திருக்கும் தேவனுடைய கோட்பாடுகளின் அடிப்படையில், நம்முடைய முடிவுகளை தாராளமாக சரியான நடையில் தேர்வு செய்யவேண்டும். பிரச்சனைகளையும், அநீதிகளையும் அனுபவித்தபோது யாக்கோபு நடந்துக்கொண்டது போல நாமும் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து, அவர் மேல் கொண்டிருக்கும் விசுவாசத்தை காத்துக்கொண்டு, அந்த அனுபவத்தின் வழியாக கிடைக்கும் நியாயமான பாடங்களை கற்றுக்கொள்ளவேண்டும். நாம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், நம்முடைய விருப்பங்கள் நிறைவேற்றப்படும். ஒரு வேளை நம்முடைய வாழ்க்கையில் நாம் விரும்பியவைகளை அடையாவிட்டாலும், நாம் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவின் சாயலில் விழிக்கும்போது நிச்சயமாக பெறுவோம்.

## யோசேப்பு

யாக்கோபு தன்னுடைய மனைவி ராகேலின் முதல் பிள்ளையான யோசேப்பின் மேல் வைத்த அன்பை ஆதியாகமம் 37: 3-11ம் வசனங்கள் விவரிக்கிறது. யோசேப்பின் பொறாமையுள்ள சகோதரர்கள் அன்பான ஒரு வார்த்தையும் கூட அவரோடு பேசாதிருந்தார்கள். யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் தன்னை வணங்குவதை போல சொப்பனம் கண்டதை சொன்னபோது, தீவிரமான நடவடிக்கையை எடுத்தார்கள். "அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு, அவன் தங்களுக்குச் சமீபமாய் வருமுன்னே, அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணி, ஒருவரை ஒருவர் நோக்கி இதோ, சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்த குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள், அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்." (ஆதி 37 :18-20)

இந்த திட்டத்தை ரூபனால் முழுவதும் நிறுத்த முடியவில்லை என்றாலும், அவர் யோசேப்பை கொல்ல சம்மதிக்கவில்லை. "ரூபன் அதைக் கேட்டு, அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து, அவனை அவன் தகப்பனிடத்துக்குத் திரும்பவும் கொண்டுபோக மனதுள்ளவனாய், அவர்களை நோக்கி - அவனைக் கொல்ல வேண்டாம், நீங்கள் இரத்தம் சிந்தலாகாது, நீங்கள் அவன்மேல் கை வையாமல், அவனை வனாந்தரத்திலுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள் என்ற சொல்லி, இவ்விதமாய் ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்தான்." (21,22)

ஆனால் ரூபன் இல்லாதபோது, யூதா யோசேப்பை கொல்லாமல், எகிப்துக்கு பிரயாணமாக போகிற வழிப்போக்கரிடம் விற்று விடுலாம் என்று ஆலோசனை கூறினான். யோசேப்பை ஒழிக்கவேண்டும் என்ற திட்டம் அவர்களுக்கு கை நிறைய லாபத்தை பெற்று தந்தது. இதன் விளைவாக யாக்கோபிடம் வாழ்நாள் அளவுக்கும் பொய் சொல்லவேண்டியதாக இருந்தது. ஏனெனில், இது யாக்கோபுக்கு கசப்பான காரியமாகவும், யோசேப்புக்கு தேவனுடைய திட்டத்தில் அடி எடுத்து வைக்கும் ஒரு முக்கியமான படியாக இருந்தது.

## யோசேப்பு எகிப்துக்கு இழுத்து செல்லப்பட்டார்

அவருடைய சகோதரர்களின் பகையும், தீமையான எண்ணங்களும், யோசேப்பை எகிப்தில் வளமுடன் வாழவைத்தது. அவர் ஒரு அடிமையாக விற்கப்பட்டபோதிலும், அவருடைய விசுவாசத்தின் நிமித்தம் அவருடைய எஜமானனாகிய போர்த்திபார் அவருக்கு அதிகதிகமான பொறுப்புகளை கொடுத்தார். அதற்குபின் அந்த முழு வீட்டிற்கும் நம்பிக்கையுள்ள ஒருவராக அவர் தகுதிப்பெற்றார். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம 8:28) என்று பவுல் எழுதுகிறார். இந்த வாக்குத்தத்தம் சபைக்கு கொடுக்கப்பட்டிருந் தாலும், அதில் உள்ள தேவனுடைய கோட்பாடு விசாலமாக பயன்படுத்தப்படுகிறது. இறுதியாக, யோசேப்பு தேவன் மேல் உள்ள விசுவாசத்தை காத்துக்கொண்டு, நீதியின் கோட்பாடுகளில் நின்றதால், தன்னுடைய சகோதரர்களின் மேல் வெற்றி அடைந்தார். இந்த கோட்பாட்டின் அடிப்படையில் வாழும் யாவரும் எல்லா பிரச்சனைகளிலும் அமைதி அல்லது சமாதானத்தை காண முடியும்.

யோசேப்பு தேவனை நம்பினார். அவருடைய வாழ்க்கையில் நடந்த பிரச்சனைகளில் விசுவாசம், மனத்தாழ்மை, பணிவு, பொறுமை மற்றும் சகிப்பு தன்மையை கற்றுக்கொண்டார். புது சிருஷ்டிகளாக இருக்கும் நாமும் இந்த பாடங்களை கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய கசப்பான அனுபவங்களில், தேவன் தன்னுடைய மனதில் என்ன நினைக்கிறார் என்பதை அறிந்துக்கொள்ள மறந்துவிடுகிறோம். ஆனால் நம்முடைய அனுபவங்கள் அனைத்தும் நம்முடைய நன்மைக்காகவும், அவருடைய திட்டங்கள் நிறைவேறுவதற்காகவும் அனுமதிக்கப்படுகிறது என்று உறுதிக்கூறலாம். ஒரு பாடம் கற்றுக்கொள்ளப்படும்போது மேலும் வளர்ச்சியடையவும் அது ஏதுவாயிருக்கும். ஆயினும், அதிகமான

பின்னேற்றங்களையும், கடினமான அனுபவங்களையும் சந்திக்கவேண்டியதாக இருக்கும்.

போர்த்திபாரின் மனைவி யோசேப்பின் மேல் தவறான குற்றச்சாட்டை சுமத்தி, சிறைக்கு அனுப்பினாள். மீண்டுமாக அவரின் செயல் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருந்தது. அவர் சோர்ந்து போய், குழப்பமடைந்திருக்கவேண்டும். மேலும் கோபமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் எல்லா சூழ்நிலையிலும், அவரை தவறாக நடத்தியபோதும், அவர் நீதிக்காக நிலைத்து நின்றார். இப்படிப்பட்ட பிரச்சனைகள் கொண்டுவரும் கசப்பான அனுபவங்களை யோசேப்பு ஏற்றுக்கொண்டார்.

அதேபோல, நம்மை நெருக்கும் தற்காலிகமான சூழ்நிலைகளை வைத்து தேவனுடைய கிருபையை அளவிடக்கூடாது என்று நாமும் உணரவேண்டும். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன், ஆனாலும் - என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்." (யோபு 13:15) நம்முடைய சூழ்நிலைக்கான உடனடியான நோக்கத்தை தெளிவாக நாம் அறியாதிருந்தாலும் நாம் தேவன் மேல் நம்பிக்கையாக இருக்கவேண்டும்.

யோசேப்பின் விஷயத்தில், இராஜாவின் சிறையில் கற்றுக்கொடுக்கப்பட்ட பாடங்களை எந்த விதமான பல்கலைகழகமும் அவருக்கு கற்றுகொடுத்திருக்க முடியாது. சிறையின் அனுபவங்கள், வருங்காலத்திற்கு அவரை ஆயத்தப்படுத்தியது.

## யோசேப்பு மீண்டுமாக சகோதரர்களோடு இணைந்தார்

யோசேப்பின் நீடித்த, உறுதியான விசுவாசம் பல வருடங்கள் பாழாகிவிட்டதாக தோன்றினாலும், எகிப்தில் உள்ள பாரோனின் வலது பக்கத்தில் அவரை அமரச் செய்து, மிக பெரிய பலனை தந்தது. அந்த மிக கொடிய பஞ்சத்தில் அனைவருக்கும் தானியங்களை பகிர்ந்துக்கொடுக்க அவருடைய ஞானம் வழிவகுத்தது. பண்டக சாலையை திறந்து ஜனங்களுக்கு அவர் தானியம் கொடுத்தார். (ஆதி 41:56,57) எகிப்தில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, அவர்களை சுற்றியுள்ள நாடுகளுக்கும் யோசேப்பின் குடும்பத்தாருக்கும் அவர் தானியம் கொடுத்தார்.

யோசேப்பின் சொப்பனம் நிறைவேறும்படியாக அவர்களுடைய சகோதரனை அறியாதவர்களாக அவரை தாழவிழுந்து பணிந்துக்கொண்டவர்களும், யோசேப்பை அடிமையாக விற்று போட்ட அந்த பத்து சகோதரர்கள் தாழ்மை என்னும் பாடத்தை கற்றுக்கொண்டார்கள். யோசேப்பு பெற்றிருந்த வல்லமையை பயன்படுத்தி அவர் தன்னுடைய சகோதரர்களை பழிவாங்க எண்ணாமல், அவர்களுக்கு இரக்கம் காண்பித்தார். வரிசையாக அநேக சோதனைகளின் மூலம் அவர்கள் உண்மையில், அவர்களுடைய தீய செயலுகளுக்காக முழுமையாக மனந்திரும்பி விட்டார்கள் என்பதை அவர் அறிந்துக்கொண்டார். அதற்குபின் அவர் வைத்திருந்த ஆதாரங்களை கொண்டு அவரை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். (ஆதி 45:1-5)

யோசேப்பின் மிக தூய்மையான குணம் மறுபடியும் பயந்திருந்த அவருடைய சகோதரர்கள் மத்தியில் வெளிப்பட்டது. "பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுவதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்." (ஆதி 45:7,8) விசுவாசம் மற்றும் மன்னிக்கும் ஆவியை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்கு எவ்வளவு வல்லமையான எடுத்துக்காட்டு! தன்னுடைய அனுபவங்களிலும், பிரச்சனைகளிலும் அவர் தேவனை தவிர வேறு எதையும் காணவில்லை அல்லது தேடவில்லை.

## பிரச்சனைகள் நல்ல குணங்களை வளர்க்கும்

கிறிஸ்துவ வாழ்க்கையில் அவர்களுடைய நல்ல குணங்கள் வளர்ச்சியடைவதற்கு பிரச்சனைகள் மிக அவசியமானது. தவிர்க்க முடியாத பிரச்சனைகள் வரும்போது, நாம் தீமையான காரியங்களை தூண்டிவிடக்கூடாது. ஆவிக்குரிய கோட்பாடுகளை கொண்டு அவைகளை தீர்க்க முயற்சிக்கவேண்டும். உபத்திரவங்கள் வரும்போது அதை பொறுமையோடு சகிப்பதற்கு நாமும் யோசேப்பை போல இருக்கவேண்டும். யோசேப்பின் அனுபவங்களில், தேவன் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்ற எவ்வாறாக சூழ்நிலைகளை மேற்கொள்கிறார் என்பதை நாம் காணலாம். யோசேப்பு எகிப்தில் இராவிட்டால், இஸ்ரயேல் ஜாதி என்றுமே எகிப்திற்குள் நுழைந்திருக்க முடியாது. அதேபோல், இயேசுவும் ஒரு பிரதான ஆசாரியராக வளர்ச்சியடைந்திருக்கமுடியாது. அதேபோல வருங்கால அதாவது அடுத்த யுகத்தில் தங்களுடைய பணியை நேர்த்தியாக செய்ய, சிநேகிதமற்ற இந்த உலகத்தில் பெறும் அனுபவங்கள் வழியாக சபை ஆசாரியர்களாக வளர்ச்சியடைகிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கையில் "மத்தியஸ்தரின்" பணியைச் செய்வதற்கும், தேவையான பாடங்களை கற்றுக்கொள்வதற்கும் வரும் பிரச்சனைகளை மனம் கோணாமல் ஏற்றுகொள்ளவேண்டும். கூடுமானால், நாம் அனைவரும் யோசேப்பின் வார்த்தைகளை எதிரொலிப்போம் - "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்." (ஆதி 50:20)

# இராஜாவாகிய சவுலின் பாவங்கள்



"உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது, உங்கள் அவயவங்களில் போர்செய்கிறஇச்சைகளினாலல்லவா ? நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை, நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள், நீங்கள் சண்டையும் யுத்தமும்பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். - யாக்கோபு 4:1-3

**Wade Austin**

தங்களுக்கொரு இராஜா வேண்டும் என்ற இஸ்ரயேலர்களின் விண்ணப்பத்திற்கு பதில் அளிக்கும்படி தேவன் இணங்கினபோது -"ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்." என்று சாமுயேலிடம் கூறினார். ஒரு இராஜாவை ஏற்படுத்தினால் அதன் விளைவாக சில எதிர்மறையான காரியங்களை சந்திக்க நேரிடும் என்று சாமுயேல் எச்சரித்தபோதிலும் -"ஜனங்கள் சாமுயேலின் சொல்லைக்கேட்க மனதில்லாமல் அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும். சகல ஜாதிகளையும்போல நாங்களும் இருப்போம், எங்கள் ராஜா எங்களை நியாயம் விசாரித்து, எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு, எங்கள் யுத்தங்களை நடத்த வேண்டும் என்றார்கள்." (1சாமு 8:19,20)

இதன் விளைவாக, தேவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீஸின் குமாரன் சவுலை தேர்வு செய்யும்படி சாமுயேலிடம் கூறினார். சவுல், "இஸ்ரயேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை, எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்." (1சாமு 9:2) இஸ்ரயேல் எதிர்பார்த்தபடி சவுல் வெளிப்புற தோற்றத்திலாவது ஒரு இராஜாவின் உருவத்திற்கு பொருத்தமானவனாக இருந்தான். ஆயினும், சவுல், அநேக பிரச்சனைகளை கொண்டிருப்பதை அவனுடைய நடத்தைகள் வெளிப்படுத்தியது. முன்னேற்றம் அடைந்த நாடுகளோடு அவன் ஓயாமல் போராடினான். தேவனிடத்தில் பலத்தை கேட்பதற்கு பதிலாக, சந்தேகப்பட்டுகொண்டிருந்தான். அவன் பகிரங்கமாக அபிஷேகிக்கப்பட்டபின்னும், அவன் தன்னை மறைத்துக்கொண்டான். (1சாமு 10:20-22) அவனுடைய விசுவாச குறைச்சல் மற்றும் தேவன் பேரில் அவன் கொண்டிருந்த பக்தி குறைச்சலும் அவனுக்குள் இருந்த சந்தேகத்திற்கு காரணமாக இருந்தது.

சவுலின் பலவீனங்கள் தேவனிடத்தில் தாழ்மையோடு ீழ்படியச் செய்திருக்கும். ஆயினும், அவனுக்குள் இருந்த பெருமை அல்லது சுயநலமான விருப்பங்களும் அவனை ஒரு சிறந்த இராஜாவாக பணிபுரிய விடவில்லை. தீர்க்கதரிசியாகிய சாமுயேலின் மூலமாக தேவன் வழிநடத்தியதை அவர் தொடர்ந்து கீழ்படியாமல் போனான். ஆகவே, "புத்தியீனமாய்ச் செய்தீர், உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர், மற்றப்படி கர்த்தர் இஸ்ரயேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவர். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது, கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார், கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே.... " (1சாமு 13:13,14) என்று தேவன் சாமுயேலின் மூலம் சவுலுக்கு அறிவித்தார்.

கடைசியில் யூதா கோத்திரத்தானாகிய ஈசாயின் குமாரனும் "தன்னுடைய இருதயத்திற்கு பிரியமான தாசனாகிய" தாவீதை தேவன் கண்டடைந்தார். தேவையான தாழ்மையை தாவீது கொண்டிருந்தார். தேவனை அவருடைய பலமாகவும், தேவனுடைய கிருபை மற்றும் அன்பை மிக உயர்வான புகழ்ச்சிக்குரியதுமாக எண்ணினார். இதுவே தாவீதுக்கும் சவுலுக்கும் உள்ள மிக பெரிய வேறுபாடாக இருந்தது. சாமுயேல் சவுலை குற்றம் சாட்டியபோது அவன் குற்றத்தை பொறுத்துக்கொண்டான் ஆனால் தாவீது தன்னுடைய பாவத்தை உணர்ந்து, சுத்தமான இருதயத்தை விரும்பினார். இந்த இரண்டு ராஜாக்களின் மத்தியில் உள்ள வித்தியாசம் இதுவே.

## பாவங்கள் பிரச்சனைக்கு வழிவகுக்கும்

பாவம் - பிரச்சனைகளை உண்டுபண்ணுமா, இல்லையா ?என்று சற்று சிந்தித்துபாருங்கள். தீர்க்கப்படாத பிரச்சனை, அதிகமான பாவத்திற்கு சட்டென்று வழிவகுக்கிறது. ஆனால் தேவனோடு இசைத்திருக்கும் ஒரு இருதயம் அவரை மகிமைப்படுத்தவும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடையவும் விரும்பும். தேவனை எதிர்க்கும் இருதயம் தொடர்ந்து பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். சவுலுக்கும் தாவீதுக்கும் இடையில் மற்றும் சவுலுக்கும் அவருடைய குமாரனாகிய யோனத்தானுக்கும் இடையில் - சவுலின் பாவங்கள் தீடீர் என்று பிரச்சனைகளை ஏற்படுத்தியது.

தேவனுடைய ஜனங்களுக்குள் அடிக்கடி ஏற்படும் பிரச்சனைகளின் காரணங்களை அப்போஸ்தலனாகிய யாக்கோபு இந்த பாடத்தின் துவக்கத்தில் வரிசைப்படுத்துகிறார். நம்மை அறியாமல் நமக்குள் செயல்படும் சுயநலமான விருப்பங்கள், நாம் அடிக்கடி

செய்யக்கூடிய முதிர்ச்சியற்ற நியாயத்தீர்ப்புகளை விளைவிக்கிறது. இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புகள் பகை உணர்வுகளையும், விரோதங்களையும் உண்டுபண்ணி, அதன் விளைவாக பொறுப்புகள் தட்டிகளிக்கவும், அதை எடுத்து செய்பவர்களை எதிர்க்கவும் வழிவகுக்கிறது.

சவுலுக்கும், தாவீதுக்கும் மற்றும் சவுலுக்கும் யோனதானுக்கும் இடையில் உள்ள பிரச்சனைகளுக்கான விதைகள், சவுலின் கீழ்படியாமையினாலே விதைக்கப்பட்டது. சவுலுக்கு கற்பித்திருந்தபடி அவன் சாமுயேல் பலி செலுத்துவதற்காக காத்திருக்கவில்லை. (1சாமு 10:8, 13:7-10) சவுலின் பொறுமையற்ற நிலை, பெருமை மற்றும் விசுவாச குறைச்சல், அவனுடைய பதவியை தக்கவைப்பதற்கு, தேவனையே மேற்கொள்ள செய்தது. அவன் செய்த காரியங்களுக்கு மனம் வருந்தாமல், அவருடைய செயல்களை நியாயப்படுத்த முயற்சித்தான். "நீர் செய்தது என்ன என்ற சாமுயேல் கேட்டதற்கு, சவுல் - ஜனங்கள் என்னை விட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும் நான் கண்டபடியினாலே, கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணவில்லை என்றும் எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான்." (1சாமு 13:11,12) சவுலின் மனந்திரும்பாத நிலையை கண்ட சாமுயேல் -"இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது." என்று எளிதில் அறிவித்துவிட்டார். (1சாமு 13:14)

மற்றொரு சூழ்நிலையில், அமலேக்கியர்களைப் பற்றிய விஷயத்தில் சவுல் தேவனுடைய கட்டளைகளை கீழ்படிய மறுத்துவிட்டார். "பின்பு சாமுயேல் சவுலை நோக்கி - இஸ்ரயேலராகிய தம்முடைய ஜனங்கள் மேல் உம்மை ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே, இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும், சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - இஸ்ரயேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன். இப்பொழுதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்." (1சாமு 15:1-3)

அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகையும், முதல்தரமான ஆடுமாடுகளை உயிரோடு வைக்கும்படி சவுல் தன்னுடைய மனுஷருக்கு கட்டளைக்கொடுத்தான். சாமுயேல் அவனுக்கு எதிர்கொண்டு வந்தபோது, தன்னுடைய கீழ்படியாமையை நியாயப்படுத்தி - தேவனுக்கு பலியிடும்படிக்கு இவைகளை கொண்டுவந்தேன் என்று பதில் அளித்தான். "அதற்குச் சாமுயேல் - கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது, நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்." (1சாமு 15:22,23)

அதற்குபின் சவுல் சாமுயேலை தன்னுடன் வரும்படி மன்றாடினான், ஆனால் காலம் சென்றது. சாமுயேல் தன்னுடைய வழியில் திரும்பி நடக்க தொடங்கினார். சவுல் அவருடைய அங்கியை பிடித்தார் அது கிழிந்தது. அதை கண்ட சாமுயேல் சவுலின் இராஜ்யம் இப்படியாக கிழிக்கப்பட்டு வேறொருவனுக்கு கொடுக்கப்படும் என்று நினைத்திருப்பார். சவுல் மன்றாடினான் -"நான் பாவஞ்செய்தேன், இப்போது என் ஜனத்தின் மூப்பருக்கு முன்பாகவும், இஸ்ரயேலுக்கு முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணி நான் உம்முடைய தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத் திரும்பி வாரும் என்றான்." (1சாமு 15:30) சவுலின் எண்ணங்கள் தூய்மையாக இருக்கவில்லை. ஆகாகை கொன்று, தேவனை திருப்திப்படுத்தி, தன்னுடைய ராஜ்யபாரத்தை தக்கவைத்துகொள்ள அல்லது காப்பாற்றிக்கொள்ள வகைதேடினான். ஆனால் காலம் கடந்துவிட்டது. அதற்குபின் சவுல் சாமுயேலை காணமுடியவில்லை.

## தாவீது இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார்

அநேக வருடங்களுக்கு பின்பு தாவீதை அடுத்த இராஜாவாக அபிஷேகிப்பதற்கு சாமுயேல் பெத்லகேமுக்கு அனுப்பப்பட்டார். தாவீதின் மூத்த சகோதரனை பார்த்தபோது, இவன் தானோ என்று அவர் இருதயத்தில் சிந்தித்தார், ஆனால் தேவன் வெளி தோற்றத்தை கண்டு ஒருவரை நியாயந்தீர்ப்பதில்லை என்பதை சாமுயேலுக்கு அறிவித்தார். ".. நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம், நான் இவனைப் புறக்கணித்தேன், மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன், மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். (1சாமு 16:7)

தேவனுடைய கிருபையிலிருந்து விலக்கப்பட்ட சவுலுக்கு தாவீதின் மேல் பொறாமையும் பகையும் அதிகரித்தது. சவுலின் இருதயத்தின் நோக்கங்கள் செம்மையானதாக இராததினால், இவர்களுக்கு இடையில் சமாதானத்தை கொண்டுவரவேண்டும் என்ற தாவீதின் சகல முயற்சிகளும் பயனற்றுபோனது. "தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பிவந்தபின்பு, ஜனங்கள் திரும்ப வரும்போதும், ஸ்திரீகள் இஸ்ரயேலின் சகல பட்டணங்களிலுமிருந்து, ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும் கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் ராஜாவாகிய சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில் - சவுல் கொன்றது ஆயிரம்,

தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள். அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது, அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள், இன்னும் ராஜாங்க மாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்." (1சாமு 18: 6 -9)

இருத்தரத்தாருக்கும் நல்ல நோக்கங்கள் இராவிட்டால் பிரச்சனைகளை தீர்ப்பது, கூடாத காரியமாகிவிடும். தாவீது (மற்றும் யோனதான்) சவுலுடன் சமாதானமாக விரும்பினார், ஆனால் சவுல் தேவனுக்கு முன்பாக தன்னை தாழ்த்தவில்லை. தேவன் சாமுயேலை நோக்கி - "இஸ்ரயேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய் ?...." (1சாமு 16:1) இதன் விளைவாக சவுல் தன்னையே மாய்த்துக்கொண்டான். அவன் இறுதிவரை தாவீதோடும் தேவனோடும் சமாதானமாக இருக்கவில்லை. (1சாமு 31:4)

### சமாதானம் செய்பவராக இருத்தல்

தாவீதோடும், தன்னுடைய குமாரனாகிய யோனத்தானோடும், விசேஷமாக தேவனோடும் இருக்கவேண்டிய ஒரு ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தும் வாய்ப்புகளை சவுலின் பாவங்கள் தடுத்தது, அதன் விளைவாக அவன் அழிந்துபோனான். சவுலின் மேல் பகை உணர்வுகள் இருப்பினும், அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று எண்ணி அவனை கனம் பன்னினார். அநேக சந்தர்ப்பங்களில் சவுலைக் கொல்லாமல் விட்டுவிட்டார். தாவீது தன்னுடைய சொந்த பாவங்கள் மற்றும் மீறுதல்களின் மத்தியில் பிரச்சனைகளை எப்படியாக எதிர்நோக்குகிறது என்று நமக்கொரு சிறந்த எடுத்துக்காட்டை நிறுத்தியிருக்கிறார். எல்லாவற்றிலும் தாவீது தேவனை மகிமைப்படுத்த விரும்பினார். நாம் தேவனிடத்தில் திரும்பினால், நம்முடைய பிரச்சனைகளும், நாம் அனுபவிக்கும் உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்துவதற்கும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைவதற்கும் நாம் பெற்றிருக்கும் வாய்ப்பாக உணரமுடியும்.

தேவன் தன்னுடைய பிள்ளைகளை சமாதானம்பண்ணுகிறவர்களாக இருக்கும்படி கட்டளையிடுகிறார் - சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." (மத் 5:9) சமாதானம்பண்ணுகிறதற்கான கோட்பாடுகளை பற்றி வேதாகமம் அதிகமான ஆலோசனைகளை தந்தாலும், அவைகள் எளிதில் செயலாற்றப்படுவதில்லை.

தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் நாம் சமாதானம்பண்ணுகிறவர்களாக இருப்பதற்கு நாம் எல்லா விதமான முயற்சிகளையும் எடுப்போம்.

## பிரச்சனைகளுக்கு விடையளித்தல்

### பொறுப்புகளை நழுவவிடுவது

ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணுவதை விட அதிலிருந்த தப்பித்துக்கொள்ளுவதில் அதிக ஆர்வமுள்ளவர்கள் இந்த முறை பயன்படுத்துவார்கள் :

**மறுப்பு -** எந்த விதமான பிரச்சனையும் உருவாகவில்லை என்று பாசாங்கு செய்வதே, இதிலிருந்து தப்பித்து கொள்வதற்கான ஒரு வழி. அடுத்து பிரச்சனைகளை தீர்ப்பதற்கு செய்யவேண்டிய காரியத்தை செய்வதற்கு மறுப்பு தெரிவிப்பது. இவைகள் பிரச்சனைகளை சமாளிக்க தற்காலிகமான வழிகளாக இருப்பதால் பிரச்சனைகள் இன்னும் மோசமான நிலையை அடையும். (1சாமு 2:22-25)

**ஓடிபோதல் -** பிரச்சனையை விட்டு ஓடிபோவது தப்பிப்பதற்கான மற்றொரு வழியாகும். இப்படிப்பட்டதான காரியம் சிநேகிதத்தை முறிப்பதிலும், வேலையை விட்டு விடுபடுவதும், விவாகரத்துக்கு ஆயத்தப்படுவது, அல்லது சபையை விட்டு வெளியேறுவது போன்றவைகளுக்கு வழிவகுக்கும். பிரச்சனையை விட்டு ஓடிபோவது நிச்சயமாக வரம்பு மீறிய சூழ்நிலைகளில் நிறுத்திவிடும்.(1சாமு 19:9,10) ஆனால் அநேக நிகழ்ச்சிகளில் அந்த பிரச்சனையின் சரியான முறையிலான தீர்வு ஒத்திவைப்பதற்கு மட்டுமே வழிவகுக்கிறது. (ஆதி 16 :6-8)

**தற்கொலை -** பிரச்சனைகளை தீர்ப்பதற்கான எல்லா நம்பிக்கைகளும் இழந்தபின்னும், அந்த நிர்பந்தமான சூழ்நிலையிலிருந்து தப்பிகொள்வதற்கும் தங்களுடைய உயிரையே மாய்த்துகொள்கிறார்கள். பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இது சரியான முறையாக என்றுமே இருந்ததில்லை. (மத் 27:1-5)

### பொறுப்புகளை எதிர்ப்பது

உறவுகளை தக்கவைப்பதை விட பிரச்சனைகளை ஜெயிப்பதில் அதிகமாக விருப்பமுள்ளோர் இந்த முறையை பயன்படுத்துவார்கள் :

**திடீரென்று தாக்குதல் -** அநேக விதமான ஆற்றல் அல்லது அதிகாரத்தை பயன்படுத்தி அல்லது பயமுறுத்தி, எதிராளியை மேற்கொள்ள சிலர் முயற்சிப்பர். (எடுத்துக்காட்டு - வாய்ச்சண்டை - புறம் கூறுவது, வதந்திகளை

பரப்புவது ) மூர்க்கதனமாக சண்டையிடுதல் அல்லது எதிராளியின் தனிப்பட்ட பொருளாதாரம் அல்லது தொழிலை நாசப்படுத்துவது (அப் 6:8 -15) இப்படிப்பட்ட காரியங்கள் பிரச்சனைகளை தீவிரப்படுத்தும்.

**வழக்கு பதிவு செய்தல் -** அநேக பிரச்சனைகள் நீதிமன்றத்திற்கு எடுத்துசெல்லப்பட்டாலும், (அப் 24:1-26, ரோம 13:1-5) அங்குள்ள சட்டங்கள் உறவுகளை சேதமடைய செய்கிறது. மேலும் அங்கு முழுமையான நீதி, நியாயங்கள் கிடைப்பதில்லை. இதன் காரணமாக கிறிஸ்தவர்கள் தங்களுள்ள வழக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்து செல்லாமல், சபைகளில் தீர்த்துக்கொள்வதற்கு தேவைப்பட்ட அனைத்து முயற்சிகள் எடுப்பதற்கு கட்டளை பெற்றுள்ளார்கள். (மத் 5:25-26, 1கொரி 6 :1-8)

**கொலை -** வரம்பு மீறிய காரியங்களில், எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாத பட்சத்தில், அவர்களை எதிர்ப்பவர்களை கொல்ல முயற்சிப்பார்கள். (அப் 7:54-58) ஆனாலும் அநேகரால் கொலைகளை செய்யமுடியாமல் போனாலும், இருதயத்தில் குரோதத்தை தேக்கி வைத்துகொண்டு, கொலை வெறியோடு மற்றவர்களை பார்க்கும்போது, தேவனுடைய பார்வையில் குற்றவாளிகளாக நின்றுவிடுவார்கள். (1யோவான் 3:15, மத் 5:21-22)

## சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்புகள்

இருத்தரப்பினரும் ஒத்துக்கொண்டு பிரச்சனைகளை நீதியின் அடிப்படையில் சமாதானமாக தீர்த்து வைக்க வகைதேடுபவர்கள் பயன்படுத்தக்கூடியது -

**குற்றத்தை மேற்கொள்வது -** அநேக பிரச்சனைகள் மிகவும் சிறியதாக இருப்பதால் எந்தவிதமான தயக்கமின்றி மனதார குற்றத்தை கவனியாமல் விட்டுவிட்டு, அந்த பிரச்சனையை தீர்க்கவேண்டும். "மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும், குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை." (நீதி 19:11) குற்றங்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவது மன்னிப்புக்குரிய ஒரு வகையாகும். மேலும் இதைக் குறித்து இனி பேசாமலும், சிந்திக்காமலும், இந்த பகையின் கசப்பை வளர்த்துகொள்ளக்கூடாது என்ற முடிவை எடுக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.

**மீண்டுமாக நட்புண்டாக்குதல் -** காணாமல் விட்டு விட முடியாதபடிக்கும் அது உறவுகளை பாழாக்கும் அளவுக்கு குற்றங்கள் பெரிதாக இருக்கும் பட்சத்தில், நாம் தனிப்பட்ட காரியங்களில் நாமாகவே குற்றத்தை ஒப்புகொள்வதன் மூலமாகவும், அன்பான திருத்தங்கள் மற்றும் மன்னிப்பு என்ற வழிகளில் சமாதானத்தை ஏற்படுத்தி கொள்ளலாம். ".... உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகியல்......முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி,....." (மத் 5:23,24)

**சமாதானத்திற்குரிய பேச்சுவார்த்தைகள் -** நாம் வெற்றிகரமான சில பிரச்சனைகள் தீர்க்கப்பட்டால், அதற்குபின் பணம், சொத்து, உரிமைகள் போன்ற பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நாம் மேலும் முயற்சிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இவைகள் ஒத்துழைப்புகளோடு பேரம் பேசி, இருத்தரப்பினரும் திருப்திகரமாக பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இவர்களுக்கு உண்டான தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யும் படி நடப்பிக்கவேண்டும். "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." (பிலி 2:4)

**மத்தியஸ்தம் செய்தல் -** இருவர் தனிப்பட்ட முறையில் தீர்வு காணமுடியாத பட்சத்தில், அவர்கள் பாராபட்சம் இல்லாத ஒருவர் அல்லது அதிகமானவர்களை கலந்தாலோசிக்கவும், தங்களை சந்தித்து, அவர்களுக்கான காரியங்களை குறித்து கூடுமான தீர்வுகளை பரிசோதிக்க அழைக்கவேண்டும். இந்த மத்தியஸ்தர்கள் கேள்விகளை கேட்டு, சில அறிவுரைகளை கூறலாம், ஆனாலும் எந்த ஒரு தீர்வையும் கட்டாயப்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை.

**நடுவர் தீர்ப்பு -** ஒரு பொருளை பற்றி காரியத்தில் முழு விருப்பத்தோடு ஒப்பந்தங்கள் சாத்தியமில்லாத போது, வாதங்களை கேட்பதற்கும், இறுதியான முடிவுகளை தீர்மாணித்து, பிரச்சனைகளை தீக்க நடுவர்கள் நியமிக்கப்படுவார்கள். "இந்த ஜீவனுக்கேற் றவழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்திறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள்" (1கொரி 6:4)

**கணக்கு கொடுக்கவேண்டிய கடமை பொறுப்பு -** ஒரு கிறிஸ்தவனாக இருந்துகொண்டு நன்மையான காரியங்களை செய்வதற்கும், மீண்டும் நட்புறவாகுவதற்கும் இணங்காத பட்சத்தில், இந்த பிரச்சனையில் சபையின் மூப்பர்கள் தலையிட்டு, ஒழுங்குமுறையின்படி வசனத்தின் அடிப்படையில் கணக்கு கேட்டு மனம் வருந்துதலையும், நியாயத்தையும், மன்னிப்பையும் ஊக்குவிக்கவேண்டும் என்று இயேசு கட்டளையிடுகிறார். "அவர்களுக்கும் அவன் செவிகொடாமறபோனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து..." (மத் 18:17)

Adapted from The Peacemaker: A Biblical Guide to Resolving Personal Conflict by Ken Sande (Baker Books,3d ed.,2003).

குழந்தைகளைப் போல மாறுதல்



# தெய்வீக வழிநடத்தல்

அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து - பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி - நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் - மத் 18:1-3

**Kent Humphreys**

நம்முடைய சிந்தைகளை ஆவிக்குரிய நிலைக்கு உயர்த்துவதற்காக வேதாகமத்தில் வசனங்கள் எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் வார்த்தைகளுக்கு இசைவாக செயல்பட்டு, அதை நடைமுறைப்படுத்தி, ஆசீர்வதிக்கப்படுபவர்களுக்கு அவர் போதித்தார். அவருடைய வார்த்தைகளை கேட்ட அநேகருடைய ஆவிக்குரிய செவிகள், இயேசுவின் வார்த்தைகளுக்கு இசைவாக இராததினால், அவர்கள் இந்த ஆசீர்வாதங்களை பெற தவறினார்கள். "நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். இவர்கள் கண்களினால் காணமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக காமலும் இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது. காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லி யிருக்கிறார். (அப் 28 :26,27)

மத்தேயு 18ம் அதிகாரம் முப்பத்தி ஐந்து வசனங்களை கொண்டுள்ளது, அதில் முப்பத்திரண்டு வசனங்கள் இயேசு பேசின வார்த்தைகள். 15 -17 வசனங்கள் சகோதரர்களுக்குள் இருக்கும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான கருத்துக்கள் அதிகமாக பரிமாரப்பட்டாலும், பிரச்சனைகளை தீர்ப்பதில் உள்ள முக்கிய பங்கையும், நல்ல குணங்களின் வளர்ச்சியைப் பற்றியும் முழுவதுமாக பேசப்படுகிறது. இயேசுவின் துவக்க வார்த்தைகளில், ஐந்து முக்கியமான எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கடைப்பிடிக்காத பட்சத்தில், ஆவிக்குரிய வீழ்ச்சி நேரிடலாம். அவையாவன - தாழ்மை குறைவுபடுதல் (1-5), துணிகரமாக மற்றவர்களுக்கு இடறல்கள் ஏற்படுத்துதல் (6,7) சுயநலம் (8,9) இரக்கமற்றநிலை (10-14) மற்றும் மன்னிக்க இயலாத மனநிலை (21-35)

## தாழ்மை குறைவுபடுதல் மற்றும் தான் என்ற ஆணவம்

மனத்தாழ்மை மற்றும் சபையின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவர் மேலும் உண்மையான அக்கறை காட்டக்கூடிய விசேஷித்த குணங்கள் சபையின் மூப்பர்களுக்கும், அவர்களுடைய உதவியாளர்களுக்கும் அடிப்படை தகுதிகளாக இருக்கவேண்டும் என்று தீத்துவுக்கும், தீமோத்தேயுவுக்கும் எழுதின கடிதங்கள் தெளிவாக விவரிக்கிறது. இந்த பதவிகள் அதிகமான பொறுப்புகளை கொண்டுள்ளது. இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தனிநபரும் ஒரு திறமையாக செயல்படவும், நிதானமாக நியாயந்தீர்க்கவும், சில உயர்வான சிந்தனைகளை கொண்டிருக்கவேண்டும். ஆனால் மற்றவர்களுக்கு முன்பாக தங்களை உயர்த்தக்கூடாது. இந்த தவறை "தன் இஷ்டபடி செய்கிறவன்" என்று பவுல் அழைக்கிறார். (தீத்து 1:7) ஒருவருடைய குற்றசாட்டுதலில் எந்தவிதமான பொருளும் இல்லை என கருதி அவருடைய கருத்தை மூப்பர் நிராகரித்தால், இதை துணிகரம் என்று பேதுரு குறிப்பிடுகிறார். "விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களை தூஷிக்க அஞ்சாதவர்கள்." (11பேது 2:10) தங்களுடைய சுய திறமையினால் அல்ல தேவனுடைய ஆவி தங்களுக்குள் இருப்பதினால் மட்டுமே சபையை காத்துக்கொள்ளும் தகுதியும் பொறுப்பும் கிடைத்துள்ளது என்று ஒவ்வொரு மூப்பரும் சிந்தையில் கொள்ளவேண்டும். ஒரு நல்ல பிரசங்கம் கிடைத்தபின் தேவனாகிய கர்த்தருக்கு நன்றிகளை செலுத்தி, அந்த பிரசங்கத்தில் சொல்லப்பட்ட காரியங்களை தன்னுடைய இருதயத்தில் ஏற்றுகொள்ளவேண்டும்.

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.."இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. (மத்18:3,14) இவ்விதமாக, குழந்தைகளுக்குள் இருக்கும் மனத்தாழ்மையையும், நம்பிக்கையையும், ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைபோல வளர்ச்சி அடைவதற்கான ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இயேசு இங்கு குறிப்பிடுகிறார். முழுமையாக சரீரத்தில் வளர்ச்சியடைந்துக்கொண்டிருக்கும் குழந்தைகளும், ஆவியில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களும், இந்த உலகத்தோடு தொடர்பு வைத்துக்கொள்வதினால், கொடூரமான உணர்ச்சியற்றவர்களாக மாறுவதற்கு வாய்ப்புகள்

ஏற்படுகிறது. ஆகவே நம்மை அதிகதிகமாக சுத்திகரிப்பதற்கு இந்த உலகத்தின் காரியங்களுக்கு சற்று விலகியிருப்பது ஏற்றதாக இருக்கும் என்று வேத வசனங்கள் கருதுகிறது. பிள்ளைகள் தங்களுக்கு போதிப்பவர்களை முழுமையாக கவனிப்பது போல் நாமும் நம்முடைய முழு கவனத்தை இயேசுவின் மேலும், அவருடைய போதனைகள் மேலும் வைக்கவேண்டும்.

## துணிகரமாக மற்றவர்களுக்கு இடறல்களை உண்டுபண்ணுதல்

நம்முடைய சகோதரர்களுக்கு மத்தியில் துணிகரமான இடறல்களை ஏற்படுத்தி, அதன் வழியாக பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நாம் என்றுமே முயற்சிக்கக்கூடாது. ஒருவர் மற்றொருவரின் கருத்தை நிராகரித்து, தன்னுடைய கருத்தை உறுதிப்படுத்த முயற்சிக்கும்போது, இப்படிப்பட்ட காரியங்கள் இந்த உலகத்தில் அடிக்கடி நடக்கும். இவ்விதமான காரியங்கள் சபையில் என்றுமே நடைபெறக்கூடாது. "இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்தமனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ, (மத் 18:7)

## இரக்கமும் மன்னிப்பும்

நாம் இரக்கமும், பரிவும் உள்ளவர்களாக இருக்கும்படி இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார். "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் , அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.(மத் 5:7) இதற்கு தொடர்பாக மத்தேயு 18ம் அதிகாரம் 23-24 வசனங்களில், அதிகமாக கடன்பட்ட ஒரு ஊழியக்காரனுக்கு இராஜா காட்டிய இரக்கத்தைப் பற்றிய ஒரு கதையை கூறுகிறார். அந்த ஊழியக்காரனுடைய முழு கடனையும் அந்த இராஜா மன்னித்துவிட்டார். ஆனால் அந்த ஊழியக்காரன் தன்னிடம் கடன்பட்டவனுக்கு இப்படிப்பட்ட இரக்கத்தை காட்டவில்லை. இதன் விளைவாக, இராஜாவினிடத்தில் பட்ட முழு கடனையும் அவன் தீர்க்கவேண்டியதாயிற்று. இந்த கடனை தீர்க்க வழியில்லாததினால் அவன் சிறையில் அடைக்கப்பட்டான். நம்முடைய குற்றங்களுக்காக நாம் தேவனிடத்தில் மன்னிப்பை கேட்கும்போது, நமக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களை மன்னிக்கக்கூடிய மனநிலை நமக்குள் இருக்கவேண்டும் என்ற காரியத்தை இயேசு இந்த உவமையை பயன்படுத்தி நமக்கு போதிக்கிறார். இதுவே தேவனுடைய சட்டமாகவும், அன்பு மற்றும் இரக்கத்திற்கு சரியான செயல்முறையாகவும் இருக்கிறது.

நம்முடைய குணங்களை கிறிஸ்துவுக்குள் வளர்ச்சியடைவதற்கு மற்றவர்களை மன்னிக்கக்கூடிய மனநிலை மிக அவசியமானது. ஏனெனில், இத்தகைய குணம் இல்லாதோர் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்க எந்த வாய்ப்பும் பெறுவதில்லை. "அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து - ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும் ? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு - ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். (மத் 18: 21,22) "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். (மத் 18:15) ஒரு பிரச்சனை உண்டென்று அறிந்து, அதைக் குறித்து பேசி, அதை சமாதானமாக தீர்த்துக்கொள்வதற்கு மனப்பூர்வமாக சம்மதித்தால் மட்டுமே இரண்டு தரப்பினரும், ஒருவருக்கொருவர் மன்னிக்கக்கூடிய நிலையில் இருப்பார்கள். குற்றம் புரிந்த ஒருவரின் செயலினாலோ, வார்த்தைகளினாலோ மற்றவருக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளைப் பற்றி உணராதிருப்பதினால் இப்படிப்பட்ட ஒரு காரியம் மிக அவசியமாக இருக்கிறது.

## விஷயத்தை தெளிவாக புரிந்துக் கொள்ளுதல்

அநேக முறைகள் ஒரு பிரச்சனையை குறித்து இரண்டு கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று முரண்பாடாக இருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு முறையும் இதில் சம்மந்தப்பட்டவர்கள் அந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒருவரை ஒருவர் தெளிவாக புரிந்துக்கொள்ளவேண்டும். ஆயினும், நேரடியாக செயல்படும் காரியங்கள் சமாதானத்திற்கு வழிநடத்தவில்லை என்றால், நமக்கு கூடுதலான உதவி தேவைப்படுகிறது -"அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.(மத் 18: 16,17)

இத்தகையான வழிமுறையை செயல்படுத்த, பாரபட்சம் இல்லாத சாட்சிகள் அல்லது இந்த காரியங்களை கேட்கக்கூடிய சபையின் அங்கத்தினர்கள் நடுநிலையான தீர்ப்பை அறிவிக்க திராணியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒருவேளை சபைகளில் சில பிரிவினைகள் இருக்கும் பட்சத்தில் இவ்விதமான முறையை செயல்முறைப்படுத்துவது கடினமாக இருக்கும். சரியான முறைகளை நடைமுறைப்படுத்தினாலும், இந்த காரியங்களை கேட்கக்கூடியவர்கள் அல்லது விசாரிக்கக்கூடியவர்கள் கூர்ந்து கவனித்து, நியாயமான அல்லது பொருத்தமான தீர்ப்புகள் கொடுக்ககூடிய நல்ல குணங்களும், அவர்களுக்கு மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

விவேகமுள்ள நியாயத்தீர்ப்புக்கு இது மிகவும் அவசியமானது என்று பவுல் தன்னுடைய சொந்த வார்த்தைகளில் நிரூபித்துள்ளார். "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். ஜென்மசுபாவமான

மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார் ? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. (1கொரி2:12-16)

## அன்பு சகலத்தையும் ஜெயிக்கும்

இரண்டாம் உலக போரில் நேரடியாக சந்தித்த இரண்டு எதிரிகளை பற்றிய ஒரு கதை உண்டு. ஒருவர் அமெரிக்காவை சேர்ந்தவரும், மற்றவர் ஜப்பானை சேர்ந்தவருமாக இருந்தார். அந்த போர் முடிந்து நீண்ட நாட்களுக்குபின் இருவருமே குற்றவுணர்வால் அழுத்தப்பட்டார்கள். போரின் போது பகையாக நின்ற இரு குடும்பத்தாரும் கூடிவர ஆயத்தப்பட்டார்கள்.

குறிக்கப்பட்ட நாள் வந்தபோது, வயது சென்ற அந்த இருவரும், கண்களில் கண்ணீர் நிரம்பி கன்னங்களில் வழிய, ஒருவரைஒருவர் கட்டி அனைத்துக்கொண்டு ஒரே நேரத்தில், ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள். இத்தனை வருடங்களாக அவர்கள் அந்த பகையை சுமந்துகொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்தபோது அதை எளிதில் எறிந்துவிட்டார்கள். இவர்கள் இருவரும் தாங்கள் அறியாமலே, இயேசுவின் கற்பனைகளை கடைபிடித்தால் அதினால் வரும் பலன்களை அனுபவித்தார்கள். இந்த யுகத்தில் பகை உணர்ச்சிகளோடு இருக்கும் அநேகர், தேவனுடைய இராஜ்யத்தில் இப்படிப்பட்டவர்களாக காணப்படுவார்கள்.

முடிவாக, அனைத்து பிரச்சனைகளும் சமாதானமாக தீர்க்கப்படுவதற்கு அன்பே சகலத்திலும் மேலோங்கவேண்டும். இந்த தீமையான உலகத்தில் இத்தகைய முறைகள் எப்போதும் சாத்தியமாகுவதில்லை. பிரச்சனையில் அகப்படும் ஒவ்வொரு பிரிவினரும் மாம்சத்தை மேற்கொள்ளும் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை கவனத்தில் வைக்கவேண்டும். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். (1கொரி 13: 4-8)

## தேவன் உங்களோடு இருப்பாராக

விசேஷமாக, இனி நடப்பதை அறியாமல் அல்லது மீண்டுமாக நாம் ஒருவரை ஒருவர் சந்திக்க வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து, சகோதரர்களை விட்டு பிரியும் போது, "சொற்பக்காலம் பிரிந்தாலும் பார்... அது காரும் தேவன் தாங்குவார்" என்று நாம் பாடுவது பொருத்தமாக இருக்கிறது. தெய்வீக பராமரிப்பையும், வழிநடத்துதலின் கீழ் இருக்கும் பெரிதான அழைப்புக்கு பாத்திரவான்களாக தங்களை ஒப்புக்கொடுத்தவர்களின் ஆத்துமாவுக்கு இது மிக அருமையான ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறது.

இதே கோட்பாட்டை நம்முடைய அனுதின வாழ்க்கையில் உள்ள காரியங்களில் செயலாற்ற நாம் அனுமதிக்கலாம். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் மிக பெரிய மாற்றங்கள், தெய்வீக வழிநடத்துதலினாலே நடக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நம்முடைய ஆண்டவர் - "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" (மத் 10:30) என்று மேலும் இதை உறுதிப்படுத்துகிறார். தேவனுடைய புத்திரர்களாக விரும்புவர்களின் மேல் தேவன் கொண்டிருக்கும் வரம்பு மீறிய ஆர்வத்தை இது முக்கியத்துவ படுத்துகிறது. இதை நம்முடைய மனதில் எப்போதும் வைத்துக்கொள்வதே - நமக்குள் தைரியத்தையும் பலத்தையும் பிறப்பிக்கிற ஊற்றாக இருக்கிறது.

துரதிஷ்டவசமாக அநேக கிறிஸ்தவர்கள் இந்த சிறப்புரிமையை நிராகரித்துவிட்டு, வாழ்க்கையில் தனியாக தங்களுடைய யுத்தங்களை நடத்தி, தங்களுடைய சொந்த வழிகளை தேர்ந்துகொண்டு, தனிமையில் வாழ்ந்து, அநேக கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். இவர்கள் முழு இருதயத்தோடு தெய்வீக சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்காமலும், தெய்வீக வழிநடத்துதலின் போது கிடைக்கும் சகல நன்மைகளையும் கவனியாமல் போகிறார்கள்.

"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." - நீதிமொழிகள் 3:5,6 **- Angelophone Hymns**

அன்பும் மன்னிப்பும்



# குற்றங்கள் திருத்தப்படுதல்

உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், - மத்தேயு 18:15

மத்தேயு 18 :15-18 வசனங்களின் வரிசையான விளக்கம்

**Todd Alexander**

தனி நபரின் பாவத்தை முற்றிலும் அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறையின்படி சபையில் உண்டான பாவங்களை அகற்றவும் இயேசு வசனங்களில் வழியாக ஆலோசனைக் கூறுகிறார். "கையை தறித்து போடு", "கண்ணை பிடுங்கி எறி" என்று உருவகமாக சொல்லிய விஷயத்தில், சீஷர்கள் தங்களை சோதித்து அறிந்து பாவங்களிலிருந்து விடுப்படுவது எளிதாக இருந்தது, ஆனால் அதேநேரத்தில் மற்றவர்களுடைய பாவங்களை பொருத்தவரையில் இந்த காரியம் முற்றிலுமாக வித்தியாசப்பட்டது. குற்றம் புரியும் தனிநபரையும், தனிசபையையும் சரியான வகையில் பாதுகாக்க இயேசு சீஷர்களுக்கு ஆலோசனைக் கூறினார். இறுதியாக அவர்களுக்கோ நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ நியாயந்தீர்க்க அவர் அதிகாரம் கொடுக்கவில்லை. ஆயினும், பரிசுத்த ஆவி சபையின் வழியாக பேசும்போது, அதனுடைய தீர்ப்பை இறுதியான தீர்ப்பாக நாம் எற்றுக்கொள்ளலாம்.

மத்தேயு 18:15-18 வசனங்கள் இப்படிப்பட்ட, செயல்முறையை விவரிக்கிறது. இது மூன்று சந்திப்பின் நிலைகளை கொண்டுள்ளது. தனிப்பட்ட சந்திப்பு, சிறிய குழுவோடு சந்திப்பு மற்றும் பொதுவான சந்திப்பு. ஒவ்வொரு நிலையிலும், பரிசுத்த ஆவியை கொண்டு நியாயமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும். மேலும், அங்குள்ள அனைவரும் உள்ளார்ந்த மனதோடு, குற்றவாளிகளின் பதில்கள் மூலம் அங்கு வெளிப்படும் உண்மைகளை சந்திக்க சகல வல்லமையோடும் இருக்க வேண்டும்.

மாம்ச இஸ்ரயேல் வீட்டாருக்கு, இயேசு ஊழியம் செய்ய வந்தபோது, இந்த செயல் முறையை நடைமுறைபடுத்தி காட்டினார். இஸ்ரயேல் தன்னுடைய பாவங்களை போக்க தேவன் முதலாவது தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்பினார் என்றும், அந்த தீர்க்கதரிசிகளுக்கு அவர்கள் செவிகொடுக்காமல் போனதினால் அடுத்து அவர்கள் நம்பி, கனப்படுத்தி, வசனத்தின் மூலமாக இரண்டாவது சாட்சியாக எற்றுக்கொள்ளவேண்டிய அவருடைய ஒரே பேரான குமாரனை அனுப்பினார் என்றும் கூறினார். அவர்கள் மனந்திரும்பி, சரியான பாதையில் செல்ல சகல ஆதாரங்களையும் வைத்திருந்தார்கள். தேவனுடைய கிருபை, அற்புதமான பாதுகாக்ககூடிய அவருடைய வல்லமை, மேசியாவைக் குறித்த தெளிவான தீர்க்கதரிசனங்கள் போன்ற அனைத்தும் அவர்களிடம் இருந்தன. ஆனால் அவர்கள் மனம் வருந்த தவறியதால், இஸ்ரயேலரின் வீடு (மாம்ச இஸ்ரயேலர்கள்) சிதறடிக்கப்படுவதற்கு காரணமாகிவிட்டார்கள்.

இந்த வழிகளில் ஏதோ ஒரு பாதையில் செல்ல இஸ்ரயேல் முடிவெடுத்திருந்தால், அவர்களை பற்றி வேறொரு வரலாறு எழுதப்பட்டிருக்கும். அனைவரின் உணர்வும், அரசியலின் வல்லமை, சுயநலம், மற்றும் பேராசையினால் அனல் மூட்டப்பட்டிருந்ததால், அந்த வழிக்கு செல்லும் எந்த விதமான படிகளையும் அவர்களால் எட்டிபிடிக்கமுடியவில்லை. ஆகவே, தேவனுடைய நீதியானத்தீர்ப்பை பெற்றுக்கொண்டார்கள். அவர்களின் தவறுகளினால் நாம் எச்சரிப்பை பெறவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (1கொரி 10:11)

எந்தவிதமான வல்லமைகளையும், அதனுடைய அழிவுக்குரிய கருவிகளையும் விரும்பாமல் இருக்கவேண்டும் அல்லது அறியாமல் இருக்கும் "சிறுபிள்ளைகளை" போல இருக்கவேண்டும் என்று இயேசு மத்தேயு 18ம் அதிகாரத்தின் துவக்கத்திலேயே தம்முடைய சீஷர்களை கடுமையாக எச்சரிக்கிறார். குறிப்பான இந்த உவமானத்தை பயன்படுத்தி (நடைமுறைப்படுத்துவதற்கு) சகோதரர்களை எச்சரிப்பதற்கு, இயேசு தாமே சுயபரிசோதனை என்னும் திறவுக்கோலை கொடுத்துள்ளார். இருதரப்பினருடைய பிரச்சனைகளை உண்மையில் சமாதானமாக தீர்ப்பதற்கு இருத்தரப்பினரும் சுயநலம் இல்லாதவர்களாக தங்களை தாங்களே ஆராய்ந்து பார்ப்பதற்கு இது மட்டுமே ஒரே வழி. இருதரப்பினர்களின் இருதயத்தில் முன் நிபந்தனையாக தேவைப்படும் குழந்தையைப் போல குணமும், மனத்தாழ்மையும் குறைவுபடுவதினால், மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட செயல்முறை சிலநேரங்களில் தோல்வி அடைந்துவிடுகிறது. மேலும் தேவனுடைய கட்டளைகளை வரிசைப்படுத்தாததினாலும் இவ்வாறு ஏற்படலாம். ஆனால் இந்த செயல் முறையில் எந்த பிழையும் இராது.

## மூன்று வாயிப்புகள்

மனப்பூர்வமாக தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொள்வதற்கு மூன்று முறை வாய்ப்பளிக்கப்படுகிறது என்பதை இந்த வசனம் காட்டுகிறது - குற்றம் புரிந்தவரை தனிப்பட்ட முறையிலும் அடுத்து இருநபர்களோடும் இறுதியாக, சபையோடும் பிரச்சனைக்கூரிய காரியங்கள்

கலந்தாலோசிக்கப்படுகிறது. இந்த மூன்று நிலைகளில் ஏதோ ஒரு நிலையில் குற்றவாளி மனசாட்சியோடு குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவர் பாவத்திற்கு மனம் வருந்துவார். செய்த குற்றத்திற்கு மனம் வருந்தினபின்பு நிச்சயமாக முழு சபையும் மீண்டும் ஒருமித்து மனசமாதானத்தோடு செயல்படும். (லூக் 17:3,4) ஆயினும், ஒரு குற்றம் காணப்படும் போது, மாம்ச பலவீனத்தினாலோ அல்லது மனசாட்சிக்கு கீழ்படியாததினாலோ, குற்றவாளி தன்னுடைய இருதயத்தை பாவத்திற்காக வருந்த அனுமதிக்காவிட்டால், அடுத்த இரண்டு நிலைகளும், அவருடைய குற்றத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தி அதை கலைந்துபோட வாய்ப்பளிக்கப்படும். மேலும், அந்த குற்றவாளி அந்த தீர்ப்பை ஒத்துக்கொள்ளாவிட்டால், அவர் மீண்டுமாக தேவனோடும், சகோதரர்களோடும் கொள்ளவேண்டிய தொடர்பை தானே துண்டித்துவிட முடிவுசெய்துவிட்டார் என்பது உறுதிப்படுகிறது. தேவனுடைய செய்தியையும், செய்தியாளர்களையும் புறக்கணித்த அந்தியோக்கியாவில் உள்ள யூதர்களுக்கு பவுலும், பர்னபாவும் அளித்த தைரியமான பதிலை வாசிக்கலாம் - "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி - முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது, நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்." (அப்போ 13:46) இந்நாளிலும் தேவனுடைய தூதையும் அவருடைய தூதர்களையும் புறக்கணிப்பவர்களுக்கு இங்கு சொல்லப்பட்ட அதே கோட்பாடு உண்மையாக நிலைநிற்கிறது.

"ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள், நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." (மத் 7:2) நம்முடைய சகலவிதமான தீர்ப்புகளிலும், இரக்கம், மனத்தாழ்மை மற்றும் நீதி முழுமையாக காணப்படவேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். மேலும், இதற்கு எதிராக கடுமையான தீர்ப்பளித்தால் அதன் விளைவாக வரும் பலனைக் குறித்தும் எச்சரிக்கிறார். நாம் தனிப்பட்ட முறையில் தீர்ப்பளித்தாலும், மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாதபடிக்கு தீர்ப்பளித்தாலும் இயேசுவின் இந்த கட்டளை செயல்படுத்தப்படும்.

## சட்டத்திற்கு உடன்படாத ஒரு செயல்முறை

மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட செயல்முறையை சட்டத்தின்படி நடத்தினால் அதை செயலாற்றுபவர்களுக்கே தீமையாக முடிந்துவிடும். "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று 10ம் வசனத்தில் சொல்லப்பட்ட எச்சரிப்பு நீண்ட நிழலை வீசுகிறது. பிரச்சனையில் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் இது ஒரு முக்கியமான எச்சரிப்பாக கொடுக்கப்படுகிறது. சகோதரர்கள் மேல் நாம் கொள்ளும் இரக்கமும், தேவனுக்கு முன்பாக நாம் காட்டும் நன்றியுணர்வும், பகையை போக்கும் மாற்று மருந்தாகும். ஒருவேளை இருத்தரப்பினரும் நடந்த சம்பவங்களை மனதில் வைத்துக்கொண்டு மற்றவர்களை குறைவுள்ளவர்களாக பார்த்து, காலத்திற்கு முன்னதாகவே தீர்ப்பளிக்க முயற்சித்து, தங்கள் பக்கத்தில் உள்ள நியாயத்தை எடுத்துரைக்க சில பொய்களை சொல்லி தங்கள் வசமாக அனைவரையும் திசைத்திருப்ப முயற்சித்தால், இந்த செயல்முறை பேருக்காக நடத்தப்பட்ட கூட்டமாகிவிடும். இப்படிப்பட்ட செயல்கள் ஆவிக்குரிய தீங்கை ஏற்படுத்தும். "அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது..."(மாற் 7:6) என்று சட்டத்தின் அடிப்படையில் தம்மை சந்திக்க வந்திருந்த பரிசேயர்களை பற்றி இயேசு குறிப்பிட்டார். நம்மை பார்த்து இப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லாதபடி நடந்துகொள்ளவேண்டும். மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நடைமுறையை கண்காணிக்கக்கூடிய இறுதியான பார்வையாளர் நம்முடைய பரலோக பிதா என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். அவர் நன்மையையும், தீமையையும் காண்கிறவர் என்பதை நாம் முன்னதாகவே அறிந்துகொள்ளவேண்டும். இப்படிப்பட்ட பிரச்சனைகளை அனுமதித்து நம்முடைய தரத்தை சோதித்து மதிப்பிடுகிறார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

ஒரு குற்றவாளி தன்னுடைய இருதயத்தில் உள்ள உள்ளார்ந்த நிலையின் நோக்கத்தை காண்பதற்கு மத்தேயு 18ம் அதிகாரம் வாய்ப்பளிக்கிறது. குற்றம் சாட்டப்பட்டோர் அல்லது இருத்தரப்பினர்கள் அல்லது அந்த வழக்கை கொண்டுவந்தவர்கள், தங்களை சரியாக சுயபரிசோதனை செய்யாவிடில் இந்த நடைமுறை பயனற்றதாக இருக்கும்.

## வசனம் -15

*உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.*

விருப்பத்தேர்வு அல்லது காரியங்களை தேர்ந்தெடுப்பதற்கு மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நடைமுறையை பயன்படுத்தக்கூடாது. அதன் முக்கியத்துவத்தை அந்த வார்த்தையில் பொருள் நமக்கு விளக்குகிறது. "குற்றஞ்செய்தல்" என்ற

வார்த்தை "ஹமர்ட்டானோ" என்று கிரேக்க வினை சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. சகோதரர்களுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள தொடர்பை துண்டிக்கக்கூடிய பயங்கரமான பாவத்திற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு முரண்பாட்டின் போதும் இந்த நடைமுறையை நாம் பயன்படுத்தக்கூடாது. ஆனால் மிகவும் முக்கியமான பிரச்சனைகளுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். கலாத்தியர் 5:19-21ம் வசனங்களிலும் (மாம்சத்தின் கிரியைகள்), நீதி 6:16 -19ம் வசனங்களிலும் (தேவன் அருவருக்கும் ஏழு காரியங்கள்) வரிசையாக சொல்லப்பட்ட குற்றங்களில் அகப்படுவோருக்கு இந்த செயல் முறையை நடைமுறைப்படுத்தலாம்.

இரண்டு தனிநபர்களும் சந்திப்பதற்கு முன் ஒருவர் மற்றவரை பற்றி தீமையான காரியங்களை அனுமானிப்பதை முதலாவது தவிர்க்கவேண்டும் என்று பொதுவாக அறிவு நுட்பம் அதிகாரத்துடன் கூறுகிறது. ஒருவேளை இப்படிப்பட்ட மனநிலையோடு இருவரும் சந்தித்தால், கருத்துவேறுபாடுகள், தவறான யூகங்கள் போன்றவைகளுக்கு வழிவகுக்கும். இவைகளை தவிர்த்துவிட்டு, சாதாரணமான பேச்சுவார்த்தைகளினால் இதற்கு தீர்வுக் காணலாம். அதன் விளைவு என்னவாக இருந்தாலும் சரி, முதல் படியாக இருத்தரப்பினரும் சுயபரிசோதனை செய்யவேண்டும். முக்கியமான பாவங்களில் அகப்படுவோர்களுக்கு மட்டுமே இப்படிப்பட்ட காரியங்களை செயல்முறைப்படுத்தவேண்டும் என்பதை "ஒரு சகோதரனை ஆதாயப்படுத்திகொள்ள" வேண்டும் என்ற இயேசுவின் வார்த்தைகள் நமக்கு மீண்டுமாக வலியுறுத்துகிறது.

## வசனம் -16

*அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.*

தேவனுடைய ஜனங்களின் சுத்திகரிக்கப்பட்ட செயலின் வழியாக பரிசுத்த ஆவி வெளிப்படுத்தப்படுகிறது. ஒருவர் மத்தேயு 18ம் அதிகாரத்தில் உள்ள செயல் முறையை நடைமுறைபடுத்த துவங்கும்போது, அது மற்றவருக்கு அதிருப்தியை ஏற்படுத்தினால், ஞானத்தின் அடிப்படையில் இணைந்து செயல்படும் ஒரு குழுவின் வழியாக அடுத்த வாய்பபை இயேசு ஏற்படுத்துகிறார். அதற்குபின், அந்த சூழ்நிலையில் இயேசுவும் அவர்களோடு இருப்பதாக வாக்களிக்கிறார். (மத் 18:20) இந்த நிலையில், குற்றம் சுமத்தப்பட்டவர் தன்னுடைய வழியில் இருக்கும் பாவங்களை காண்பதற்கு அநேக காரியங்கள் வெளிப்படுத்தப்படலாம்.

இவைகள் அனைத்தும் சமய சடங்குகளின் அடிப்படையிலோ அல்லது சட்டத்தின்படி கொடுக்கப்படும் கண்டனத்தின் அடிப்படையில் நடைபெறக்கூடாது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கருத்துவேறுபாடுகளும், உறவுகள் பலவீனமாகும்போதும், மிக பாதுகாப்பாக, தனிப்பட்ட முறையில் குறைவுள்ள இடங்களை பழுதுபார்த்து, குற்றங்களை இன்னதென்று உணர்த்தி மீண்டுமாக ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இது சபையின் நிலையை அடையும்போது, அது பொதுவான காரியமாகிவிடுகிறது. ஆகவே அனைத்து பிரச்சனைகளை இரண்டாவது நிலையிலே தீர்த்துக்கொள்ள அதிகமாக முயற்சிக்கவேண்டும்.

## வசனம் - 17

*அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.*

நமக்கு அடுத்தபடியாக ஒரு வாய்ப்புண்டு என்று எண்ணி ஒரு சகோதரனாவது, ஒரு சகோதரியாவது இரண்டாவது படியில் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தால், அடுத்த படியில் அங்கு சொல்லப்பட்ட குற்றத்தை அவர்கள் புரிந்தார்கள் என்றும் அதற்கு அவர்கள் மனம்வருந்தவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால் அநேக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை உணரவேண்டும். ஆகவே இந்த இரண்டாவது நிலையிலேயே குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அவர்களுடைய இறுதியான நிலையை ஒப்புக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த காரியத்தைக் குறித்து சபையின் முடிவு அறிவிக்கப்படும்போது, அந்த தீர்ப்பு சுத்திகரிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்களின் தீர்ப்பாக எண்ணப்படுகிறது.

சபையின் வழியாக தேவனுடைய சத்தம் கேட்கப்பட்டு, கனப்படுத்தப்படுகிறது. இப்படியாக, தேவனுடைய சித்தம் செய்வதற்கும் அவருடைய நாமத்தை கனப்படுத்துவதற்கு மட்டுமே சபை முழுமையாக முயற்சிக்கவேண்டும். பட்சாபாதம் பார்ப்பதற்கும், குரோதத்தை வெளிப்படுத்துவதற்கும், துன்மார்க்கத்தை நடப்பிப்பதற்கும், பேச்சு மாறுவதற்கும், விட்டுகொடுப்பதற்கும், தீமையை ஊகிப்பதற்கும் இங்கு இடமில்லை. மூப்பர்களுக்கும், கண்காணியார்களுக்கும் தேவையான தகுதிகளை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது சபையைப் பற்றியும் அதனுடைய வேலைகளைப் பற்றிய முக்கியத்துவத்தையும் பற்றி அவர் குறிப்பிடுகிறார். " தேவனுடைய வீடு ...... அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது." (1தீமோ 3:15) அடிப்படை போதனைகளை சத்தியத்தின்படி நிலைநிறுத்துவதிலும், பரிசுத்தமான நடத்தையிலும், நீதியான தீர்ப்புகளை அங்கிகரிப்பதிலும் சபைக்கு முழு பொறுப்பும் அதிகாரமும் கொடுக்கப்படுகிறது.

இஸ்ரயேலின் பிரதான ஆசாரியர்கள் ஊரீம் தும்மீம் வழியாக தேவனிடம் ஆலோசனைகளை கேட்பதற்கு எவ்வளவு நிதானமாக செயல்பட்டார்களோ, அவ்வாறே மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட நடைமுறையை செயல்படுத்தவேண்டும். (யாத் 28:30)

சம்மந்தப்பட்டவர்களின் செயல்களை கண்டு உண்மை என்று நிரூபிக்கப்பட்ட பின்னரே சபை தீர்ப்பளிக்கவேண்டும். சபையானது இருதயத்தை நியாயந்தீர்க்கமுடியாது. ஏனெனில் அது தேவனும், நம்முடைய ஆண்டவராம் இயேசு மட்டுமே அறிந்த ஒன்றாகும். ஆயினும், மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட செயல்முறை, வாக்குவாதத்தில் சம்மந்தப்பட்டிருக்கும் இருத்தரப்பினருடைய இருதயத்தின் நோக்கங்களையும் வெளிப்படுத்தும். "ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்."(மத் 7:20) என்று இயேசு கூறுகிறார். நம்முடைய இருதயத்தின் கனிகள் தேவனுக்கும், இயேசுவுக்கும், பரலோகத்திலிருக்கும் தூதர்களுக்கு முன்பாக எப்பொழுதும் காட்சியளிக்கிறது. (1கொரி 4:9)

கிறிஸ்துவின் மணவாட்டியாக மாற முயற்சிப்பவர்களின் குணத்தைப் பற்றி பேதுரு விவரிக்கிறார் -

"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது." (1பேது 3:3,4)

"இருதயத்தில் மறைந்திருக்கும் குணங்களின்" வளர்ச்சி அடைவதற்கு நாம் ஒவ்வொருவருக்கும் அநேக வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தி, எலெயேசரிடமும் அதற்கு பின் ஈசாக்கிடமிருந்தும் பொன் உடமைகளையும், புதிய வஸ்திரங்களை பெற்ற ரெபேக்காளை போல நாமும் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தவேண்டும். விசேஷமாக சரீரத்திற்குள் நாம் அனுபவிக்கும் நம்முடைய சோதனைகள் மற்றும் கடுமையான அனுபவங்கள் நிச்சயமாக நம்முடைய குணங்களை வளர செய்யும் பரிசோதனைகளாக இருக்கும். ஆகவே நாம் நீடிய பொறுமையோடு காத்திருந்து தேவனுடைய கிருபையையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோம்.

## வசனம் -18

*பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழக்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

இயேசு தான் சொல்லிய கட்டளையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த "மெய்யாகவே" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். இறுதியாக நம்முடைய ஆண்டவர் தீர்ப்பளித்தாலும், சபையாகிய சரீரத்தின் வழியாகவே அவருடைய ஆவி செயல்படுகிறது.

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது மனப்பூர்வமான பாவம் செய்தார்கள் என்று நாம் நம்பினால், அவைகள் உண்மையா என்று அறிந்துகொள்வதற்கு முதலில் நாம் தனிப்பட்ட முறையில் அவர்களிடம் அணுக முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சி பயனற்றுபோனால், ஒருவர் அல்லது இருவரோடு ஆலோசித்து இவைகள் உண்மையா என்று அறிந்துக்கொள்ளவேண்டும். இறுதியாக, இந்த பிரச்சனையை நாம் சபைக்கு கட்டாயமாக கொண்டுவரவேண்டும். இதை செய்யும் பட்சத்தில் ஒவ்வொரு படிகளிலும், மனம் வருந்தும் போது மன்னிப்பு என்ற விரும்பிய பலனையும், அதை தொடர்ந்து மகிழ்ச்சியும் உண்டாகவேண்டும்.

மத்தேயு 18ம் அதிகாரத்தில் இந்த செயல்முறையை ஒரு குழந்தையைபோல அதாவது மனத்தாழ்மையோடும், மன்னிக்கும் மனப்பான்மையோடும் எதிர்நோக்க சொல்லுகிறார். புது சிருஷ்டி வெற்றிடத்தில் அல்ல மாறாக, திறமையானதும், சில நேரங்களில் விரோதமான சூழ்நிலைகளிலும் வளர்ந்துக்கொண்டிருப்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். இங்கு மூன்று எதிராளிகளான உலகம், மாம்சம் மற்றும் சாத்தானின் செயல்பாடுகள் முழுமையாக உள்ளது. இவர்கள் காத்திருந்து கிறிஸ்துவின் சரீரத்தை தனித்தனியே பிரித்து ஜெயிக்கும் வாய்ப்புகளுக்காக காத்திருக்கிறார்கள். ஆகவே சபையில் உள்ள ஒவ்வொருவருடைய நன்னடைக்கைகளும், சீராக காத்துக்கொள்ளப்பட்டு,சுய - கட்டுபாட்டோடு, விழித்திருந்து ஜெபத்தோடு கவனிக்கப்படவேண்டும்.

மாம்ச இஸ்ரயேல் வீட்டாரை மன்னிப்பதற்கும், அவர்களை நேசிப்பதற்கும் இயேசு கொண்டுள்ள உணர்வுகளே நம்மை ஊக்குவிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இயேசு தன்னந்தனியாக பிதாவையும் அவருடையவர்களையும் நேசித்தார். மத்தேயு 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட செயல் முறையில் முதலில் நாம் நம்மை கவனித்து பார்க்க கட்டளை கொடுக்கிறார். நம்முடைய எதிராளியிடம் நாம் அன்பையும் மன்னிப்பையும் காட்ட விரும்பினால், அல்லது அதுவே நம்முடைய நோக்கமாக இருந்தால், அனைவரையும் தேவன் ஆசீர்வதிப்பதற்கு சகலத்தை மேற்கொள்வார் என்பதை அறிந்து தைரியத்தோடும் நம்பிக்கையோடும் நாம் தொடர்ந்து செல்லலாம். (ரோம 8:28)

ஒருமைப்பாட்டின் அவசியம்

# எயோதியாள் மற்றும் சிந்திகேயாள்



ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே,எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். - பிலிப்பியர் 4:1-4

**Todd Alexander**

விழுந்துபோன மனுக்குலத்தின் அங்கமாக இருக்கும் நாம், சீக்கிரத்திலோ, காலம் தாமதித்தோ, ஏதோ ஒரு பிரச்சனையில் நாம் அகப்படுகிறோம். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட சபை அங்கத்தினர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்கள் இடையில் தற்காலிகமான பிரச்சனைகள் அடிக்கடி வந்துபோகும். இதுவே வாழ்க்கையின் உண்மையாக இருப்பதால், நம்முடைய வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை சமாதானமாக தீர்த்துக்கொள்வதற்கு தேவையான காரியங்களை ஆலோசிக்கவேண்டும்.

ஆதி சபையில் இப்படிப்பட்ட பிரச்சனை எழும்பினதைப் பற்றி பவுல் மறைமுகமாக குறிப்பிடுகிறார். பிலிப்பியருக்கு எழுதிய நிரூபத்தில் எயோதியாள் (யூ - ஓஹ - டிஹ் -அஷ்) மற்றும் சிந்திகேயாள் (சின்- திஹ- கீ) என்ற இரு சகோதரிகளை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. எயோதியாள் என்பதற்கு மகிழ்வூட்டும் நறுமணம் என்றும் சிந்திகேயாள் என்பதற்கு அதிர்ஷ்டம் என்றும் பொருள். இந்த இரண்டு சகோதரிகளும் கிறிஸ்துவுக்குள் யாராக இருந்தார்கள் ? துரதிஷ்டமாக இவர்களை பற்றி வேதாகமத்தில் வேறு எந்த விபரங்களும் கொடுக்கப்படவில்லை. ஆகவே எந்த விதமான யூகங்களுக்கும், போதுமான ஆதாரங்கள் திரட்ட வாய்ப்பில்லை. இவர்களுக்கு இடையில் எழும்பிய பிரச்சனையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். மேலும் தன்னுடைய பொதுவான நிரூபத்தில் இதை பற்றி எழுதுவது மிகவும் அவசியம் என அவர் எண்ணினார். இதற்கு காரணம் என்ன ?

இப்படிப்பட்ட கருத்துவேறுபாடுகள் தொற்றுநோய் போலுள்ளது என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். ஒரு சபையின் அங்கத்தினர்களுக்குள் இருக்கும் பிரச்சனைகள் பரவலாம். இதை தடுக்காத பட்சத்தில் சபையில் பிரிவுகள் ஏற்படலாம். ஆகவே இதை குறித்து கவலைப்பட்ட பவுல் அந்த நிரூபத்தில் இதை குறிப்பிட்டார். ஏனெனில் பவுல், சபையின் ஒருமனப்பாட்டை பொருத்தவரையில் மிக கவனமுள்ளவராக இருந்தார்.

"என் உடன்வேலையாட்களோடுங்கூட சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்," (வசனம் 3) என்று பவுல் அந்த இரு சகோதரிகளைக் குறித்து நற்சாட்சி கொடுப்பதினால் நிச்சயமாக இவர்கள் இருவரும் பாராட்ட தகுதிபெற்றவர்களாக இருக்கவேண்டும். மேலும் சபையின் வேலைகளை செய்வதில் இவர்கள் முக்கிய பங்கை பெற்றார்கள் என்று இந்த வசனங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இருவரும் சபையில் பிரபலமானவர்களாக இருந்த காரணத்தினால் பவுல் இவர்களுக்கு இடையில் உள்ள பிரச்சனைகளை பொதுவாக எழுதியிருக்கலாம்.

பவுல் பாரபட்சமாக இராமல், இருவரையும் ஒரே விதமாக அழைக்கிறார். இருவரும் தங்களுடைய செயல்பாடுகளை சற்று திருத்திக்கொள்ளுவதற்கு அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் வெகு தூரத்தில் பிரயாணத்திலிருந்த பவுலின் காதுகளில் எட்டும் அளவுக்கு இந்த பிரச்சனை பெரிதாக (பிரிவினைகளை உண்டுபண்ணுதல்) இருந்ததினால் அவர் தன்னுடைய நிரூபத்தில் இவர்களுக்கு ஆலோசனை சொன்னார். "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக இருங்கள்" என்று கூறுகிறார். வேறு எந்த காரியத்திலும் அல்ல கர்த்தருக்குள் மட்டுமே ஒரே சிந்தையாக இருங்கள் என்று வலியுருத்துகிறார். (வசனம் -2)

பிரச்சனையை தீர்ப்பதற்கு முதலாவதாக செய்யக்கூடிய காரியம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாக" இருப்பதற்கு நாம் ஒத்துக்கொண்டால், நாம் ஒருவருக்கொருவர் இசைந்திருக்கலாம். எந்த காரியத்திலேயும் நம்முடைய ஆண்டவரை நடுவே கொண்டுவந்தால், சகலமும் தெளிவு பெற வழிவகுக்கும். தேவனுக்கு முன் நாம் எதையும் மறைக்கமுடியாததினால் அங்கு சுயநலம், வஞ்சகம் மற்ற எந்த தீமைகளும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. தேவனை மத்தியில் கொண்டுவரும் அனைத்து காரியங்களிலும் பரிசுத்த ஆவியின் வல்லமை முழுமையாக செயல்படும். பிரச்சனையில் அகப்பட்டிருக்கும் இரு சகோதரர்களும் தேவனையும் அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமையின் செயல்பாடுகளையும் தங்களுடைய பிரச்சனையை தீர்வு காணும்படி அனுமதிக்க ஒத்துக்கொண்டால் அவர்கள் ஓரளவுக்கு ஒப்புரவாகிவிட்டார்கள்.

பவுல் தன்னுடைய பொதுவான ஆலோசனையை மூன்றாவது குழுவுக்கு உதவியாக விண்ணப்பிக்கிறார். மூன்றாம் வசனத்தில் -" அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்." இங்கு "என் உத்தம கூட்டாளியே" என்று பவுல் யாரை குறித்து பேசுகிறார் என்று நமக்கு தெரியவில்லை. ஒரு வேளை இவர் எப்பாபிராத்தா அல்லது லூக்கா அல்லது சீலாவாகவும் இருந்திருக்கலாம். (அப் 16:9) அல்லது சபையில் உள்ள ஒரு சகோதரரை கூட "என் உத்தம கூட்டாளியே" என்று அழைத்திருக்கலாம். இந்த விஷயத்தில் பவுல் எழுதினதற்கு விளக்கத்தை காணலாம். "உண்மையில் உத்தம கூட்டாளியே" என்பது யாரை குறிக்கும் ? பவுலின் கேள்விக்கு சகோதரர் ரசல் பதில் அளிக்கிறார் - "உத்தம கூட்டாளிகள் எப்போதும் மற்றவர்களுடைய கஷ்டங்களில் உதவி செய்து, அவர்களுக்குள் ஒருமனப்பாட்டை, ஆவியின் ஐக்கியத்தையும் தேவனுடைய சமாதானத்திற்குள் தக்கவைத்து அவருடைய நாமத்தின் உண்மையான அர்த்தத்தை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்கவேணடும்." (Reprint, p. 3128)

பிரச்சனைகளை தீர்வு காணபது என்ற தலைப்புக்கு எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் உள்ள கருத்துவேறுபாடுகள் ஒரு நல்ல துவக்க நிலையாக இருக்கிறது. "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்." (பிலி 2:1-2)

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஒருமனப்பாட்டில் எப்படியாக அமைக்கவேண்டும் என்பதை பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். உண்மையில், இங்கு சொல்லப்பட்ட வசனத்தில் பிரச்சனைகளை தீர்த்து, ஒருமனப்பாட்டில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நான்கு முக்கியமான கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

## 1. கிறிஸ்துவின் மாதிரி

பவுல் துவங்கும்போது முதலாவது "கிறிஸ்துவுக்குள் நம்மை ஊக்குவிக்கப்படவேண்டும்" என்று குறிப்பிடுகிறார். ஏனெனில், கிறிஸ்து நமக்காக விட்டு சென்ற மாதிரியை நாம் மையப்படுத்தவேண்டும் என்று விரும்புகிறார். நாம் ஒருவரை ஒருவர் நடத்திக்கொள்ளும் விதங்கள் கிறிஸ்துவை போல இருக்கவேண்டும் என்று அவர் நம்மை வற்புறுத்துகிறார். "கிறிஸ்து இயேசுவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலி 2:5) இந்த காரியத்தை துல்லியமாக கடைபிடிக்கும்படி பவுல் எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் பரிந்துரைத்தார். பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இயேசுவின் மனநிலை எப்படியாக இருந்தது ? தேவனுடைய சித்தத்தை செய்வதற்கும், மற்றவர்களுக்கு பணிபுரிவதற்கும் தன்னுடைய எல்லா உரிமைகளையும் விட்டுகொடுப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலி 2:6,7)

மாம்ச சரீரத்தை பெறுமுன் இயேசு பெற்றிருந்த வல்லமையையும், நிலைமையையும் நம்முடைய கற்பனைக்கும் எட்டாததாக இருந்தாலும், அது மிகவும் மகிமையானது என்று நாம் அறிவோம். (யோவா 17:5) அவை எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, மனுக்குலத்திற்காக தம்முடைய ஜீவனை கொடுக்க இந்த பூமிக்கு வந்தார். மற்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற அவருடைய சொந்த விருப்பங்களை புறக்கணித்தார். இப்படிப்பட்ட ஒரு மனநிலையை நாம் கொண்டிருக்கவேண்டும். இயேசுவின் சுயநலமற்ற மாதிரியை நாம் கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, தனிப்பட்ட முறையில் மற்ற சகோதரர்களோடு நமக்கு பிரச்சனைகள் ஏற்படுவது நமக்கு ஏற்றதாக இருக்குமோ ?

மற்றவர்களுக்காக பலிசெலுத்துவதில் அப்போஸ்தலனாகிய பவுல் தாமே ஒரு அற்புதமான மாதிரியாக இருக்கிறார்." பயனுள்ள நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் அவர் கிறிஸ்துவுக்குள் பெற்றிருந்த சுயாதீனத்தை எப்பொழுதும் பயன்படுத்த விரும்புவதில்லை. எந்த விதமான காரியத்திற்காகவும், கோட்பாடுகள் என்றுமே புறக்கணிக்கப்பட்டதில்லை ஆனால் மற்றவர்களின் விருப்பத்திற்காக தனிப்பட்ட உரிமைகளும் சுயாதீனமும் தவிர்க்கப்படலாம். அப்போஸ்தலனாகிய பவுல் தெய்வீக நன்மைகளுக்காக கோட்பாடுகளை பாதுகாக்க எவ்வளவு போராடவேண்டியதாக இருந்ததோ, அவ்வளவு போராட்டங்களை மேற்கொண்டார். (கலா 2:5,11)ஆனால் பூமிக்குரிய உரிமைகளையும், வாய்ப்புகளையும் கிறிஸ்துவின் நிமித்தமும், அவருடைய சபையின் நிமித்தமும் பலிசெலுத்தின காரியத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அடுத்த இடத்தை பிடித்து முழு சபைக்கும் ஒரு உயர்ந்த மாதிரியானார். " (Reprints, p. 2119)

## 2. செயலாற்ற தூண்டுகிற தேவனுடைய அன்பு

"அன்பினால் ஊக்குவிக்கப்படும் ஏதேனும் வல்லமை" என்று பவுல் இரண்டாவது கருவியை விவரிக்கிறார். அன்பு என்பது உறவுகளில் ஏற்படும் ஏதோ ஒரு உணர்ச்சிவசமான விளைவுகள் அல்ல, நம்முடைய வாழ்க்கையை ஊக்குவிக்கும் வல்லமையாக இருக்கிறது. இயேசுவை எடுத்துக்கொள்ளலாம் - "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13) சரியான அர்ப்பணிக்கப்பட்ட மதிப்பை நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்றிருந்தால்,

நிச்சயமாக நம்முடைய ஜீவனை நம்முடைய சகோதரர்களுக்காக ஒப்புக்கொடுப்போம்.

" அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (1யோவான் 3:16) ஒருவருக்காக ஜீவனை கொடுப்பதற்கு முன்வந்தபின், அதே நேரத்தில் அந்த நபரோடு பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொள்வது, அறிவுள்ள சிந்தையாக இருக்குமா ? நிச்சயமாக இல்லை, நாம் அதிகதிகமாக "தேவனுடைய அன்பை ... மனதார உணரும்" போது நம்மால் முடிந்தவரைக்கும் நம்முடைய சகோதரர்களுடைய வளர்ச்சிக்கு ஏதுவான சகலவிதமான காரியங்களையும் செய்வதற்கு நம்முடைய விருப்பமும் வளர்ச்சியடையும். தேவன் அவருடைய அன்பையும், ஆசீர்வாதங்களையும் நம்மேல் பொழிவதை போல நாமும் நம்முடைய சகோதரர்களிடம் அன்பையும், ஆசீரையும் வழங்கவேண்டும். தேவனுடைய அன்போடு நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்தால், பிரச்சனைகளும், கருத்துவேறுபாடுகளும், பிரிவினைகளும் மறைந்து ஒற்றுமை பலமாக வளர்ச்சியடையும். "இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்."(கொலோ 3:14) நம்மனைவரையும் ஒன்றுசேர்த்து ஒட்டவைக்கக்கூடிய பசை அன்பு.

## 3. ஒரு மனப்பாட்டோடே நிரந்தரமாக தங்கும் பரிசுத்த ஆவி

அடுத்து பவுல் "பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தைப் " பற்றி குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அங்கத்தினர்களுக்கு இருக்கவேண்டிய தேவனுடைய வல்லமை மற்றும் அவர் பகிர்ந்தளிக்கும் ஆவியைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். இந்த இரண்டு காரியத்திலும் ஒருமனப்பாட்டின் ஆவி மட்டுமே சமாதானத்திற்காக போராடக்கூடியதாக இருக்கிறது. ஆகவே "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபே 4:3) என்று பவுல் எபேசியர்களை எச்சரித்தார்.

இது சவாலுக்குரிய ஒரு அறிவுரையாகவே இருக்கிறது. அநேகவிதமான மாம்சத்தின் குழுவினர் தேவனுடைய ஜனங்களாக இருக்கிறார்கள். அவர்கள் வளர்ச்சியடைவதிலும், பின்னனியிலும், பொருளாதாரத்திலும், கல்வியிலும், வயதிலும், ஆண், பெண் என்றும் வித்தியாசப்படுகிறார்கள். இவர்களுக்கு வேறுப்பட்ட ருசிகளும், விருப்பங்களும், தனிப்பட்ட மற்றும் சமுதாய தேவைகளும் உண்டு, இப்படிப்பட்ட வித்தியாசம் உள்ள குழுவினரிடம் ஒருமனப்பாட்டை எப்படி எதிர்ப்பார்ப்பது ? தேவனுடைய ஆவியினாலும், அவருடைய அன்பினால் மட்டுமே அனைவரையும் ஒன்றுசேர்க்கமுடியும்.

## 4. பரிவு மற்றும் இரக்க குணங்களில் உள்ள ஒரு மனப்பாடு

நாம் ஒருவரை ஒருவர் பரிவோடும் இரக்கத்தோடும் கையாளவேண்டும். மிகுந்த கிருபையாக இந்த குணங்களை நாம் தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கிறோம். பரலோக பிதா நம்மை இவ்வாறாக நடத்தும் விதமானது, நாமும் மற்றவர்களிடம் இப்படியாக நடந்துகொள்ளவேண்டும் என்ற காரியத்தை நமக்கு ஊக்குவிக்கவேண்டும்.இரக்கமற்றவர்கள் பிரிவினைகளையும் பிரச்சனைகளையும் தூண்டிவிடுவார்கள். ஆயினும், சகோதரர்கள் இரக்கமும், பரிவும் உள்ளவர்களாக இருந்தால் அனைத்து பிரச்சனைகளும் இலகுவாகி, கருத்துவேறுபாடுகளும் கரைந்துவிடும். "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருர் மன்னியுங்கள். "(எபே 4:32)

பவுல் தன்னுடைய எச்சரிப்பை தொடருகிறார் - "நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." (பிலி 2:2-4) நம்மை பிரிக்கும் சுயநலத்தையும், போட்டிகளையும் முற்றிலுமாக அகற்றும்படி பவுல் நம்மை எச்சரிக்கிறார். நாம் அனைவரும் ஒரே சரீரத்திற்குரிய சகோதர, சகோதரிகள், ஆகவே, ஒவ்வொரு அங்கத்தினரும் இதை நன்கு உணர்ந்து மற்ற அனைவரின் ஆரோக்கியமான நிலைக்காக உழைப்போம்.

இந்த கோட்பாடுகள் அனைத்தும் வல்லமையுள்ளதும், மிகவும் அற்புதமானவைகளுமாக இருக்கிறது. மேலும் சிலர் இந்த கோட்பாடுகளை தழுவுவதற்கு கடினமாக இருக்கும். ஆயினும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பிரச்சனைகள் தோற்றங்களில் மிக பெரிய மாற்றங்கள் ஏற்படுத்தும். மற்றவர்கள் செய்த காரியங்களை வைத்தோ, அவர்கள் பேசின காரியங்களை வைத்தோ நாம் அவர்களைப் பற்றி தவறான உணர்வுகளை வளர்த்துக்கொள்கிறோம். அவர்கள் முற்றிம் தவறானவர்கள் என்றும் அவர்களுக்கு கட்டாயம் திருத்தம் தேவைப்படுகிறது என்று நாம் முடிவு செய்யலாம். அவர்களுடைய நோக்கங்களை கூட நாம் நியாயந்தீர்க்கலாம். இப்படிப்பட்ட கருத்துவேறுபாட்டின் ஆவியை உள்ளே வைத்துக்கொண்டால், நமக்குள் இருக்கும் வேறுபாடுகளை சமாதானமாக தீர்த்துக்கொள்வது மிக கடினமாகிவிடும். நாம் அர்ப்பணிக்கப்பட்ட தோற்றத்தை இழந்து, கீழ்நோக்கி தொடர்ந்து செல்லக்கூடிய கண்ணியில் பலமாக சிக்கிவிடுகிறோம். "அரணான பட்டணத்தை வசப்படுத்துவதைப்பார்க்கிலும் கோபங்கொண்ட சகோதரனை வசப்படுத்துவது அரிது, அவர்களுடைய

விரோதங்கள் கோட்டைத்தாழ்ப்பாள்கள் போலிருக்கும்." (நீதி 18:19)

## சண்டையிடுகிற நிலையிலிருந்து மனந்திரும்புதல்

சரீரத்தில் அங்கத்தினர்கள் இப்படிப்பட்ட குணத்தை வளர்க்கும் ஒருவரை கண்டால், அவர்கள் பவுலின் மாதிரியை பின்பற்றி, அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். சில நேரங்களில் ஒரு சகோதரரிடமிருந்தோ, சகோதிரியிடமிருந்தோ வரும் ஒரு புதிய கருத்து, தவறான ஒரு காரியத்தை திருத்த உதவிசெய்யலாம். அனைவரும் அறியாமல் தவறுகள் செய்துகொண்டிருக்கிறோம். ஒருவருக்கொருவர் உதவி செய்தால் மட்டுமே நாம் இந்த தவறுகளை குறைத்துக்கொள்ளமுடியும். ஆயினும், சாதுரியமாக செயல்படவேண்டும். சகோதரர்கள் மத்தியில் உள்ள அனைத்து பிரச்சனைகளையும் நாம் தீர்த்து விடலாம் என்று எண்ணுவது மிக தவறு. ஒரு இடத்தில் நம்முடைய வேலையை மட்டும் பார்த்துக்கொள்ளும்படி பவுல் கூறுகிறார். (1தெசலோ 4:11) நமக்கு சம்மந்தப்பட்ட வேலையாக இருந்தால் மட்டுமே நாம் அதில் தலையிடவேண்டும். சபை ஒருமனப்பட்டு அதில் ஈடுபட்டிருந்தால், அந்த பிரச்சனையில் தலையிடுவது ஒவ்வொரு அங்கத்தினருடைய வேலையாக இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்தை முதல் கருவியாக நினைவில் கொள்ளும்படி பவுல் நமக்கு கூறியிருக்கிறார். நம்மோடு பிரச்சனை செய்து கொண்டிருக்கும் ஒருவரை இயேசுவால் மிகவும் நேசிக்கப்பட்ட, கிறிஸ்துவின் சரீர அங்கத்தினராக நம்மால் காணமுடியுமா ? நிச்சயமாக, நாம் ஒவ்வொரு முறையும் அவரை காணும் போது இப்படிப்பட்ட மனநிலையில் அவசியம் இருக்கவேண்டும். "இவரைக் குறித்த என்னுடைய சிந்தையை இயேசு அங்கீகரிப்பாரா ? நான் அவர்களை பற்றி சொன்னகாரியங்களையும் அவர்களை பற்றி நினைத்த காரியங்களையும் இயேசு அங்கீகரிப்பாரா ? இயேசு அவருக்காகவும் மரித்தாரா ? என்ற கேள்விகளை நமக்குள் கேட்டுக்கொள்ளலாம். இந்த கேள்விகள் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கவேண்டிய ஐக்கியத்தில் நம்மை கொண்டுவந்து சேர்க்கும்.

ஒருவேளை பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நாம் எடுத்த முயற்சிகள் புறகணிக்கப்பட்டால் ? இந்த காரியத்தை குறித்து ஒரு சகோதரனுக்காவது, சகோதரிக்காவது விருப்பம் இல்லாதிருந்தால் ? அப்போது நம்முடைய முயற்சிகளை தளர்த்தி விட்டு, முடிந்த அளவுக்கு முயற்சிகளை செய்துவிட்டோம் என்ற சிந்தையோடும், முழு நம்பிக்கையோடும் தேவனுடைய கரத்தில் பிரச்சனைகளை ஒப்புக்கொடுக்கலாம். ஏனெனில், பிரச்சனைகளினால் வரும் உணர்ச்சி மிகவும் வல்லமையாக இருக்கலாம். ஆகவே நாம் சற்று காலம் தாழ்த்தி பரிசுத்த ஆவி கிரியை செய்ய அனுமதிக்கவேண்டும். முதலில் நாம் எடுத்த முயற்சிகள் புறக்கணிக்கப்பட்டாலும், அதற்குபின் அது இருதயத்திலும், சிந்தையிலும் கிரியை செய்யலாம். சில காரியங்களை யோசித்தபின் திரும்பி வருவது இயல்பான காரியமாக இருக்கிறது. ஒருவேளை இது நடக்காவிட்டால், தேவனுடைய கரத்தில் கொடுத்துவிட்டு, நம்முடைய இருதயத்தில் இரக்கத்தையும், கனிவையும், பரிவையும் செயலாற்ற வேண்டும்.

எது நடந்தாலும், "நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்க ளென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்." (பிலி 1:27)என்று அப்போஸ்தலரின் வார்த்தையை பயன்படுத்தவேண்டும்.

சபையின் ஒருமனப்பாடு சபையின் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானது. அதன் உறுப்பினர்களுக்குள் ஏற்படும் பிரச்சனை, சுவிசேஷ யுகத்தில் இயேசு நமக்குகொடுத்திருக்கும் மிக பெரிய வேலைகளை தடை செய்யும். ஆகவே சுவிசேஷ வேலைகளை தொடர்ந்து செய்ய நாம் ஒருமனப்பாட்டில் உறுதியாக நிற்கவேண்டும். எயோத்தியாள் மற்றும் சிந்திகேயாள் செய்த சுவிசேஷ பணிக்காக பவுல் அவர்களை பாராட்டினார், ஆனால் சபையின் ஐக்கியத்தை கெடுக்கமுயற்சித்தால், இனி வரும் சுவிசேஷத்தின் வேலைகள் தடைப்படும் என்றும் பவுல் எச்சரிக்கிறார். சபையில் உள்ள ஒருமனப்பாடு ஒரு முறை குலைந்துவிட்டால் அதை மீண்டுமாக சரிசெய்வது கூடாத காரியமாகிவிடும். ஆகவே ஒருமனப்பாட்டில் நிலைத்து நிற்பதற்கு ஒருவர் மேல் ஒருவர் உறுதியான அன்போடு நிலைநிற்க முயற்சிக்கவேண்டும். நன்மையான கிரியைகளும், உறுதியான முயற்சிகளும் பிரிவினைகளை முறியடிக்கும் தடுப்பு மருந்தாக இருக்கிறது.

## என்ன நடந்தது ?

பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிரூபத்தில் எயோத்தியாள் மற்றும் சிந்திகேயாளைப் பற்றி வாசிக்கப்பட்ட சுருக்கமான சாட்சி, நம்மை இன்னும் அதிகமான விபரங்களை அறிந்துகொள்ள ஆர்வமூட்டுகிறது. அவர்களுக்குள் இருந்த பிரச்சனை தீர்க்கப்பட்டதா ? இவர்கள் சமாதானமாவதற்கு தங்களுக்குள் பிரிவினையை உண்டாக்கின காரியத்தை விட்டு விட்டு, எந்தெந்த காரியத்தில் இவர்கள் ஐக்கியப்படுகிறார்கள் என்று அவர்கள் தங்களை ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும். அவர்களுக்குள் இருந்த பெருமையை விழுங்கிவிட்டு, நன்மையான ஆவிக்குரிய வழிகளை தெரிந்துகொண்டு மீண்டுமாக ஒப்புரவாகியிருக்கவேண்டும். எப்படி ? மனத்தாழ்மை மற்றும் சாந்தம் என்ற கிறிஸ்துவின் குணத்தை மாதிரியாக கொண்டு, மீண்டும் நட்புறவை ஏற்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை இவர்கள் இருவரும் தங்களுடைய கருத்துவேறுபாடுகளை சரி செய்துகொண்டதற்கு வரலாற்றில் சில ஆதாரங்கள் காணப்படலாம்.

இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், தலைவர் பாலிக்கார்புக்கு பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபை ஒரு கடிதம் எழுதியது. சிறைபிடிக்கப்பட்டு ரோமாபுரிக்கு இழுத்து செல்லப்பட்ட மற்றொரு மந்திரியைப் பற்றி அவர்கள் விசாரித்தார்கள். அந்த கடிதம் நம்மிடம் இல்லாவிட்டாலும், பாலிக்கார்பு எழுதிய பதில் நம்மிடத்தில் உள்ளது. அந்த கடிதத்தில் - "உண்மையான அன்பின் மாதிரியை பின்பற்றி, கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி அவர்களின் வழியில் அவர்களுக்கு உதவி செய்ததுமன்றி பல வருடங்களாக நீங்கள் விசுவாசத்தில் ஆழமாக வேர்கொண்டதையும், இந்நாள் வரைக்கும் அது செழுமையாக கிறிஸ்துவுக்கு கனி தருவதை கண்டு நான் மகிழ்கிறேன்"- என்று அவர் பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபையை பாராட்டி எழுதியிருந்தார்.

இப்படிப்பட்ட வார்த்தைகளை ஏதோ ஒரு வகையில் தெய்வீக ஐக்கியத்தில் வளர்ச்சி அடைந்து, அந்த நிலையை தக்கவைத்து கொண்ட ஒரு முழு சபையைக் குறித்து மட்டுமே பேச முடியும். ஆகவே எயோத்தியாள் மற்றும் சிந்தேகேயாளும் தங்களுக்குள் இருந்த கருத்துவேறுபாடுகளை சரி செய்து விட்டார்கள் என்ற முடிவுக்கு வரலாமா ? இதற்கான பதில் வரலாற்றில் தொலைந்து விட்டது. ஆனால், ஒருவேளை இவர்கள் ஒப்புரவாகியிருக்கவேண்டும் என்பதை பாலிகார்பின் கடிதம் நமக்கு மறைமுகமாக உறுதிப்படுத்துகிறது.

சிந்திகேயால் ஒரு மனுஷன் என்றும், எயோதியாள் அவருடைய மனைவி என்றும் சிலர் எண்ணுகிறார்கள். இது சாத்தியமாக இருந்தாலும், பெரும்பான்மையான விமர்சகர்கள் இவர்கள் இருவரையும் பெண்கள் என்றே எடுத்துகொள்ளுகிறார்கள். எதுவானாலும் சரி, கிறிஸ்துவினுடைய ஆவிக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள அநேக பாடங்களை இந்த சம்பவங்களில் கற்றுக்கொள்ளலாம்.

சபையைப் பற்றிய முழு வரலாறும் ஆயிரவருட ஆட்சியில் வெளிப்படுத்தப்படும். உங்களை பற்றியும் உங்கள் சபையைப்பற்றியும் என்ன சொல்லப்படும்? அப்பொழுது உங்கள் சபை - ஐக்கியத்தின் பலனை - சாட்சியாக அளிக்குமா ? பவுல் எச்சரிப்பைப் பெற்று சமாதானத்தை ஊக்குவிக்கும் அந்த நான்கு கருவிகளை பயன்படுத்தினால் நிச்சயமாக ஒவ்வொருவரும் இந்த பலனை பெறலாம். ஒருமித்து வேலை செய்தால், சமாதானத்தின் பலனும் வளர்ந்து, சபை மகிமை அடையும் வரைக்கும் பூரணப்படும்.

## பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபை

பவுலின் இரண்டாம் சுவிசேஷ பயணத்தின் போது இந்த சபை நிறுவப்பட்டது. (அப்போ 16ம் அதிகாரம் காண்க) பவுல் விட்டுசென்ற சுவிசேஷத்தின் மீதி வேலைகளை, நடப்பித்த முக்கிய நபராகிய தீமோத்தேயுவை அங்கு கண்டார். அந்த சபைக்கும் நம்முடைய இக்காலத்து சபைகளுக்கும் அநேக ஒற்றுமைகள் இருப்பதால், அவர்களுக்கு எழுதப்பட்ட செய்திகள் விசேஷமாக நமக்கும் மிக அருமையாக பொருந்துகிறது.

மாவீரர் அலெக்சான்டரின் தந்தை, 11 பிலிப்புவுக்குபின் அந்த பட்டணத்திற்கு அவரின் என்ற பெயர் சூட்டப்பட்டது. அப்போது அந்த பட்டணம் தங்கசுரங்கமான நகரத்தில் ஒன்றாக சேர்க்கப்பட்டதால், கிபி 356ல் மக்கதோனியர்களின் ஆட்சிக் காவலரின் பதவிக்கு அழைப்பு பெற்றது. அதற்குபின் ரோமர்கள் அந்த சாமராஜ்யத்தை கிபி 168 -167ல் கைபற்றினார்கள்.

ஜூலியஸ் சீசர் கொல்லப்பட்டதை தொடர்ந்து, மாற்கு ஆன்டோனியும் ஆக்ட்டாவியானும் புரூட்டஸ் மற்றும் காஷியசையும் தோற்கடித்தார்கள். இந்த பகுதியை ஒழுங்குப்படுத்தினவர்கள், அந்த சாமராஜ்யத்தின் முன்னாள் படைவீரர்களின் குடியிருப்பு பகுதியாக ஸ்தாபித்தார்கள். அதில் ரோமர்களும், கிரேக்கர்களும் அதிகமாக தங்கியதால், பல்வேறான மதங்கள் விரைவாக வளர்ச்சி அடைந்தது. பழங்காலத்தில் அழிந்துபோன பேரரசர்களின் நினைவுச்சின்னங்களை வணங்குபடிக்கு யூப்பித்தர் மற்றும் சீயஸின் சிலைகளையும், திரேசியன் தெய்வமாகிய அர்ட்டிமிஸிக்கும், எகிப்தி தெய்வமாகிய ஐசிஸ்க்கும் பிரைஜீயன் தெய்வமாகிய சைபிலிக்கும் சிலைகள் வைக்கப்பட்டிருந்தது. அங்கு யூதர்கள் வழிபடும் திருக்கோவில் எங்கும் காணப்படவில்லை. ஆயினும், ஆற்றின் அருகே ஒன்று கூடிய ஒரு யூத சமுதாயத்தினரை பவுல் கண்டுபிடித்தார். (அப் 16 :13)

இதன் வரலாற்றினால், இந்த நகரத்தில் வளர்சி அடைந்த சபை தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஏனெனில், பல இடங்களிலிருந்து வந்தவர்களும், பல மத பின்னணியை கொண்டவர்களும், பல விதமான சமுதாய இனங்களிலிருந்து வந்தவர்களின் கலவையாக இருந்தார்கள். ரோமானிய குடியுரிமை பெற்ற சபை ரோம அரசாங்கத்தின் பாதுகாப்பில், மத சுதந்திரம் பெற்றிருந்ததால் மகிழ்ந்தது. அந்த சபை அறிவிலும், குணத்திலும் அதிகமாக வளர்ச்சி அடைந்து, அந்த சபையை நிறுவினவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தது. அந்த சபைக்கான பவுலின் கடிதம் நம்முடைய இந்நாட்களின் பெரிதான அளவில் வெளிப்படும் காரியங்களை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கிறது - சத்தியத்தின் கருத்துகளில் வித்தியாசம். இவ்வளவு வேறுபாடுகள் இருப்பினும், சகோதரர்கள் ஒருமனப்பாட்டோடு இருக்கும்படி பவுல் வேண்டுகிறார். "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்." (பிலி 2:1-2)

ஒருமைப்பாட்டின் அவசியம்



# இறுதியாக, அனைவரும் ஒரே சிந்தையுடைவர்களாக இருங்கள்.

மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். -1பேதுரு3:8,9

**Charles T. Russsell**

இசைந்திருத்தல் என்பதற்கு ஒன்று போல என்று பொருள் அல்ல. மாறாக, இது ஐக்கியத்தில் இருக்கும் பல வகைகளை குறிக்கிறது. நம்முடைய பாடபகுதியில் அதற்காக பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை, "ஒரே சிந்தை" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தேவன் அவருடைய ஜனங்களை பொருத்தவரையில், துல்லியமாக ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்று சித்தம் கொள்வதில்லை. மேலும் தனிப்பட்ட குணங்களையும், தனித்தன்மைகளையும் அவர் முழுமையாக நிராகரிப்பதும் இல்லை. மாறாக, ஒரே மாதிரியாக இருப்பதை காட்டிலும், இதில் உள்ள பல வகைகள் இசைந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருமித்திருக்கும் ஏழு வண்ணங்களின் ஐக்கியம் எவ்வளவு அழகான வானவில்லை உருவாக்குகிறது. அதேபோல இசையிலும் - பியானோ அல்லது மற்ற இசை கருவிகளில் பலவிதமான கம்பிகள் இருந்தாலும், அவைகளை இசைக்குரியீடோடே வாசிக்கப்படும்போது சுரங்கள் அனைத்தும் இணைந்து அழகான இசையை உருவாக்குகிறது. தனித்தனி கம்பிகளில் இந்த இன்னிசை கேட்கப்படுவதில்லை. ஒரே விதமான சத்தங்கள் அழகான இசையையும் உருவாக்குவதும் இல்லை. தேவனுடைய ஜனங்களை பொருத்தவரையில் இப்படிப்பட்ட சிந்தையை அப்போஸ்தலரின் வார்த்தைகள் நமக்கு அருளப்படுகிறது. இவர்கள் இயற்கையாகவே வெவ்வேறு சுபாவங்களையும், மனபான்மைகளையும், தனிதன்மைகளையும் உடையவர்களாக இருக்கிறார்கள். மட்டரகமான உலோகங்களை பொன்னாக மாற்ற முயற்சிப்பது போல, இயற்கையான மனித நிலை ஆவிக்குரிய நிலைக்கு மாற்றவும், பழைய சிந்தையை புது சிந்தையாக மாற்றும் தெய்வீக முயற்சியில் பகிர்ந்தளிக்கப்பட்ட குணங்களின் அடிப்படையான மூலக்கூறுகளும் முழுமையாக அழிக்கப்படுவதுமில்லை, அவைகளை அழிப்பது நோக்கமும் இல்லை. ஆனால் பயனற்ற, அபூரணமான, முரண்பாடுள்ள குணங்களிலிருந்து ஒவ்வொறு குணங்கள் எடுக்கப்பட்டபின் அனைத்தையும் ஒன்றாக இணைத்து, இசைவான வளர்ச்சியில் முழுமை அடையும்.

ஆயினும், உடன்படிக்கை செய்தபின் தாமதமின்றி, இப்படிப்பட்ட முழுமையான ஐக்கியத்தின் நிலைமையை அடைந்துவிட வேண்டும் என்று நம்முடைய பிதாவாகிய தேவன் அவருடைய ஜனங்களை எதிர்ப்பார்ப்பதில்லை.மாறாக, நம்முடைய பாடத்தில் அப்போஸ்தலர் குறிப்பிடுவதைபோல இப்படியாக கிடைக்கப்பட்ட ஐக்கியத்தின் இறுதி பலன் - முழுநிறைவான மகிமையாக இருக்கிறது. துவக்கத்தில் தேவனுடைய ஜனங்களுக்குள் கிருபையாக கிரியை செய்ததைப் பற்றி சொல்லப்படாமல், "இறுதியாக" அனைவரும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருங்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு அநேக வருடங்கள் தேவைப்படுகிறது. பொதுவாக, கிறிஸ்துவின் பள்ளியில், அவருடைய சீஷர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சி அடைந்து "இறுதியாக" என்று நம்முடைய பாடத்தில் சொல்லப்பட்ட மகிமையான நிலைமையை அடைவார்கள் என்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் தொடர்ந்து வளர்ந்து, இருதயத்திலும், சித்தத்திலும் பூரண மனுஷனாகிய கிறிஸ்துவை போல மாற அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவிக்கிறார். கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருப்பவர்கள் பூரண மனிதன் அல்லவே. இந்த குழந்தைகளுக்கு முதலில் தேவனுடைய பாலான வார்த்தைகள் தேவைப்படுகிறது. சற்று வளர்ச்சி அடைந்தபின் "பலமான ஆகாரத்தை" உட்கொண்டு நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து நம்முடைய பாட பகுதியில் சொல்லப்பட்ட அந்த இறுதி நிலையை அடைவார்கள். இவர்கள் தேவனோடும், இப்படியாக வளர்ச்சி அடைந்த ஒவ்வொருவரோடும் ஐக்கியப்பட்ட ஒரு நிலைமையை அடைவார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும், வார்த்தைகளிலும் வெளிப்படுத்த கூடாமல் போனாலும், பூரண அன்பின் இலக்கு, இருதயத்திற்குள் முழுமை அடைந்துவிட்டது என்றும் தேவனுடைய கிருபை

அருமையாக முன்னேற்றம் அடைந்திருப்பதையும் காட்டுகிறது.

இந்த வளர்ச்சியினால் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களை மறுரூபம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கிறார். "உங்கள் சிந்தை புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்". இந்த அறிவுரை குறுகிய நேரத்தில் கொடுக்கப்பட்டாலும், இந்த கட்டளைகளை ஏற்றுக்கொண்டு, அவைகளை பின்பற்ற உடன்படுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறதில்லை. ஆனால் அந்த கட்டளைகளோடு முழுமையாக இசைந்து வாழ்வதற்கு பொறுமையோடுக்கூட விடாமுயற்சி அதிகமாக தேவைப்படுகிறது. அப்பொழுது எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும், சரியான காரியங்களை மட்டுமே செய்வதற்கு நம்முடைய இருதயத்தில் நிலைமை முழுமையாக மறுரூபமாகிவிடும். அங்கு ஒரு பிரச்சனை எழும்புகிறது. எது தேவை என்று அநேகருக்கு தெளிவாக தெரியாததினால், சிக்கலான வழிகளில் அகப்படுகிறார்கள். குழப்பங்களும், பயங்களும், சந்தேகங்களும் அவர்களை சூழ்ந்துகொள்கிறது. விடாமுயற்சி செய்து சரியாக புரிந்துக்கொள்ளுதலினால் கிடைக்கும் சமாதானத்திலும், இளைபாறுதலிலும் ஆசீர்வாதங்களிலும் குறைவுப்படுகிறார்கள்.

தேவனுடைய தெய்வீக திட்டத்தின் மேல் வைத்திருக்கும் மிகுதியான ஆர்வத்தை வெளிப்படுத்துபவர்கள், நிச்சயமாக இந்த உலகத்தில் மிருதுவானவர்களாகவும், அனைவரோடு ஒத்துபோகக்கூடியவர்களாகவும் இருப்பதில்லை என்ற உண்மை சந்தேகத்திற்கு இடமில்லாமல் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாங்களும் தங்களுடைய நண்பர்களும் தங்களுடைய விவேகமற்ற செயலினாலும், கோபமான வாதங்களை தூண்டிவிடுவதினாலும் அவர்களை உபத்திரவப்படுத்தும் அளவுக்கு அடிக்கடி பிரச்சனைகள் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. பாடபகுதியில் குறிப்பிடுவதைபோல ஒரே சிந்தையுள்ள மனநிலையை அல்லது இசைந்திருத்தல் என்ற அந்த குணம் மட்டுமே குறைவுப்படுவதாக அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார். இயற்கையாகவே, இன்றைய கால சத்தியத்தில் ஆர்வமுள்ள பெரும்பான்மையானோர் இந்த குணத்தில் குறைவுப்படுகிறார்கள். மேலும் சிலர் வெகு சீக்கிரத்தில் அடிப்படையான சத்தியங்களை குறைக்கூற எளிதில் அதைவிட்டு விலகினபின் -"இது கிறிஸ்துவின் சமாதானத்தின் ஆவி அல்ல" என்று சொல்லுகிறார்கள். ஆகவே - "இறுதியாக, ஒரே சிந்தையுடையவர்களாக இருங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். கிறிஸ்துவின் பள்ளியில் பாடம் பயில்வோருக்கு, ஒழுக்கம் மற்றும் கற்பனைகளின் இறுதி பலனாக "ஒரே சிந்தையுடையவர்களாக" இருப்பதை மட்டுமே எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் அடையும்போது (அதே நேரத்தில் சத்தியத்திற்காக விசுவாசமும் தைரியமுள்ளவர்களாக இருக்கவேண்டும்) கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் நம்முடைய வளர்ச்சியை அளவிடலாம்.

தேவனுடைய ஜனங்களில் அநேகருக்குள் இருக்கும் முரண்பாடுகளின் காரணத்தை பற்றிய விளக்கத்தை குறித்து சில ஆலோசனை கூற விரும்புகிறோம். மிக பெரிய கருத்துவேறுபாடுகளின் விளைவால் மூர்க்கமான சண்டைகளும், பிரிவினைகளும் ஏற்படுகிறது. தவறாக வழிநடத்தப்பட்டு, ஞானமற்ற செயல்பாடுகளினாலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கிறது. வாதாடும் குணம் அல்லது போராடக்கூடிய மனநிலை ஒரு தவறான பண்பு அல்ல. மாறாக, சுவிசேஷத்தில் சொல்லியபடி நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பரிசை பெறுவதற்கு அந்த குணம் நமக்குள் இருக்கவேண்டிய ஒரு முக்கியமான தகுதியாக இருக்கிறது. போராட்டம் இல்லாதவர் முதுகெலும்பு இல்லாதவர். அவர்கள் வாழ்க்கையில் நிமிர்ந்து நடக்க திராணியில்லாதவர்கள். இப்படிப்பட்டவர்கள் எந்த விதமான துடுப்போ, சக்கரமோ அல்லது சுழல் விசிறி இல்லாமல் நதியின் மேல் மிதக்கும் படகிற்கு ஒப்பானவர்கள். அவர்களின் படகை ஓட்டுவதற்கு எந்தவிதமான கருவிகளும் இல்லாததினால், அவர்களால் மிதக்குவதை தவிர வேறு ஏதும் செய்ய இயலாது. அநேக நல்ல ஜனங்களுக்கு தேவையான உறுதியும், போராடுகிற குணங்களும் குறைவுப்படுவதினால், தண்ணீர் போகும் போக்கில் அவர்கள் மிதந்துகொண்டிருப்பதை தவிர வேறு எதை பற்றியும் அவர்கள் சிந்திப்பதில்லை. ஆனால், இவர்கள் எந்த வேலைகளில் ஈடுப்படாவிட்டாலும் இவர்களை "பரிசுத்தவான்கள்" என்று அநேகர் தவறாக எண்ணுவது வழக்கமாயிற்று. இவர்களை தேவன் "பரிசுத்தவான்களாக" உருவாக்குவதற்கு அபாத்திரமான ஒரு பொருட்களாக (உயிரோட்டம் இல்லாதவர்கள்) இருக்கிறார்கள். சுவிசேஷ யுகத்தின் இன்றைய அழைப்பின் கீழ் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில், தெரிந்துகொள்ளப்பட்ட சபையாக அழைக்கப்பட்டோர் "ஜெயிப்பதற்காகவும்", ஜெயிப்பவர்களாகவும்" அழைக்கப்பட்டிருக்கிறார்கள். பிரபலமாக இருக்கும் எதிர்காற்றில் தண்டுவலிக்க அழைக்கப்பட்டிருக் கிறார்கள், கீழ்படிதல் மற்றும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைபோராடுவதற்கு அழைக்கப்பட்டிருக் கிறார்கள். மன உறுதியையும், போராடும் குணத்திலும் குறைவுள்ளவர்கள் இப்படிப்பட்ட விதிமுறைகளை கடைப்பிடிப்பது கூடாத காரியம். ஆகவே அவர்கள் இந்த பந்தயத்தில் சேராதவர்கள்.

இப்படியாக இருக்கும் ஏதோ ஒருவர் சத்தியத்தை கைப்பற்றி, தேவனோடு உடன்படிக்கை செய்வதற்கு அந்த சத்தியம் அவரை ஈர்க்கும் பட்சத்தில், அவர்களுக்குள் இருக்கும் தவறான வழிகளை உணர்ந்து, இதை பற்றி அவர்களுக்கு நம்பிக்கை குறைவு ஏற்பட்டால், அவர்கள் தேவனுக்கு நன்றி சொல்லிவிட்டு தைரியத்தோடே அவருடைய சித்தத்தை செய்ய முன்செல்ல வேண்டும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியின் கீழ் ஊழியம் செய்வதற்கும், அவருடைய தண்டில் சேவகம் செய்வதற்கும் இந்த ஒரு மனநிலையே

தேவையான தகுதி என்பதை அவர்கள் உணரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு ஊழியமானது வேறுப்பட்ட குணங்களை அன்பின் ஆவிக்குள் இணைத்தாலும், கடைசியில், அனைத்து முரண்பாடுகளும் அன்பின் வல்லமைக்குள் கட்டுப்படுத்தப்படும். போராடும் குணங்கள் நன்மையான காரியங்களுக்கு திசைத்திருப்பிவிடப்பட்டு நியாயமான காரியஙகளில் வெற்றி சிறக்க ஊக்குவிக்கப்படும்.

ஆனால் நாம் அனைத்து நம்பிக்கையூட்டும் காரியங்களை குறித்து பேசினாலும், தேவன் விரும்புவதும், தேடுவதும், "வெற்றி வீரர்களை" போராடுகிற வகுப்பாரிலிருந்து அழைக்கப்படுபவர்களும், போராடும் மனநிலையில்லாமல், எதையும் போராடி வெற்றி அடையாமல், ஜெயிப்பவர்களாக முடியாது. ஆகவே காலம் தாமதமின்றி நம்மை நாம் ஆராய்ந்து பார்த்து, போராடுகிற நல்ல குணங்களை எந்தந்த சூழ்நிலைகளில் தவறாக பயன்படுத்தப்பட்டது என்பதை உணர்ந்து, நம்மையே கிறிஸ்துவின் சிலுவைக்கு நல்ல போர்சேவகர்களாக இணைத்துக்கொள்ள புதிய வழிகளில் நடப்போம். நம்முடைய போராடுகிற குணங்கள் தேவனுக்கு ஏற்றவாறு செயல்படாமல், அவருடைய சித்தத்தை எதிர்த்து செயல் பட்டிருப்பதை முதலில் நாம் அறிந்துக்கொள்ளவேண்டும். ஆகவே, இதற்கு மாறாக, நம்முடைய சிந்தையாலும், வார்த்தையாலும், நடத்தையாலும் நம்மை அவருக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய போராடும் குணத்தை சகோதரர்கள் மத்தியில் என்றுமே பயன்படுத்தக்கூடாது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஏனெனில், சகோதரர்களுக்கு எதிரான போராட்டம் தேவனுக்கு எதிரான போராட்டமும், சத்தியத்திற்கு எதிரான போராட்டமும், சொந்த படை வகுப்பாருக்கு விரோதமான போராட்டமாக இருக்கிறது. மேலும், நம்முடைய அயலகத்தாரோடும், நண்பர்களோடும், பொதுவாக உலகத்தாரோடும் போராடுவது மிகவும் தவறான காரியம் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். நம்முடைய நியாயமான எதிர்ப்புகள் இல்லாவிட்டாலும் இவைகள் அனைத்தும் அதிகதிகமாக செயல்படும். ஆனாலும், அவர்கள் அனைவருக்கும் நம்முடைய இரக்கமும், உதவிகளும் தேவைப்படுகிறது. அவர்களை முன்னேற்றுவதற்கு நம்மால் செய்யக்கூடிய அனைத்தும் அவர்களுக்கு தேவைப்படுகிறது.

## விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுதல்

தேவனுடைய பிரியத்திற்கு ஏற்றபடியும், அவருடைய ஊழியத்தில் நியாயமான காரணத்திற்காகவும், எவ்வழியில், எதற்கு எதிராக நம்முடைய போராட்டத்தை செயலாற்றுவது? நம்முடைய பாவத்திற்கு எதிராக போராட வேண்டும் என்று நாம் பதில் அளிக்கலாம். இதுவே நமக்குள் நாம் துவங்கும் முதல் செயல்பாடாக இருக்கவேண்டும். சுயத்தை ஜெயிப்பதே மிக பெரிய யுத்தமாகும். இதைக் குறித்து நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் என்னவெனில் - "பட்டணத்தை பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை (தன் சிந்தை, தன் சித்தம் )அடக்குகிறவன் உத்தமன்." இந்த அளவுக்கு, உண்மையான குணநலங்களை சுயக்கட்டுபாட்டில், சரியான திசையில் செயலாற்றுவதற்கு கற்றுகொண்டு தேர்ச்சி அடையவேண்டும். பாவத்தோடும், நமக்குள் இருக்கும் சுயநலத்தோடும் போராடி மேற்கொண்டு, நம்முடைய கண்களில் இருக்கும் உத்திரத்தை எடுத்துபோட்டு, நம்முடைய இருதயத்திலும், மாம்சத்திலும் உள்ள கோபத்தை குறைத்து, பகையையும், குரோதத்தையும் கீழ்படுத்தி போதுமான அளவு அனுபவங்களை பெற்றபின் இப்படிப்பட்ட கடுமையான யுத்தத்தை நடத்தி அனுபவங்களை பெற்றால் மட்டுமே நம்முடைய சகோதரர்களின் பலவீனங்களிலும், குழப்பமான சூழ்நிலைகளிலும் நம்மால் உதவிசெய்யமுடியும். மேலும் நம்முடைய அயலகத்தாரின் கஷ்டங்களிலும் துணைநிற்க முடியும்.

தன்னுடைய பாவங்களையும், பலவீனங்களையும் போக்க வலிமையோடு முயற்சிக்கும் முன் மற்றவர்களின் பாவத்தை போக்க போராட முயற்சிகளும் யாரானாலும் தவறு செய்பவர்களாக இருப்பார்கள். மற்றவர்களின் யுத்தத்தில் அவர்களுக்கு உதவி செய்ய முதலாவது அவருக்கு மனத்தாழ்மையும், பரிவும் மிக அவசியம். முதலில் தன்னுடைய யுத்தத்தில் வெற்றி பெற்று, எதிராளியின் பலத்தை உணர முயற்சிக்காமலும், மாம்சத்தில் உள்ள சுயநலமும், அதின் பாவங்கள் பதிந்திருக்கும் அளவையும் அறியாமல் மற்றவர்களுக்கு துணைநிற்க முடியாது. தன்னுடைய யுத்தங்களில் சிலநேரத்தில் மோசமான தோல்வியை அடைந்து, எதிராளியை மேற்கொள்ள முடியாத நிலையில் இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்ள கிருபாசனத்தண்டையில் போகக்கூடிய நிர்பந்தம் ஏற்படவேண்டும். இப்படிப்பட்ட அனுபவங்கள் மிகவும் அவசியமானது. ஏனெனில் நாம் பலவீனர்களாக நிறைந்திருக்கும் போது தேவனுடைய பலத்தை தேடுவோம். ஒருவேளை நாம் பலமுள்ளவர்களாக இருந்தால் நம்முடைய சுய - நம்பிக்கையின் மேல் உறுதியாக இருந்து தேவனை நிராகரித்துவிடுவோம். அந்த நிலையில் நாம் தளர்ந்து, பாவமாகிய எதிராளியிடம் சிக்கிக்கொண்டு தோல்வி அடைந்துவிடுவோம். எபி 4:16, 11கொரி 12:10

இப்படிப்பட்ட காரியத்தில் அனுபவம் பெற்ற அனைவரும், எந்த சூழ்நிலையில் நம்முடைய போராடுகிற குணங்களை செயல்படுத்தவேண்டும் என்று கற்றுக்கொண்டவர்கள், தாங்கள் பெற்றிருக்கும் போராடுகிற குணங்களின் ஒவ்வொரு சிறு பகுதிகளையும் எங்கெல்லாம் முழுமையாக பயன்படுத்தமுடியும் என்பதை கண்டுபிடித்திருப்பார்கள்.

(1) அப்போஸ்தலனாகிய பவுல் - தனக்குள் தொடர்ந்து "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்." (1கொரி 9:27) என்று கூறுகிறார். ஆம், நல்ல போராட்டத்தை போராடவும், தொடர்ந்து உறுதியாக நிலைநிற்கவும், தேவனிடம் விசுவாசம் வைக்கவும், தன்னைதான் அடக்கவும்

எவ்வளவு வீரியத்தை செலவிடவேண்டியதாக இருக்கிறது - "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." (II கொரி 10:5) போராடுவதற்கு அநேக வாய்ப்புகள் உண்டு, நமக்குள் இருக்கும் அனைத்து வாதங்களுக்கும் சண்டைகளுக்கும் நமக்கு போதுமான வாய்ப்புகள் உண்டு. பாவத்தோடும், சுய -விருப்பத்தோடும், மாம்சத்தின் சித்தத்தோடும், அதை எதிர்க்கும் ஒவ்வொரு காரியங்களோடும் போராட்டங்கள் உண்டு. இவ்வனைத்தையும் சுய கட்டுபாட்டினால் அடக்கி, அதன் விருப்பங்களையும், அதன் தாக்கங்களையும் அழிக்கவேண்டும். இக்காலத்து அனுபவங்களை குறித்து போராட்டம் என்று அப்போஸ்தலர் பேசுவது ஆச்சரியமல்ல. மேலும், ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவுக்குள் நல்ல போராட்டத்தை போராடும் நல்ல போர்சேவர்களாகும்படி நாம் துன்பங்களை பொறுத்துக்கொண்டு ஆயத்தப்படவேண்டும் என்று அவர் சொல்லுவதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

(2) சுயத்தை ஜெயித்தவுடன், புரட்சிகள் எழும்பாதபடிக்கும், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய நம்முடைய ஆண்டவருக்கு கீழ்ப்பட்டிருக்கும்படி ஜெயிக்கப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் பாதுகாப்பு படையை புதிய சிந்தை நியமித்தபின், தாமதமின்றி மீதியிருக்கும் வலிமை முழுவதையும் ஆண்டவருக்காக போர்புரிவதற்கும், சகோதரர்களுக்காக உதவி செய்யவும், சத்தியத்திறகாக போராடுவதற்கும் தவறுகளை எதிர்த்துநிற்கவும், சாத்தானுடைய சகல கருவிகளை எதிர்த்து போர் புரியவும் அதிகதிகமான வாய்ப்புகளை நாம் பெறலாம். ஏனெனில், அப்போஸ்தலர் கூறுகிறது போல "அவனுடைய ஆயுதங்கள் நமக்கு அறியாதவைகள் அல்ல".

(3) நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் (மனகண்கள்) நாளுக்கு நாள் அகலமாக திறக்கப்படும் போது, இந்த உலகம் முழுவதிலும் - நீதிக்கும் பாவத்திற்கும், தேவனுக்கும் இப்பிரபஞ்சத்தின் தேவன் மற்றும் தேவனுடைய பணியை செய்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, சத்தியத்தை எதிர்த்து நிற்கும், குருடாக்கப்பட்ட அவனுடைய பிரதிநிதிகளுக்கும், சிலுவையின் உண்மையான போர்வீரர்களுக்கும், அவர்களுடைய சகோதரர்களுக்கும் இடையில் நடக்கக்கூடிய மிகபெரிய பிரச்சனைகள் கண்ணுக்கு புலப்படும். இதற்கு பவுலும் விதிவிலக்கல்ல. தர்சு பட்டணத்தானாகிய சவுல், அறியாமையில், தன்னுடைய போராடும் குணத்தை தவறான வழியில் பயன்படுத்தி, சபையை எவ்வாறு துன்பப்படுத்தினான் என்பதை நாம் அறிவோம். ஆண்டவர் அவரை எப்படியாக அழைத்தார் என்பதையும் நாம் அறிவோம். "சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் ? " தேவனுக்கும் சத்தியத்திற்கும் எதிராக ஏன் போரிடுகிறாய் ? என்று சவுலிடம் கேட்கப்பட்டது. பவுலின் விஷயத்தில் அவருடைய மனகண்கள் திறக்கப்பட்டவுடனே, சிலுவையின் மிக துணிவுள்ள போர்ச்சேவகனானார். ஒருகாலத்தில் சவுல் எதிர்த்த, சகோதரர்களுக்காகவும், தேவனுக்காகவும் ஊழியம் செய்ய அவர் தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுக்க எந்த விதத்திலும் தயங்கவில்லை.

தீவிரமாக துன்புறுத்தவும், உபத்திரவப்படுத்தவும் பயன்படுத்தப்பட்ட பவுலுக்குள் இருந்த அதே போராடுகிற குணம் அதற்குபின் சத்தியத்தை காக்கும் துணிகரமான ஒரு அப்போஸதலனாக அவரை மாற்றியது. மற்ற அப்போஸ்தலர்களும் இப்படியாகவே மாறினார்கள். அதிகமான போராடுகிற குணம் உள்ளவர்கள் சத்தியத்தை அறிந்தவுடன் இயல்பாக, தங்களுக்குள் இருந்த குணத்தை நன்மையான வழிகளில் செயல்பட துவங்கினார்கள். இப்படியாக இவர்கள் அனைவரும் சத்தியத்திற்கு வல்லமை மிக்க, துணிவுள்ள போர்வீரர்களானார்கள். எடுத்துக்காட்டாக முழுமையாக போராடுகிற குணத்தை பெற்றிருந்த பேதுரு, முதலில் உள்ளார்ந்த மனதோடு தன்னுடைய ஆண்டவரை பாதுகாக்கும் பணியில், பிரதான ஆசாரியனுடைய காதை பட்டயத்தால் வெட்டினார், அதற்குபின் இப்படிப்பட்ட அவருடைய குணங்கள், தேவனை துதிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. நம்முடைய ஆண்டவரால், சத்தியத்தின் பணிக்காக விசேஷமான பயன்படுத்தப்பட்டவர்களும் அதற்கான விசேஷித்த கிருபை பெற்ற யாக்கோபு மற்றும் யோவானும் "இடிமுழக்கத்தின் சகோதரர்கள்" என்று பெயர் பெரும் அளவுக்கு போராடுகிற மனநிலையை கொண்டவர்களாக இருந்தார்கள். மேலும், ஆண்டவரிடத்தில் முழுமையான அன்பும், வைராக்கியம் கொண்டிருந்த இவர்கள், ஆண்டவரை சமாரியர்கள் தங்களுடைய பட்டணத்தில் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் கோபமடைந்தவர்களாக -"ஆண்டவரே, வானத்திலிருந்து அக்கினியை வருஷிக்கப்பண்ணி இவர்களையும் இவர்களுடைய பட்டணத்தை அழித்துவிடலாமா ? என்று ஆண்டவரிடம் கேட்டார்கள். அவர்களுக்கு மிகுந்த தைரியமும் வைராக்கியமும் போராடுகிற குணமும் இருந்தது. ஆனால் அதை செம்மையான வழியில் பயன்படுத்த அறியாதிருந்தார்கள். ஆகவே நம்முடைய ஆண்டவர் - "நீங்கள் எந்தவிதமான ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை அறியாதிருக்கிறீர்கள். மனுஷகுமாரன் உலகத்தை அழிப்பதற்காக அல்ல, அவர்களை இரட்சிப்பதற்காகவே வந்தேன்" என்று கூறினார். அதற்குபின் பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டபோது எந்தவிதமான ஆவியை பெற்றிருந்தார்கள் (நம்முடைய ஆண்டவர் பெற்றிருந்த ஆவி மற்றும் அவருடைய சீஷர்கள் பெறவேண்டிய ஆவி) என்பதை தெளிவாக அறிந்துகொண்டார்கள். தாங்கள் பெற்றிருந்த குணங்களை நன்மையான காரணங்களுக்கு பயன்படுத்த புரிந்துகொண்டார்கள். ஆகையால், அவர்கள் அனைவரையும் இறுதிவரை சிலுவையின் விசுவாசமுள்ள போர் வீரர்களாகவும், அபாயத்திற்கு அஞ்சாதவர்களும், துன்பங்களை சகித்துகொள்கிற ஆண்டவராம்

இயேசுவுக்கு நல்ல போர்சேவகர்களாகவும் காணப்படுகிறார்கள்.

இயற்கையான இந்த போராடுகிற குணங்கள் தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்படும்போது, பரிசுத்த ஆவியினால் சரியாக வழிநடத்தப்பட்டதினால், இயேசுவின் நாமத்தை இனி போதிக்கக்கூடாது என்று ஆலோசனை சங்கத்தாரால் கட்டளையிடப்பட்டு, நேரடியாக அடிக்கப்பட்டு பயமுறுத்தப்பட்ட பின்னும், பேதுரு மற்றும் அங்கிருந்த மற்றவர்களும், பரலோக அழைப்புக்கும், தேவனுடைய சட்டத்தின் கீழ் தங்களுடைய யூத உரிமைக்கும், சுயாதீனத்தையும் கட்டுப்பாடு விதித்த சட்டத்திற்கு புறம்பான கட்டளைக்கு தைரியமாக எதிர்த்து நின்று - "தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்." (அப் 4 :19,20) அவருடைய அப்போஸ்தலா களாக தேர்வு செய்யப்பட்டவர்களை பற்றி தேவன் நன்கு அறிந்திருந்தார். பலவீனரும், முடிவுகளை எடுக்க தயங்குபவர்களும், தைரியமற்றவர்களும், தேவனுடைய பணியை செய்ய முடியாது என்பதை நாம் தெளிவாக காணலாம். ஆகவே நீதியானதை தைரியமாக நடப்பிப்பவர்களையும், சகோதரர்களுக்கும் தேவனுக்கும் வைத்திருக்கும் விசுவாசத்தினால், இந்த உலகத்தின் நிந்தனைகளை தாங்கி, அதனுடைய ஏளனமான பேச்சுக்களையும், பழித்துரைத்தலுக்கும், உபத்திரவங்களுக்கு எதிர்த்து நிற்கும் அனைவரையும் இந்த யுகம் முழுவதும் நம்முடைய தேவன் தேடி கண்டுபிடித்து, தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கு நாம் வருவது நியாயமானதாகவே இருக்கிறது. இதுவே ஜெயம் கொள்ளுகிறதாகும். மேலும் போராடுகிற பலவீனங்களையும், போராடுகிற பாவங்களையும் மற்றும் நன்மையான நோக்கங்களை நிறைவேற்ற துணைபுரியும் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் எதிராக இருக்கும் அனைத்து காரியங்களுக்கு எதிராக போராடுகிற காரியங்களிலும் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை எந்த அளவுக்கு உணருகிறோமோ அந்த அளவுக்கு அவைகளை வளர்த்தி, சீர்ப்படுத்திக்கொண்டு, போராடுகிற குணத்தை சரியான திசையில் செயல்படுத்தவேண்டும்.

## விசுவாசம் மற்றும் செய்திகளும் அவசியமானது

இப்படிப்பட்ட போராடுகிற குணம் இருந்தால் மட்டுமே போதாது. போராடுகிற இந்த குணத்தை சரியான முறையில் பயன்படுத்த தகுந்த விசுவாசம் தேவைப்படுகிறது. ஆகவே "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" இயேசு சொன்ன வார்தைகளை நினைவில் கொள்ளலாம். தேவனுடைய ஜனத்தை அசையப்பண்ணி, பலப்படுத்தும் வல்லமை தேவனுக்குள் இருக்கும் விசுவாசமே. விசுவாச பிரமாணத்தின் மேல் உள்ள விசுவாசமோ, மனிதர்கள் மேல வைக்கும் விசுவாசமோ, சுயத்தின்மேல் வைத்திருக்கும் விசுவாசமோ அல்ல, மாறாக தேவன் மேலும், அவருடைய மிகுதியானதும் விலையேறபெற்றதுமான வாக்குத்தத்தங்கள் மேல் வைத்திருக்கும் விசுவாசமே. அவ்வண்ணமாக ஒரு நீராவி படகின் சக்கரங்கள், நீரோட்டதை எதிர்த்து போராடி, அதை தள்ளிவிட்டு படகை முன் செலுத்தக்கூடிய சக்கரங்கள், போராடுகிற குணத்தை அடையாளப்படுத்தினால், அந்த இயந்தரத்தின் வழியாக அதை செயல்படுத்தும் நீராவியின் வல்லமை விசுவாசத்தை அடையாளப்படுத்தும். ஆகவே நம்முடைய குணங்களை நல்ல முறையில் செயல்படுத்தும் பின்னனியாக விசுவாசம் இருக்கவேண்டும். நீடித்து போராடும் நல்ல போராட்டங்களுக்கும், தேவனிடத்தில் பரிசுபொருட்களை பெறுவதற்கான நம்பிக்கையை பெறுவதற்கும் இது நம்மை வழிநடத்தும்.

அதேபோல எரிபொருள் மற்றும் நீராவியை உற்பத்திசெய்யும் கொதிக்கலம் தேவனுடைய வார்த்தைகளையும், அவர் நமக்கு அளிக்கும் நன்மைகளையும் அதைப் பெற காரணமான விசுவாசத்தின் வல்லமையை உற்பத்திசெய்யவதையும் அடையாளப்படுத்துகிறது. தெய்வீக வார்த்தைகளின் மிகுதியானதும், மிக விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் நம்முடைய விசுவாசத்திற்கு அஸ்திபாரமாக கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே தேவனுக்கு மகிழ்ச்சி உண்டாக்கும் காரியங்களை செய்யவும், அதை செய்வதற்கான விருப்பத்தையும் தீவிரமாக உண்டுபண்ணும் மேலும், உற்பத்திபண்ணும் எரிபொருளாக விசுவாசம் செயல்படுகிறது. (பிலி 2:13) இந்த கிருபையான வாக்குத்தத்தங்கள் நிராகரிக்கப்படக்கூடாது. இவைகள் தொடர்ந்து பயன்படுத்தப்படவேண்டும். நமக்குள் பலத்தை உற்பத்தி செய்யும் வேலைகள் தொடர்ந்து நடப்பிக்கவேண்டும். அந்த பலத்தை நாம் செயலாற்றவேண்டும். நாம் அழைக்கப்பட்ட மகிமையான நிலையை அடைவதற்கு, இந்த உலகத்தின் போக்குக்கு தக்கதாக நாம் அதை எதிர்த்து முன்னேறவேண்டும்.

எப்போதும் நம்முடைய நினைவில் இருக்கவேண்டிய காரியம் என்னவெனில், நம்முடைய சொந்த ஆவிகளையும், சிந்தைகளையும், முழுமையாக கட்டுப்படுத்தி, தேவனோடு முழுமையாக இசைந்திருக்கசெய்து, கூடுமானவரைக்கும் தேவனோடு இசைந்திருக்கும் தேவனுடைய ஜனங்களோடும் இசைந்திருப்பதே "இறுதியான" நிலை என்று சொல்லப்பட்டாலும், அந்த இறுதி நிலையை அடைவதற்கும் நம்முடைய பாடபகுதியில் குறிப்பிட்டிருக்கும் மிக சிறப்பான வளர்ச்சியை அடைவதற்கு நம்முடைய அப்போஸ்தலர் மனப்பூர்வமாக வேண்டிக்கொண்டதைபோல நாம் சற்றும் தாமதிக்காமல் முயற்சிக்கவேண்டும். இதை ஒரு அளவு கோலாகவும்,

நம்முடைய குறிக்கோளாகவும், சிந்தையாகவும், நமக்கு முன்பாக எப்போதும் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும். அநேக முறைகள் நாம் தவறினாலும் மீண்டும் மீண்டுமாக நாம் சரியான காரியங்களை செய்ய முயற்சிக்கும்போது, ஒவ்வொரு தோல்வியின் விளைவாக நாம் அதிகமாக பலப்படுவோம். ஏனெனில் ஒவ்வொரு தோல்வியும் நம்முடைய குணங்களில் உள்ள பலவீனங்கள் துல்லியமாக சுட்டிக்காட்டப்பட்டு, நம்முடைய வீழ்ச்சியிலிருந்து நம்மை தப்புவிக்கும். நம்முடைய ஒவ்வொரு பலவீனமான குணங்களையும் நாம் கவனமாக குறிப்பெடுத்து, வருங்காலத்தில் அந்த பலவீனங்களை மேற்கொள்வதற்கு தேவையான முயற்சிகளை எடுக்கும்பட்சத்தில், தேவனுடைய கிருபையினாலும், நம்முடைய பிரதான போதகரின் வழிநடத்துதலினாலும், அவருடைய வார்த்தைகளினாலும், எடுத்துக்காட்டுகளினாலும், தெய்வீக நன்மைகளுக்கான வழிநடத்துதலினாலும், நம்முடைய பாடத்தில் சொல்லியபடி, அர்ப்பணிக்கப்பட்ட நிலைக்கும் அதாவது தேவனோடு முழுமையாக இசைந்திருக்கும் ஒரு நிலைக்கும் நாம் வளர்ச்சி அடைவோம். இப்படிப்பட்ட காரியங்களை திரும்பி பார்த்தாலும், தோல்விகளுக்கு பின் சாத்தானின் தந்திரமான வஞ்சகத்திற்கும், மாம்ச பலவீனங்கள் நம்மை அணுகாதபடிக்கு தேவனிடத்தில் அன்பு செலுத்துபவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற அவருடைய வாக்குத்தத்தங்களின் படி நமக்கு ஆசீர்வாதங்களை கொடுக்க அவர் சகலத்தையும் மேற்கொண்டு மிக பெரிய அரணான பாதுகாப்பை அவர் கொடுத்திருப்பதை உணரலாம்.

இறுதியாக, நாம் அனைவரும் அதிகதிகமாக ஒருமைப்பாட்டில் வளர போராடுகிற நம்முடைய இயல்பான குணங்களை கட்டுபடுத்தி, நமக்குள் இருக்கும் சகல விதமான வைராக்கியத்தையும், போராடுகிற குணங்களையும், நம்முடைய தேவனுக்கேற்றபடியும், அவருடைய வார்த்தைகளுக்கேற்றபடியும் ஆவிக்கேற்றபடியும் செயல்பட மெதுவாக முயற்சிக்கவேண்டும். மேலும் தேவனுடைய ஜனங்களுக்கும் நீதிக்காக போரிடுகிற நம்முடைய சக போர் வீரர்களுக்கும் ஏற்றபடி நம்முடைய குணங்களை மாற்றி கொள்ளும் போது "நாம் ஒருவர் மேல் ஒருவர் பட்சமாக இருப்போம்" என்று அப்போஸ்தலர் விவரித்ததுபோல நம்முடைய நிலைமை மாற்றப்படும். நம்முடைய "சகோதரர்கள்" தங்களை மேற்கொள்வதை நாம் காணும் போது அவர்கள் மேல் இரக்கமும் பரிவும் நிச்சயமாகவே உண்டாகும். ஒரு வேளை அவர்களின் மாம்ச பலவீனத்தில் தவறுகள் செய்தால் நாம் சோதிக்கப்படாதபடி நாம் பெற்ற சாந்தத்தின் ஆவியினால் அவர்களை சந்தோஷமாக முந்திய சீருக்கு வழிநடத்தலாம் (கலா 6:1) நம்முடைய இருதயப்பூர்வமாக அவர்களையும் நேசிக்கவேண்டும் - இப்படிப்பட்ட ஒரு அன்பு, இப்படிப்பட்ட ஒரு இரக்கம், இப்படிப்பட்ட கனிவு, அவர்களை எந்த விதத்திலும் வழிநடத்த நமக்கு தேவையான வல்லமையை கொடுக்கும். விசேஷமாக, ஆவிக்குரிய காரியங்களாகிய பாவத்தை ஜெயிக்கவும், கிருபையிலும் அளவிலும் அன்பிலும் வளர்க்க, நமக்குள் அதிகதிகமாக தேவனுடைய ஆவி செயல்படும். ஆனால், எப்படியிருந்தாலும் தற்காலிகமான காரியங்களிலும், வாய்ப்புகள் கிடைக்கும்போது நம்மால் முடிந்த வரைக்கும் நன்மை செய்ய நாடவேண்டும்.

தற்காலிகமான காரியங்களை பொருத்த வரையிலும், ஆவிக்குரிய சகோதரருக்குள் இப்படிப்பட்ட பாசமும், சகோதர அன்பும், இரத்த சம்மந்தமான சகோதரர்களுக்குள் இருக்கும் பந்தத்தை விட குறைவானது அல்லது. உண்மையில், சகோதர சிநேகத்திற்குள் இருக்கும் ஆவிக்குரிய ஐக்கியம் அதிகரிக்கும்போது மேன்மையும் உயர்வும் அதிகரிக்கும். மாம்ச சகோதரர்களுக்குண்டான தேவைகளுக்கு கொடுக்கவேண்டிய அன்பையும், பாசத்தையும் எந்த விதத்திலும் குறைக்காமல் இருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் நம்முடைய ஆவிக்குரிய சகோதரர்களுக்கு இதைவிட அதிகமாக கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. இப்படியாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரர்களுக்கு செய்யும் சகல காரியங்களும் தற்காலிகமான காரியங்களையும், பூமிக்குரிய சகோதரர்களுக்கு செய்வதை காட்டிலும் இன்னும் அதிகமாகவே செய்யவேண்டும்." ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." என்ற இந்த ஒரு அளவு கோலை அப்போஸ்தலர் நியமித்திருக்கிறார்.

நம்முடைய சொந்த வீட்டு காரியத்தை குறித்தும், நம்முடைய விசேஷித்த பொறுப்புகளை குறித்தும் நாம் கவலையற்றவர்களாக இருக்கவேண்டும் என்று பொருள் அல்ல. ஆனால் இவைகளை காட்டிலும் நம்முடைய ஆவிக்குரிய சகோதரர்களுக்கு நம்முடைய இருதயத்திலும், பரிவிலும், அன்பிலும் முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று பொருள்படுகிறது. ஆவிக்குரிய தேவைகள் மற்றும் தற்காலிகமான நன்மைகளாகிய இரண்டையும் அவர்களின் தேவைக்கு ஏற்ப அவர்களோடு பகிர்ந்துகொள்ளுவதே இதன் முழுவிளக்கமாக இருக்கிறது. தேவனோடு இசைந்திருப்பதற்கான நிலையை அடைந்தவர்கள். அவருடைய கிருபையான திட்டத்தில் மற்றவர்கள் மேலும் இரக்கமும், பரிவும், அவர்களின் கடுமையான சோதனைகளில் ஆறுதல் அளிக்கும் அளவுக்கு அனுபவங்களை பெற்ற நிலையில் இருப்பார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை மற்றவர்களிடம் "இணக்கமுள்ளவர்களாகவும்", கனிவோடும், இரக்கத்தோடும் "பண்போடும்" அணுக செய்யும்.

ஒரே வார்த்தையில் சொல்லபோனால், வேதவசனங்களில் அளவுகோலை பொருத்தவரையில், தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சபை இந்த உலகத்தின் சகல ஜனங்களைவிட முற்றிலுமாக மேருகேற்றப்பட்டவர்களாகவும், முழுமையாக சுத்திகரிக்கப்பட்டவர்களாகவும், சிறந்த பண்புள்ளவர்களாகவும், பெருந்தன்மையுள்ளவர்களாகவும்,

மிகுந்த பாசமுள்ளவர்களுமாக இருக்கவேண்டும். இவையனைத்தும் பூரணமான நிலையில் இருக்கவேண்டும். பொதுவான இந்த உலகத்தின் பார்வைக்கு மட்டுமே உண்டான அன்பை போலவோ, மற்ற அனைத்தும் மற்றவர்கள் காணக்கூடிய அளவுக்கு இருப்பதை பற்றி இது சொல்லவில்லை. ஆனால் இருதயத்திலிருந்து வரும் நல்ல பண்புகளும், குணங்களும், அதாவது தேவனுடைய ஆவியையும், சத்தியத்தின் ஆவியையும் அன்பின் ஆவியையும், நீதியின் ஆவியையும் மனமார உணர்ந்துபின் இருதயத்திலிருந்து வரும் குணங்களையே தேவன் எதிர்ப்பார்க்கிறார். நாம் முற்றிலுமாக நீதியை நடப்பிக்க கற்றுகொள்வதே மிக பெரிய காரியமாக இருக்கிறது. மேலும் நம்முடைய எல்லா காரியங்களிலும், மற்றவர்கள் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கும் செயல்களை நாம் முந்தி செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய சுயாதீனத்தில் நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சியை மற்றவர்களும் அனுபவிக்க வாய்ப்புகொடுக்கவேண்டும். உண்மையில், தேவனுடைய பிரமாணங்கள் மிக அற்புதமானவைகள் மேலும், உண்மையாக தேவனால் போதிக்கப்பட்ட தெய்வீக சித்தத்திற்கு இசைவாக பயிற்சிவிக்கப்படும் ஜனங்கள், விசேஷித்தவர்களும், நல்ல கிரியைகள் செய்வதற்கு வைராக்கியமுள்ளவர்களுமாக இருப்பார்கள்.

போராடுகிற குணமுள்ள ஜனங்கள் (மாம்சத்தில்) எப்போதும் பழிவாங்கும் மனநிலையில் இருப்பார்கள். ஆனால் தேவனால் சுயக்கட்டுபாட்டையும், சாந்தத்தையும் சகோதரா அன்பையும்,இரக்கத்தையும், பரிவையும் கற்றுக்கொண்டவர்களாக, நம்முடைய பாடப்பகுதியில் சொல்லப்பட்ட வேண்டுகோள்களை பூர்த்தி செய்வதற்கு ஆயத்தமாக இருப்பவர்கள் - பழிக்கு பழியையும், தீமைக்கு தீமையையும் பதில் அளிக்கமாட்டார்கள். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும்" என்ற ஆண்டவரின் மாதிரியை அவர்கள் பின்பற்றுபவர்கள். அவருடைய எதிராளிகள் அவரை குற்றவாளியாக கண்டுபிடித்ததினாலே அல்ல, அவருடைய எதிராளிகள் பூரணராக இருந்தபடியினால், அவர்களை குற்றம் சாட்டுவதற்கு ஏதும் இல்லாததினாலும் நம்முடைய ஆண்டவர் மௌனமாக இருக்கவில்லை. மாறாக, தன்னையே தெய்வீக சித்தத்தின் கீழ் முழுமையாக ஒப்புகொடுத்ததினாலே, அனைவரின் திட்டுகளையும், குற்றசாட்டுகளையும், ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் நீடிய பொறுமையுடனும், மனத்தாழ்மையோடும் சகிக்கமுடிந்தது. மேலும் இதற்காகவே அவர் அழைப்பை பெற்றார் என்பதை நினைவில் கொண்டவராக நீடித்த பொறுமையோடே பாடங்களை கற்றுக்கொண்டு, தன்னை தானே விசுவாசமுள்ளவராக நிரூபித்து, உண்மையான குணங்களின் முழுமை அடைந்து, ஜனங்களுக்காகவும், அவர்களின் பார்வையற்ற நிலையையும், அறியாமையையும் உணர்ந்து அவர்கள் மேல் வைத்த அன்பை வெளிப்படுத்தினார்.

**"சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்." - மத்தேயு 5:9**

உண்மையுள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நன்மைகளையும், அழகுள்ள காரியங்களை மட்டுமே சிந்திப்பவர் அதை குறித்தே ஒருவரோடு ஒருவர் பேசுவர். நம்முடைய இருதயங்களும், உதடுகளும் இவைகளையே தொடர்ந்து பேசுவதற்காக முக்கியமாக நம்முடைய இருதயம் நல்ல விசேஷத்தினால் நிரப்பப்படவேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு விசேஷித்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது, "அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக என்னப்படுவார்கள்" என்பதே அவர்களின் முயற்சிக்கு ஏற்ற பலனாக இருக்கிறது. தேவனுடைய ஆவி அவர்களிடம் தங்கும், அவருடைய அவர்களின் இருதயத்தில் பதிந்திருக்கும் நேச குமாரனின் சாயல் கண்டுபிடிக்கப்படும்..... மேலும், குறிப்பாக இது நமக்காக கொடுக்கப்பட்ட ஒரு சோதனையாக நாம் உணரலாம். ஓரளவுக்கு இது மற்றவர்களுக்கும் பொருந்தும். தேவனுடைய புத்திரர்களாக அடையும் வளர்ச்சிக்கு ஆதாரமாக - நம்முடைய சமாதானத்தின் மனநிலை மற்றும் இப்படிப்பட்ட வழி சமாதானத்திற்கு வழிநடத்தும் என்பதை அறிந்து மிக ஜாக்கிரதையாக பின்பற்றுவதேயாகும். **Reprints, p.2588**

## இயைபியக்கததை ஊக்கும் பொருள்

அகராதியை பொருத்தவரைக்கும் "இயைபியக்கததை ஊக்கும் பொருள் "என்பதற்கு " தான் மாறாமலேயே மற்ற பொருள்களில் வேதியியல் மாற்றம் உண்டாக்கத் துணை செய்தல்" என்ற பொருள்.

தேவனுடைய சில அன்பான ஜனங்கள் இப்படிப்பட்ட "இயைபியக்கததை ஊக்கும் பொருளை" போலிருக்கிறார்கள். அவர்களின் பிரசன்னமே மற்றவர்களின் மிக சிறப்பான தகுதிகளை வெளிப்படுத்துகிறது. மேலும், ஒரு பிரச்சனையில் அகப்படும் இருவரை, தாங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல், சமாதானமாக அவர்களை ஒப்புரவாக்கிவிடுவார்கள். உண்மையில், இந்த ஒரு இயல் நிகழ்ச்சி, ஆவிக்குரிய சட்டத்தை பிரதிப்பலிக்கவேண்டும் என்று தேவன் அதிகாரப்பூர்வமாக உத்தரவிடுகிறார் !

**- Anton C. Frey, Deep Waters and a Bubbling Brook, p.93**

## தீர்க்கதரிசனத்தில் இன்று . . .

# மெக்ஸிகோவில் நெருக்கடி

யோவேல் 2:11➔ "கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார், அவருடைய பாளையம் மகா பெரியது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது, கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும், அதைச் சகிக்கிறவன் யார் ? "

2006 ஆம் ஆண்டின் இறுதியில் மெக்ஸிகோவின் ஜனாதிபதியாக பெலிப் கால்டிரோன் (FELIPE CALDERON) பதவியேற்றபின் கலவரத்தை ஏற்படுத்தும் குறிப்பிட்ட ஓர் வகுப்பாருக்கு எதிராக "போர்" என்று அறிவித்தார். அதன் விளைவாக மெக்ஸிகோ நாடெங்கும் இரத்தஞ்சிந்துதல் தொடர்ந்துகொண்டிருந்ததினி மித்தம் 45,000 பேர்கொண்ட படையை அவர்களுக்கு எதிராக ஏற்படுத்தினார் சட்ட ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகவும் அறிவித்தார். அரசினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கபடவில்லை யென்றாலும் இந்த கலவரத்தினால் மரித்தவர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று வருடங்களாக 16,000முதல் 19,000 மாக இருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. மெக்ஸிகோ நாட்டில் 1.3 மில்லியன் மக்கள் வசிக்கும் சியுடேட் ஜூரேஸ் (CIUDAD JUAREZ) என்ற நகரம் (இது TEXAS மற்றும் ELPASO நகருக்கு எதிராக அமைந்துள்ளது.) தான் உலகிலேயே கலவரங்கள் அதிகமுள்ள நகரம் என்று சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அந்த நகரில் 10,000 படைவீரர்கள் மற்றும் காவலர்கள் இருந்தபோதிலும் ஒவ்வொரு நாளும் எட்டு முதல் பத்து கொலைகாரர்கள் உருவெடுக்கின்றனர். சமீபத்தில் அமெரிக்க நாட்டு பெண் பிரதிநிதியை அவர் கர்ப்பமாய் இருந்தபோதிலும் அவரையும், அவரது கணவரையும் பட்ட பகலில் சுட்டு கொன்றனர்.

மெக்ஸிகோ மற்றும் அமெரிக்கா எலலை பகுதி அதிக ஆபத்து நிறைந்த பகுதியாகும். டேக்ஸாஸ் நகரின் பாதுகாப்பு அமைப்பு மாணவர்கள் தங்கள் கோடை கால விடுமுறையை அங்கு கழிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டனர். அதிகாரிகள் அங்கு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் அறவே குறைந்து விட்டதாக கூறுகின்றனர். சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதியான பாரக் ஒபமா சுமார் 400 மில்லியன் டாலர் மெக்ஸிகோ நாட்டின் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நடவடிக்கையை செயல்படுத்த நிதி வழங்கினார்.

**மெக்ஸிகோவின் இக்கட்டான நிலை**

ஜீன் 2009 ஆம் ஆண்டில் மெக்ஸிகோவின் பொருளாதார நிலை 10 சதவீதம் குறைந்தது. மெக்ஸிகோ இந்த மந்தமான பொருளாதார நிலையிலும் கூட தங்கள் வேலையை டெக்ஸாஸ் மற்றும் நியூ மெக்ஸிகோ மற்றும் அரிசோன் எல்லை பகுதியில் தேடி கொண்டனர். இந்த ஒரு வாய்ப்பும் போதை பொருள் கடந்தப்படுவதினால் பறிபோனது. ஜனங்கள் தங்கள் எல்லைகளை கடந்து சென்றவர்கள் ஓர் மந்தமான பொருளாதார நிலையையே எதிர்கொள்ள நேரிடுகின்றது. பெரும்பாலான குடிமகன்கள் குற்றத்திற்கு எதிரான போரை ஆதரித்தாலும், இதில் எழும்பும் சந்தேகம் என்னவென்றால் அரசியல் மற்றும் சமூக ஆட்சி முறைகள் இதில் வெற்றி பெறுமா என்பதே என்கிற சந்தேகம் இருக்கின்றது.

மெக்ஸிகோ அதிகாரிகள் போதை பொருள் கடத்துபவர்களுக்கு எதிரான போராட்டம் இன்னும் ஓர் தலைமுறைக்கு நீடிக்கும் என்று கருதுகின்றனர். அரசியல்வாதிகள் போதை பொருள் வியாபாரத்தை அதனால் ஏற்படும் கஷ்டங்களை தவிர்க்க அதை சட்டரீதியாக அங்கிகரிக்கலாம் என்று கூறுகின்றனர். US Joint Forces என்கின்ற அமெரிக்க அமைப்பு மெக்ஸிகோவை, பாக்ஸ்தானுடன் ஒப்பிட்டு அது ஓர் தோல்வியுற்ற நாடாக அறிவித்திருக்கின்றது. அந்நிய செலவானி வெகுவாக குறைந்து வருவதினால் கடந்த காலங்களில் அந்நாடு சந்தித்து வரும் பொருளாதார மந்த நிலையிலிருந்து மீள்வதும் கடினமாகவே காணப்படுகின்றது.

காவலர்கள் மற்றும் இராணுவ வீரர்களால் பெரும்பாலான இடங்களில் சமாதானம் திரும்பாமல் அவர்களாலே பிரச்சனைகள் உருவெடுத்து வருகின்றன. அங்கேயிருந்து சில பத்திரிக்கையாளர்கள் கொலைகளை செய்திகளில் வெளியிடாமலிருப்பதற்கு மாதமாதம் சன்மானம் வழங்க முன்வருவதாகவும், அதை பெற்றுக்கொள்ள மறுத்தால் அவர்கள் கடத்தப்பட்டு கொடுமைப்படுத்தபடுவதாகவும் கூறுகின்றனர். மெக்ஸிகோ எல்லையில் உள்ள சுங்கவரி சங்கம் சமீபத்தில் போதைபொருள் பரிவத்தனைக்காக சுமார் 200,000 டாலர் லஞ்சம் பெற்றதற்காக கைது செய்யப்பட்டனர். இந்த போதைபொருள் அமைப்புகள் அநேக இடங்களில் காவலர்களை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கின்றன.

அவர்கள் தங்களுக்கு இஷ்டமான வரியை வசூலித்தும் தங்கள் சொந்த நடவடிக்கைகளை பயனின்றி செயல்படுத்தி வருகின்றனர். மெக்ஸிகன் அரசு தற்போது சுமார் 233 பகுதிகளில் சட்ட ஒழுங்கு சீர்குலையும் குற்றங்கள் கட்டுபாடின்றி நடைபெறுவதாக கண்டுபடித்துள்ளது.

**தேவனுடைய பலத்த சேனை**

இயேசு நம்முடைய நாட்களைக் குறித்து குறிப்பிடுகையில் ... மத்தேயு 10:26 "அவாகளுக்குப் பயப்படாதிருங்கள், வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை, அறியப்படாத இரகசியமும் இல்லை."

உலகத்தின் தீமைகள் குறித்தும் அதன் விளைவுகளைக் குறித்தும் 24 மணிநேர தொலைக்காட்சி செய்திகளும் தொடர்பு சாதனங்களும், இந்த சமூகம் சந்திக்க வேண்டிய சவால்களையும், நெருக்கடிகளையும் படம் பிடித்து காட்டி வருகின்றன. அரசியல் ஊழல், தொல்வியுற்ற பொருளாதார கொள்கைகள், கிறிஸ்துவ பாதிரியார்களின் தவறான நடக்கை மற்றும் சமூக கொந்தளிப்பு இவற்றை எல்லோரும் பார்த்து புரிந்து கொள்ளும் வகையில் ஊழல்கள் பெருகிவிட்டன. நம்முடைய நாட்களில் வேலையாட்களுக்கும் முதலாளிக்கும், பெயர்சபை மக்களுக்கும் அதன் தலைமைக்கும், எழும் முரண்பாடுகளையும் அதனால் சாதாரண குடிமகனுடைய நம்பிக்கை கூட சீர்குலைந்து போவதை கண்கூடாக காண்கிறோ். அரசியல் மற்றும் சமூக சீர்ததிருத்தம் கொண்டுவரும் முயற்சி கூட வார்த்தை முரண்பாடினாலும் சொல் போரினாலும் இறுதியில் பழிவாங்கும் ஓர் சூழ்நிலை தான் உருவாகி வருகின்றது. இன்றைய உலகில் அநேகருக்கு எதிர்காலம் கருப்பாக காட்சி தருகின்றது.

வேதாகமம் மாத்திரம் தான் இந்த நிலையற்ற நிகழ்காலத்திற்கு ஓர் உறுதியான நிலையான உண்மையான எதிர்காலம் இருக்கின்றது என்பதை உறுதிபடுத்துகின்றது.

யோவேல் 2:1 ➔ "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின சத்தமிடுங்கள், தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள், ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது."

(யோவேல் 2:2-11)

யோவேல் தீர்க்கதரிசி கூறுகையில் கீழ்படிதல் இல்லாத ஒரு பிரிவினர் பற்றி கூறமுற்படாமல் அதற்கு மேலாக அதிக கீழ்படிதலுள்ள ஒரு வகுப்பாரை குறித்து கூறுகின்றார்.

மெக்ஸிகோ ஓர் கட்டுபாடற்ற ஒழுங்கின்மையான ஆட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு, இந்த விதை நடப்பட்டு, தண்ணீர் ஊற்றப்படுகின்றது ஆனால் இதன் விளைவுகள் எவ்வாறு உருவாகின்றது என்பதை யாராலும் கண்டுணர முடியாது. பாங்காக் நகரை தீவிரவாதிகள் தாக்கிய போது தாய்லாந்து நாடு செய்வதறியாது நின்றது. இன்று உலகமயமாக்கப்பட்டு தொடர்பு துறைகள் அதிகம் பெருகினதினால் வேறுபல நாடுகள் சீக்கிரம் அதை பார்த்து கற்றுக்கொள்கின்றனர். இருந்த போதிலும் வேதம் தேவனுயைட சபை எடுத்துக்கொள்ளப்படும் வரையில் உலகளாவிய ஆட்சி முறையற்று (கட்டுபாடின்றி)காணப்பட மாட்டாது என்று கூறுகின்றது.

வெளி 7:1-3

ரோமர் 12:19 ➔ "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்."

உபா 32:35➔ "பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது. ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும் அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது, அவர்களக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்து வரும்."

கர்த்தர் இத்தகும் ஓர் சூழலை தம் காரியத்தை செய்விக்க பயன்படுத்துவார். இந்த அதிருபதியான ஜனங்களை கொண்டு தம்முடைய நீதியின் இராஜ்ஜியததை ஸ்தாபிப்பார். "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும் அவர்கள் தப்பிப்போவதில்லை. " - 1தெச 5:3

இவ்வசனத்தில் இவ்வுலகம் அழிக்கப்படுதல் ஒரு தொடர் நிகழ்வாக (நெருக்கடி) காணப்படும் என்று கூறுகிறது. ஆனால் "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" - (மத் 24:22) என்றும் சொல்லப்படுகிறது. இந்த நிகழவுகளின் இறுதி நிலை சிறிய காலமாக காணப்படும் என்று கூறுகிறது. பின் "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." (11பேது 3:13) மற்றும் "இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன், முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை மனதிலே தோன்றுவதுமில்லை" - (ஏசா 65:17)

இவ்வசனங்கள் இதன்பிறகு நீதியின் சூரியன் பிரகாசிக்கும், பின் புதிய வானமும், புதிய பூமியும உருவாகும், அதன் நீதி வாசமாயிருக்கும் எத்தகும் மகிழ்ச்சியின நாளாக இருக்கும் !